Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 196 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 27, திங்கள் 10.06.2013

இந்தியன்



பக். 06
தமிழகமெங்கும்
கறுப்பு ஜுலை

உலகம்



பக். 07
சீனாவின் வளர்ச்சியை
வரவேற்கின்றது அமெ.

விளையாட்டு



பக். 23
பட்டம் வென்றார்
செரீனா

# மாகாண முறையை எதிர்த்து வழக்கு

## அடுத்தவாரம் தாக்கல்செய்ய பேரினவாதக் கட்சிகள் முடிவு

“13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று அண்மைக்காலமாக கடும் போக்குடைய சிங்களக் கட்சிகள் கூறிவருகின்றன. இதன் ஓர் அங்கமாகவே மாகாண சபை முறைக்கு எதிராக வழக்குத் தொடர அவை முடிவெடுத்துள்ளன.

கொழும்பு, ஜூன் 10
அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறை சட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றுகோரி உயர்நீதிமன்றில் அடுத்த வாரம் வழக்குத் தாக்கல் செய்ய கடும் போக்குடைய சிங்கள தேசிய அமைப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளன. பல சிங்கள அமைப்புகள் கூட்டாக இணைந்து உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யவுள்ள வழக்கில்,

“1987 - 88 காலப் பகுதியில் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய மாகாண சபை முறை உருவாக்கப்பட்டது. இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்தவேளையில், அதை ஒன்பது பேரடங்கிய நீதியரசர் குழாமொன்று ஆராய்ந்தது. குறித்த வழக்கு தொடர்பிலான தீர்ப்பு தனித்தனியாகவே வழங்கப்பட்டது. ஐவர் அதற்கு சார்பாகவும் நால்வர் எதிராகவும் தீர்ப்பை வழங்கிருந்தனர். எனினும், இது விடயத்தில் உயர்நீதிமன்றின் ஒட்டுமொத்த வியாக்கியானம் என்னவென்பது இன்னும் தெரியாமல் உள்ளது. அதேவேளை, ஜே. ஆர். ஜெயவர்த்தன அழுத்தங்களைப் பிரயோகித்து அன்று தனக்கிருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பயன்படுத்தியே இதை கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றியிருந்தார்.

''இது விடயத்தில் இறைமைக்கு உரித்தான மக்களின் அபிப்பிராயம் கேட்டறியப்படவில்லை. எனவே, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மாகாண சபை முறைமையில் மாற்றத்தை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் உத்தரவு வழங்க வேண்டும்'' என்று கோரப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. (ங-சி)

## ஏ-9 திறக்க கிளிநொச்சி வருகிறார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், ஜூன் 10
எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி புனரமைப்பு நிறைவடைந்து விட்டது. எனவே ஏ-9 வீதியை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. இதனை ஒட்டியே ஜனாதிபதி கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்போது கிளிநொச்சியில் மேலும் சில இடங்களையும் அவர் சென்று பார்வையிட உள்ளார் எனவும் தெரியவருகிறது. (ங-4)

## வானிலை முன்னெச்சரிக்கை விடுக்கப்படவில்லை

கொழும்பு, ஜூன் 10
நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை தொடர்பில் மீனவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்படவில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் மீது மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்திப் பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதன்போது பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த மீனவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்கப்படும் என்றும் மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ங-சி)

# 13 ஐ ஒழிக்க இந்தியா அனுமதிக்கக் கூடாது

## மன்மோகனுக்கு கருணாநிதி கடிதம்



கொழும்பு, ஜூன் 10
ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் மூலம் உருவான 13 ஆவது திருத்தத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டும். இந்த இக்கட்டான நேரத்தில் இந்தியா மௌனம் சாதிக்கக் கூடாது.

-இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, தி.மு.க. தலைவர் கருணாநிதி அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க சிங்கள கடும்போக்கு அமைப்பான ஜாதிக ஹெல உறுமய என்ற அமைப்பு தீவிர முயற்சியில் ஈடுபட்டு வரு

தொடர்ச்சி: பக்கம் 24

## சிறுமியைக் கடத்திச் சென்று வல்லையில் வீசிய கும்பல்

### பட்டப்பகலில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ். நகர பாடசாலை மாணவியான 15 வயதுச் சிறுமி ஒருவரை நல்லூரடியில் வைத்து ஓட்டோவில் கடத்திய கும்பல், நகைகளைக் கொள்ளையடித்து விட்டு, அவரை வல்லை வெளியில் வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தப் பரபரப்பான சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது. நல்லூர் பண்டாரிக்குளத்தடியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் சிவகௌரி (வயது-15) என்ற மாணவியே இவ்வாறு கடத்தப்பட்டு காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மாணவி தெரிவித்ததாவது:

எனது வீட்டுக்கு அருகிலுள்ள கடை ஒன்றில் கற்பூரம் வாங்குவதற்கு சென்றேன். அப்போது சுற்றிவர மறைப்புத் திரையிடப்பட்ட ஓட்டோவில் வந்த மூவர் எனது தலைமயிரைப் பிடித்து இழுத்து ஓட்டோவினுள் வலுக்கட்டாயமாக ஏற்றினர். பின்னர் எனது பஞ்சாபி சால்வையால் கைகளைக் கட்டினர். நான் பயத்தில் கூக்குரலிடாமல் இருப்பதற்காக எனது வாயையும் இறுகப்

தொடர்ச்சி: பக்கம் 24

# சீரற்ற காலநிலை காவு கொண்டது 24 பேரை

## 22 பேரைக் காணவில்லை. மீட்புப் பணிகள் தீவிரம்



கொழும்பு, ஜூன் 10
நாட்டில் தொடர்ந்து நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று மாலை வரை 24 மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 22 பேர் காணாமற்போயுள்ளனர்.

உயிரிழந்த மற்றும் காணாமற்போன மீனவர்கள் களுத்துறை, காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித் துள்ளது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை இரவு மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற 37 படகுகளும் காணாமற்போயுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போன மீனவர்களைத் தேடும் பணி இரண்டாவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமையும் தீவிரமாக இடம்பெற்றது.

இந்த நடவடிக்கையில் கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலிருந்து காலி வரையான கரையோரப் பகுதிகளில் விமானப்படையின் விசேட விமானம் மற்றும் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சீரற்ற காலநிலை இன்னும் சில நாள்களுக்குத் தொடரும் என்பதால் தென்பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்று பேரிடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ங-சி)

## நயினை நாகபூஷணி அம்மன் பெருந்திருவிழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
பிரசித்தி பெற்ற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

முன்னதாக அதிகாலை 4 மணிக்கு விசேட பூசைகள் அபிஷேகம், வசந்த மண்டபப் பூசைகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து பிரதம குரு சிவஸ்ரீ பாலகுமாரக் குருக்கள் கொடியேற்றி வைத்தார்.

கொடியேற்றத் திருவிழாவில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். (ஜ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆசிரியர், சிற்றூழியர்களாக 779 பேருக்கு நிரந்தர நியமனம்

## வவுனியாவில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது



வவுனியா, ஜூன் 10
வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 779 பேருக்கு நேற்று முன்தினம் அரச சேவையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 75 பட்டதாரிகளும் ஆங்கிலம், கணிதம், தொழில்நுட்பம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் நியமனமும், 704 பேருக்கு அரச திணைக்களங்களில் சிற்றூழியருக்கான நியமனங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் நிர்மல கோத்தபாய, வடமாகாண ஆளுநர், வடமாகாணப் பிரதம செயலாளர், வடமாகாணக் கல்வி பண் பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், வவுனியா மாவட்ட அரச அதிபர், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் குறித்த மாவட்டங்களின் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு நிரப்பப்படுவர் என்றும், இதே போன்ற அரச திணைக்களங்களில் காணப்படும் சிற்றூழியர் வெற்றிடங்களும் நிரப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-402)

## துணைவேந்தர் துரைராஜாவின் 19 ஆம் வருட நினைவு நிகழ்வு

வடமராட்சி, ஜூன் 10
யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜாவின் 19 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி துரைராஜா நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் ச.தில்லையம்பலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'நீர்வளம் காத்து நில வளம் பெருக்கி உற்பத்தித் திறனைக் காட்டி உணவில் தன்னிறைவு காண்போம்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ்.எஸ்.சிவகுமார் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

நினைவுப் பரிசில்களை 2012 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரத்தில் கணிதத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பாலகோபாலன் கபிலன், 2012 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரத்தில் கணித்துறையில் பாட சாலை மட்டத்தில் முதலாம் இடத் தைப் பெற்ற மாணவன் திருவா தவூரர் கோபிராஜ் ஆகியோர் பெற்றுக் கொள்வர்.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. (வ-8)

## இன்று பதவியேற்கும் சமுர்த்தி அலுவலர்கள்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் பதினைந்திலும் 321 சமுர்த்தி அலுவலர்கள் இன்று திங்கட்கிழமை தமது பதவிகளை பொறுப் பேற்கவுள்ளனர்.

கடந்த வாரம் அவர்களுக்கான பயிற்சிகள் யாழ்.மாவட்ட செய லகம் சண்டிலிப்பாய், கோப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச செயல கங்களில் இடம்பெற்று நேற்று முன்தினம் சனிக்கிழ மையுடன் நிறைவு பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி அலுவலர்கள் 321 பேரும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். (வ-86)

## நவக்கிரி மூலிகை கண்காட்சியை பார்வையிட விசேட பஸ் சேவை



"சித்த மருத்துவ மாநாடு, கண் காட்சி நடை பெறும் மூன்று தினங்களும் குறிப்பிட்ட நேர ஒழுங்கின் பிர காரம் பஸ் சேவை கள் நடைபெறும்.

அச்சுவேலி, ஜூன் 10
புத்தூர்-நவக்கிரி அரச மூலிகை தோட்ட வளாகத்தில் இன்று திங்கள் முதல் மூன்று தினங்களுக்கு நடைபெறும்.

சித்த மருத்துவ மாநாடு, மூலிகை கண்காட்சியை முன்னிட்டு யாழ்.குடாநாட்டின் பிரதான நகரங்களில் இருந்து நிலாவரை வரையில் விசேட பஸ் சேவையை நடத்துவதற்கு வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ்.நகரில் இருந்தும், பருத்தித்துறையில் இருந்தும் மற்றும் சுன்னாகம், சாவகச்சேரி, சங்கானை, அராலி, வட்டுக்கோட்டையில் இருந்தும் பஸ்கள் நிலாவரைக்கு வந்து அங்கிருந்து திரும்பவும் அதே இடங்களுக்குச் செல்லவுள்ளன.

யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து பஸ்கள் காலை 8 மணி, 8.30 மணி, 10 மணி, 12 மணி, ஒரு மணி, 2.30 மணி, 4 மணி, 5.30 மணிக்குப் புறப்பட்டு புத்தூர் நிலாவரையை நோக்கி 986ஆம் இலக்க பாதையில் செல்லும்.

நிலாவரையில் இருந்து காலை 6.45 மணி, 9 மணி, 10.30 மணி, 11 மணி, ஒரு மணி, 2 மணி, 3.30 மணி, 5.30 மணி, 6.30 மணிக்கு யாழ்.நகர் நோக்கி 986ஆம் இலக்க பாதையில் பஸ் செல்லும்.

சாவகச்சேரியில் இருந்து காலை 7.40 மணி, 11 மணி, 2.30 மணி, 5.30 மணிக்கு புறப்படும் பஸ் நிலாவரையை அடைந்து அங்கிருந்து சாவகச்சேரிக்கு திரும்பிச் செல்லும்.

பருத்தித்துறையில் இருந்து புறப்படும் பஸ்கள் நிலாவரை ஊடாக யாழ்ப்பாணம் செல்லும். யாழ்ப்பாணத்தில் இருந்து நிலாவரை ஊடாக பருத்தித்துறைக்குச் செல்லும்.

சுன்னாகத்தில் இருந்து காலை 6.30 மணி பிற்பகல் ஒரு மணி ஆகிய நேரங்களில் புறப்படும் பஸ் நிலாவரைக்கு வந்து நிலா வரையில் இருந்து சுன்னாகத் துக்குத் திரும்பிச் செல்லும்.

சங்கானையில் இருந்து காலை 9.15 மணிக்கு நிலாவரை புறப்படும் பஸ் நிலாவரையில் இருந்து சங்கானை நோக்கிச் செல்லும். வட்டுக்கோட்டையில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்கும் அராலியில் இருந்து காலை 9.20 மணிக்கும் புறப்படும் பஸ்கள் நிலாவரைக்குச் சென்று திரும்பும்.

சித்த மருத்துவ மாநாடு, கண் காட்சி நடைபெறும் மூன்று தினங்களும் குறிப்பிட்ட நேர ஒழுங்கின் பிரகாரம் பஸ் சேவைகள் நடைபெறும்.

பொதுமக்கள் மற்றும் பாட சாலை மாணவர்கள் இயல்பு நிலையில் பயணம் செய்து கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெறும் வகையில் விசேட பஸ் சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண சுதேச வைத்திய மாகாணப் பணிப்பாளர் திருமதி சியாமா துரைரத்தினம் அறிவித்துள்ளார். (ஒ-11)

## பதின்ம வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் நேற்றுமுன்தினம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இதனுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் குறித்த சிறுமியின் தந்தையை தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரம்ப விசாரணைகளின் பின்னர் நீதிவானின் உத்தரவுக்கமைய சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

## கிறிஸ்மஸ்தீவு படகு விபத்து: இதுவரை 13 சடலங்கள் மீட்பு

### தேடும் பணி தொடர்கிறது

ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகே மூழ்கிய படகில் இருந்த அகதிகளில் 13 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன என ஆஸ்திரேலிய அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இந்த அகதிகள் படகு கடலில் மூழ்கியது. அதற்கு முன்னதாக ஆஸ்திரேலிய கண்காணிப்பு விமானம் ஒன்று இந்தப் படகை அவதானித்துள்ளது. படகில் மேற்தளத்தில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட சுமார் 55 பேர் வரை இருப்பதை அவதானித்துள்ளது.

பின்னர், குறித்த படகு காணாமற்போயுள்ளது.

படகு மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஆஸ்திரேலிய அதிகாரிகள் தேடுதல் நடத்திய போது கடந்த சனிக்கிழமை பிற்பகல் 9 சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் 4 பேரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காணாமற்போன ஏனைய அகதிகளைத் தேடும்பணி தொடர்கிறது.

எனினும், கடலில் மிதக்கும் 13 சடலங்கள் இன்னமும் மீட்கப்படவில்லை என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ங-ஐ)

## சைவப்பிரகாச வித்திக்கு புதிய சரஸ்வதி சிலை

வரணி, ஜூன் 10
வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை வளாகத்தில் சரஸ்வதி சிலை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

5000 ஊட்டப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்படி பாடசாலையில் 68 மீற்றர் நீளமான புதிய மதில் சுவர் ஒன்று அமைக்கப்பட்டதுடன் கிணறு, மலசலகூடம் என்பனவும் புனரமைக்கப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வு வெள்ளியன்று பாடசாலை அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே சரஸ்வதி சிலை யும் திறந்து வைக்கப்பட்டது. (வ-122)

## மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாளின் உண்டியல் உடைக்கப்பட்டு திருட்டு

"ஆலய முன்றலில் பாதுகாப்பு மிக்க இரும்பிலான உண்டியல் பல வந்தமாக உடைக்கப்பட்டு அதனுள்ளிருந்த பணம் திருடப் பட்டுள்ளது.



தென்மராட்சி, ஜூன் 10
பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய உண்டியல்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளன.

ஆலய முன்றலில் பாதுகாப்பு மிக்க இரும்பிலான உண்டியல் பலவந்தமாக உடைக்கப்பட்டு அதனுள்ளிருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

ஆலய வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை உடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது கைகூடாததால் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக நேற்று ஞாயிறு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-9-4)

### உயிருக்குப் போராடிய பெண்ணை

## அம்போ எனக் கைவிட்ட அம்பன் வைத்தியசாலை

### அம்புலன்ஸும் இல்லை மருத்துவரும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 10
திருமண நாள் நிச்சயிக்கப்பட்ட நிலையில் பெண் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். எனினும் அவர் காப்பாற்றப்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நாகர் கோயில் பகுதியைச் சேர்ந்த பெண்ணே இந்த நிலைக்கு ஆளாகினார்.

தற்கொலைக்கு முயன்ற வரை காப்பாற்றிய உறவினர்கள் உடனடியாக அவரை அவசரமாக நிலையில் நேற்று முற்பகல் அம்பன் வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அங்கு வைத்தியரோ, அம்புலன்ஸ் வண்டியோ இருக்கவில்லை. அங்கு நின்றிருந்தவர்களும் எதுவும் செய்யமுடியாது என்று விரித்து விட்டனர். இதனால் கடும் சிரமத்தின் மத்தியில் ஹன்ரர் வாகனத்திலேயே குறித்த பெண் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்சில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அம்பனில் வைத்திய சாலை இருந்தும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பெண்ணுக்கு சிகிச்சை அளிக்க முடியாததையிட்டு உறவினர்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

சீதனப் பிரச்சினை காரணமாகவே குறித்த பெண் தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்று அந்தப் பெண்ணின் தாயார் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் புனரமைப்பு, புத்தாக்கம் மூலம் அறிவியலில் குடாநாடு முன்னேற்றம்

## வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஏனைய நாடுகளை விட அறிவியல் வளத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்த யாழ்ப்பாணம் இன்று மீள் புனரமைப்பு, புத்தாக்க செயற்றிட்டங்கள் ஊடாக பெருமளவில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்று வட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பிறேமகாந்தன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கணினிச் சங்கம் வடமாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்திய ''இணையத்தளம்-2012'' எனும் போட்டியின் பரிசளிப்பு விழா வெள்ளியன்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த் துகையில்:

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் உலகத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூடிய திறன்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் வளர்ச்சியின் உச்சக்கட்டம்தான் இன்று உலக நாடுகளில் போருக்குக் கூட ஆயுதங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

அத்துடன் பொருளாதார வளர்ச்சியையும் கண்டு வருகின்றன. எமது நாட்டில் அறிவு வளத்தைப் பொறுத்தவரை ஏனைய நாடுகளை விட மிகவும் பின் தங்கிய நிலையில் தொழில்நுட்பம் இருந்தது. தற்போது மீள்புனரமைப்பு மற்றும் புத்தாக்க செயல் முறைகள் ஊடாக இன்று முன்னேற்றம் அடைந்து வருகிறோம். பாடசாலை மாணவர்கள் மத்தியில் இத்தகைய திறன்களை வளர்க்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. மாணவர்களும் இதனைச் சாதகமாகப் பயன் படுத்தி முன்னேற்றம் அடைய வேண்டும்.- என்றார்.



கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பத்துக்கான நிறை வேற்று அதிகாரி நீல்குணதாச மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார்.

கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பத்துக்கான நிறைவேற்று அதிகாரி நீலகுணதாச தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான விளக்கவுரையும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (வ-14)

### பல்கலை மாணவருக்கான உதவுதொகை நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.பல்கலைக்கழக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஆளுநரின் விசேட நிதியுதவி வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஆளுநரின் விசேட நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் யாழ். பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதுடன் பதிவாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் உதவுதொகை பெறும் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (வ-400)

# மூட்டுவாதம் ஆளையே முடக்கிவிடும் உடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் புதன்கிழமைகளில் 'கிளினிக்'

தென்மராட்சி, ஜூன் 10

வட பகுதியில் வயது வேறுபாடின்றி மூட்டுவாத நோய் வேகமாகப் பரவி வருகிறது. இந்த நோயை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தாவிடின் எழுந்து நடமாட முடியாத நிரந்தர நோயாளியாக வேண்டிய அவல நிலை ஏற்பட வாய்ப்புண்டு.

இதனைக் கருத்தில் கொண்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர்ஆ.கேதீஸ்வரன் மூட்டுவாத நோயினால் பாதிக்கப்படும் தென்மராட்சி பிரதேச மக்களின் நலன் கருதி பிரதி புதன்கிழமைகளில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் யாழ். போதனா வைத்தியசாலை மூட்டு வாத வைத்திய நிபுணர் மூலம் 'கிளினிக்'நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.



“ இந்த நோயை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தாவிடின் எழுந்து நடமாட முடியாத நிரந்தர நோயாளியாக வேண்டிய அவல நிலை ஏற்பட வாய்ப்புண்டு

நாளைமறுதினம் புதன்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை 'கிளினிக்' வைத்தியசாலை யின் 26 ஆம் இலக்க அறையில் நடைபெறும் என்று வைத்தியசாலையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மூட்டுவாத நோய் 'கிளினிக்கு'களில் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச நோளாளர்கள் முன்னர் பயன்படுத்திய கிளினிக் கொப்பியைக் கொண்டு வருமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-9)

# நண்பரிடம் நம்பிக்கை மோசடி செய்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

நண்பரிடம் 'கராஜ்' பொருள்களைப் பெற்று அவற்றைத் திருப்பிச் செலுத்தாது நம்பிக்கை மோசடி செய்தமை தொடர்பான வழக்கில் சந்தேகநபர் குற்றவாளியாக இனங் காணப்பட்டதனால் அவரை நட்ட ஈடும் அபராதமும் செலுத்துமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டது.

நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்தவருடம் பெப்ரவரி மாதம் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது. புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவரே நம்பிக்கை மோசடி செய்த அதே இடத்தைச் சேர்ந்த நண்பருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார். 95ஆயிரம்ரூபா பெறுமதியான கராஜ் பொருள் களைப் பெற்று, பின்னர் அவற்றை திருப்பிச் செலுத்தாது இருந்து விட்டார். காலம் கடந்தபோதும் பொருள்கள் திருப்பித் தரப் படாதனாலேயே அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

விசாரணையின்போது நண்பரான சந்தேகநபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். அவரை 60 ஆயிரம் ரூபா நட்ட ஈடு செலுத்துமாறும் தவறின் 6 மாத சிறைத் தண்டனை விதித்ததுடன், ஆயிரத்து 500 ரூபா அபராதமும் அதனைச் செலுத்தத் தவறின் ஒருவாரம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

தவிர 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்த நீதிவான் அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தார். (வ-4)

### கொம்படி ஊடாக கேவில் வரையில் பஸ் சேவை ஆரம்பம்

பளை, ஜூன் 10

வடமராட்சி கிழக்கின் எல்லைக் கிராமமான கேவில் வரையான பஸ் சேவையை இ.போ.ச. யாழ்.டிப்போவினர் ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு ஏ-9 வீதி வழியாக இயக்கச்சி சென்று அங்கிருந்து சங்கத்தார் வயல், கொம்படி ஊடாக கேவில் வரை செல்கிறது.

யாழ்.டிப்போவினால் வடமராட்சி கிழக்குக்கான மற்றொரு சேவையினை பளை புதுக்காடுச் சந்தி செம்பியன்பற்று ஊடாக கட்டைக்காடு வரை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# சாவகச்சேரியில் நடைபெற்ற வடமாகாண இளைஞர் தின நிகழ்வு



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வட மாகாண தேசிய இளைஞர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி சிவன் கோயிலடியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

நிகழ்வுக்கு விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், மன்ற வடமாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால, மாகாண இணைப்பாளர் திருமதி வி.ஸ்ரீகாந்த ரூபன் ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

கடந்த வருடம் சிறந்த முறையில் செயற்பட்ட இளைஞர் கழகம், பிரதேச சம்மேளனம், திறந்த இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர், இளைஞர் சேவை அதிகாரி, சிறந்த விளையாட்டு வீரவீராங்கனைகள் ஆகி யோரும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (வ-9)

## பணத்தையும் பொருளையும் கடனுக்குப் பெற்றவர்

# கடையைப் பூட்டிவிட்டு தலைமறைவு; உரிமைகோரி இருவர் மல்லுக்கட்டு

சாவகச்சேரி, ஜூன் 10

கடன் வாங்கியவர் கடையை மூடி விட்டு திடீரென தலைமறைவானார். இதனால் ஆத்திரமுற்ற கடன் கொடுத்தவர் கடையின் பூட்டுகளை உடைத்து அப்புறப்படுத்தி விட்டு மாற்றுப்பூட்டுகளைப் போட்டார். இதனை அறிந்த மற்றொரு கடன் கொடுத்தவர் கடைக்கு உரிமை கோரும் உறுதிகளுடன் வந்ததால் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

தகவல் அறிந்த பொலிஸார் அங்கு வந்து விசாரணைகளை மேற் கொண்ட பின்னர் முறைப்பாடுகள் செய்வதற்கு பொலிஸ் நிலையத் துக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிறு முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தையில் உள்ள கடையை நகர சபையிடம் குத்தகைக்கு பெற்ற நபர் மற்றொருவருக்கு வாடகைக்கு வழங்கியிருந்தார்.

அண்மையில் நிலவும் பல் வேறு காரணங்களால் கடை நடத்தியவருக்கு பெரும் கடன் சுமை ஏற்பட்டது. கடன் பளுவைத் தாங்க முடியாத வர்த்தகர் கடையை மூடிவிட்டுச் சென் றுள்ளார். ஒரு வாரமாக கடை திறக்கப்படாததால் வர்த்தகருக்கு கடன் கொடுத்தவர்கள் தினமும் கடைக்கு வந்து பார்த்து ஏமாற்றமடைந்த நிலையில் சிலர் பொலிஸ் நிலையத்தில் காசோலை வழங்கி மோசடி செய்ததாக முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் இவருக்கு கடன்கொடுத்த மற்றொரு வர்த்தகர் நேற்று பட்டப்பகலில் கடைக்கு வந்து அங்கு கதவில் பொருத்தப்பட்டிருந்த பூட்டுக்களை அடித்து உடைத்து விட்டு புதிய பூட்டுகளைப் போட்டு விட்டுச் சென்றுள்ளார்.

இதனை அறிந்த வர்த்தகரின் தாயார் மற்றும் காசு கொடுத்து உறுதி மூலம் கொள்வனவு செய்த மற்றொருவரும் வந்து கடைக்கு உரிமைகோரி குழப்பம் விளைவித்தனர்.

அங்கு வந்த பொலிஸார் அனைத்தையும் பார்வையிட்ட பின்னர் இது தொடர்பாக முறைப்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட வர்களை பொலிஸ் நிலையத் துக்கு அனுப்பி வைத்தனர். (ஒ)

### தென்மராட்சியில் சளிப் பரிசோதனை

தென்மராட்சி, ஜூன் 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் கல் உடைக்கும் நிலையங்கள், மர அரிவு நிலையங்கள், அரிசி ஆலைகள் ஆகியவற்றில் பணிபுரிவோருக்கான சுவாசப் பை தொடர்பான சளிப் பரிசோதனை நாளை மறுதினம் புதன்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்படவுள் ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டலில் மாவட்ட காசநோய் தடுப்பு பொறுப்பதிகாரி வைத்தியர் செ.யமுனானந்தா தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையினரும் இணைந்து பரிசோதனைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் வன்னியசிங்கம்



கிணற்றடிப்புலம், கரணவாய் வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வன்னியசிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பெரியபிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- அன்னம்மா தம்பதியரின் மருமகனும், காந்திமலரின் அன்புக் கணவரும், கிலேந்தினி(கனடா), விஜயன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இர்ாசரத்தினம் (கனடா) அவர்களின் மாமனாரும், துசாரகா,கௌதம் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2013) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 226 3948

(37606)(5.6)

கிணற்றடிப்புலம்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

# முஸ்லிம் காங்கிரஸ் கூட்டம் திங்கட்கிழமை

## எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராய்வு

கொழும்பு,ஜூன் 10

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை நடைபெறும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலர் ஹஸன் அலி தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் சனிக்கிழமை இடம்பெறும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், திங்கட்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை திருத்துவது தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-ரி)



## துயர்பகிர்கின்றோம்

கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக் கிளையின் தலைவர் திரு.அருளானந்தம் யோகேந்திரனின் அன்புத் தாயாரான

திருமதி. அந்தோனியாப்பிள்ளை அருளானந்தம்

அவர்கள் மறைந்ததையிட்டு அன்னாருக்கு எம் சங்கத்தினர் கண்ணீர் அஞ்சலி செலுத்துவதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம். அவரது ஆத்மா இறைவனில் அமைதி அடைவதாக.

**கத்தோலிக்க ஆசிரியர் சங்கம், வடமராட்சிக் கிளை.**

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வலிங்கம் பத்மராசா (ஓமான்)

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத் தாபன ஊழியர்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் பத்மராசா நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் பத்மாவதி தம்பதியரின் பாசமிகு மகனும் பத்மலோஜினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம் சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பத்மபிரபா மற்றும் பத்மகுமரா (பிரதேச செயலம், கோப்பாய்-Arul Global Express), பத்மகிருபா (Arul Global Express), பத்மநிருபன் (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), பத்மநாபா (இறுதியாண்டு மாணவன் யாழ். பல்கலைக்கழகம்- புவியியற்துறை), ஆகியோரது பாசமிகு தந்தையும் நிதர்சனா, மதுரா ஆகியோரது மாமனும் லித்திக்கேஸின் அப்பப்பாவும் அரியமலர், காலஞ்சென்ற தேவராசா மற்றும் நேசமலர், சுகிர்தமலர், நவனீதராசா (டென்மார்க்), ரவீந்திரராசா, ஜெயமலர் (நோர்வே) ஆகியோரது அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை கிழக்கு,
சங்கானை.

(சி/9668)

தகவல்:
குடும்பத்தினர்.



## திருமதி சிவநேசம் பரமலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சிவநேசம் பரமலிங்கம் நேற்று 09.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமலிங்கத்தின் அன்பு மனைவியும் தங்கராணி (கனடா), கெங்காதரன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற குமரகுரு ஆகியோரின் அன்புத் தாயும் பத்மசேனன் (கனடா), சுலோசனா (ஆசிரியர் வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமியும் உஷானி, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவர்ர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10.06.2013 திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
ப.கெங்காதரன் (மகன்)

சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.

(சி/9666)



## திருமதி வென்சிலஸ் மேரி திரேசா (பவளம்)

பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி வென்சிலஸ் மேரிதிரேசா (பவளம்) நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வென்சிலஸின் அன்பு மனைவியும் மேரிஜாலின் யசிந்தா (ஜெசி - பின்லாண்ட்), மோரி ஆன்சலின் சுதா (பவானி), அன்ரோனிற்றா, சுபாஜினி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- தொழில் திணைக்களம், திருகோணமலை), ஜெயச்சித்திரா (ஜான்சி), அலன்ரஜீவ் (மின் உதவியாளர், RDHS திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயும் சுதா கோமகன் (பின்லாண்ட்), வின்சன், விமலதாஸ், உதயராஜா (தொழில் மேற்பார்வையாளர், RDA திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆன் நிருஜிகா, றிஸ்ரோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிளாறம்மா (பருத்தித்துறை) மற்றும் காலஞ்சென்ற அதிரியாம்பிள்ளை, செபமாலை, பிரான்ஸிஸ் ஆகியோரின் சகோதரியும் அந்தோனிப்பிள்ளை (சுவீடன்), அன்ரனி அல்பிறெட் (கிராம அலுவலர் திருகோணமலை), ஸ்கொலஸ்ரிக்கா புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக 10.06.2013 திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது வீட்டிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்:

சென் தோமஸ் ஒழுங்கை, பருத்தித்துறை.


(சி/9667)

சி.ஜோ.கொன்விக்ரர் (குணம்)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு கந்தசாமி

(ஓய்வுபெற்ற ஊழியர், கூட்டுறவு விற்பனைத் திணைக்களம்)



புத்தூர் வடக்கைப் (ஏரந்தனை) பிறப்பிடமாகவும் இல.48, புதுவீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- ராசம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் மங்களம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அன்னமலர் மற்றும் தேவநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கஜனின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், பத்மநாதன் மற்றும் யோகேஸ்வரி, ராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வநாயகியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2013) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.தேவநாயகி (மனைவி)
குடும்பத்தினர்.

புத்தூர் வடக்கு,
(ஏரந்தனை) புத்தூர்.

(சி/9668)

## கந்தையா விஸ்வலிங்கம்



புலோலிகிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் புதிய செம்மணி வீதி, வேளாதோப்பு கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விஸ்வலிங்கம் நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நவரத்தினராசா (பாபு, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆசிரியர்), இரவீந்திரன் (கோபு, பொறியியலாளர்- ஆஸ்திரேலியா), பிரபா (ராசாத்தி), கீர்த்திராசா (வெல்டிங்), றேணுகா, காலஞ்சென்ற றோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலா (யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை), அகல்யா (ஆஸ்திரேலியா), யோகநாதன் (சிற்பக்கலைஞர்), தங்கத்துரை (கிராமசேவகர், ஆனைப்பந்தி) ஆகியோரின் மாமனும் வைஷ்ணவி, சுதர்சனன், சைந்தியா, தர்சினி, பிருதிவிகா, தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு, கல்வியங்காடு.

(38192)

தகவல்:
குடும்பத்தினர்.

## அன்ரன் தேவதாஸ்

(பனை அபிவிருத்திச் சபை)



யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதி, மூளாய் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் தேவதாஸ் நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை ஆரோக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி. மோஸஸ் செல்வம் தம்பதியரின் பெறாமகனும் காலஞ்சென்ற சாமியாப்பிள்ளை - பிறிசட் தம்பதியரின் பாசமிகு மருமகனும் வேஜினியாவின் (றோகினி) அன்புக் கணவரும் டறின்கிளனைட், ஜொரின் (பரி.யோவான் கல்லூரி மாணவன்), விதுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி ஜீவமணி தங்கராசா, திருமதி கிளாரம்மா தருமராஜா, சிங்கராயர், திருமதி பிறேமாவதி நிர்மலன், யமுனா, சகின்ஸ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தங்கராசா (இளைப்பாறிய வங்கி ஊழியர்), திரு.திருமதி மக்ஸ்வெல் (றோகன்- கனடா), திருமதி சதீஸ்குமார் டெல்சியா (ஆசிரியை), திருமதி சிங்கராயர் புஸ்பகுமாரி (கிளி), நிர்மலன், தர்மராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சலமொன் டானியல் (வட்டுக்கோட்டை), திரு.திருமதி ஜெபரட்ணம் திரேசம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.06.2013 திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் மத்தியூஸ் வீதி, மூளாய் ஒழுங்கையிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து பரி.யோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6, [illegible],
[illegible], யாழ்ப்பாணம்.

(38193)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் வழிகாட்டியாக நூல்கள்

## நூல் வெளியீட்டு நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 10
உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துபவையாக நூல்கள் இருப்பதுடன் வாழ்க்கையை சரியான வழியில் நெறிப்படுத்துவதற்கும் நூல்கள் உதவியாக இருக்கின்றன என்று யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

த.ஜெயசீலன் எழுதிய "எழுதாத ஒரு கவிதை" எனும் நூல் வெளியீடு நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

அந்தந்த காலத்துக்கு ஏற்ப நூல்கள் சமூகத்துககு தேவையாகவுள்ளன. அந்த வகையில் தனது அனுபவங்களை காலத்தின் மாற்றங்களோடு ஏற்ப ஜெயசீலன் மூன்றாவது நூலாக இந்தக் கவிதை நூலை வெளியிட்டு வைக்கிறார்.

தனது அனுபவங்களையும் பொதுமக்களது பிரச்சினைகளையும் நேரடியாகக் கண்டு தனிப்பட்ட உணர்வு ரீதியான வெளிப்பாடுகளுடன் கவிதைகளை எழுதியுள்ளார்.

இளமை, முதுமை, உறவுகள் என வித்தியாசமான கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவதே நூல்களாக உள்ளன.

இந்த நூல்கள் சரியான வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கும் கைகொடுக்கும். காலத்தின் தேவைக்கேற்ப சிறந்த நூல்கள் சமூகத்துக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்- என்றார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலர்கள் மற்றும் கிராம சேவகர்கள் உட்பட சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ-14)



நூலை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியிட்டு வைக்க முதல் பிரதியை மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் பெற்றுக் கொண்டார்.

### கடலில் விழுந்த கடற்படை சிப்பாய் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
நெடுந்தீவுக் கடலில் விழுந்த கடற்படைச் சிப்பாய் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார். எல்பிட்டியவைச் சேர்ந்த பி.எம்.எஸ்.சம்பத் (வயது-25) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். ஊர்காவற்றுறை பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. கடலில் படகில் சென்று கொண்டிருந்த போது இவர் தவறி விழுந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

### பறவைக் காவடி துலாவில் நின்றவர் வீசப்பட்டு காயம்

கொடிகாமம், ஜூன் 10
தேர் உற்சவத்துக்காக எடுத்து வரப்பட்ட பறவைக் காவடியின் துலாவில் நின்றவர் ஆலய முன்றிலில் டிராக்டர் பெட்டி தடம் புரண்டதில் துலாவிலிருந்து தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. இயற்றாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட பறவைக் காவடியை ஏற்றி வந்த டிராக்டர் பெட்டியே தடம் புரண்டது. பறவைக் காவடியில் தொங்கிய நிலையில் காணப்பட்டவரும் தூக்கி வீசப்பட்ட போதிலும் அவருக்குப் பாதிப்பு ஏற்படவில்லை. துலாவில் நின்ற குடமியனைச் சேர்ந்த நரசிங்கம் காண்டீபன் (வயது-26) என்பவர் காயமடைந்த நிலையில் காவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-9)

### வீதிகள் புனரமைப்பு

குருநகர், ஜூன் 10
யாழ்ப்பாணம் 5 ஆம் குறுக்கு வீதி யாழ். மாநகர சபையினால் பூரணமாகச் செப்பனிடப்பட்டுள்ளது. யாழ்.வேம்படி வீதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பணிகள் சப்பல் வீதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டுப் பின்னர் சப்பல் வீதிக்கும் யாழ்.



பிரதான வீதிக்கும் இடைப்பட்ட வீதியும் செப்பனிடப்பட்டு வேலைகள் நிறைவுற்றுள்ளன. இந்த வீதி தார் மூலம் செப்பனிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-51)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 10
பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள் மூன்று வீதிகள் சபை நிதியிலிருந்து திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

பண்டாரி அம்மன் கோயில் முதலாம் ஒழுங்கை, கந்தஉடையார் ஒழுங்கை, ஐயனார்கலட்டி ஆகிய மூன்று வீதிகளுமே புதிதாகப் புனரமைக்கப்பட்டுள்ளன. (வ-8)



யாழ்.வை.எம்.சீ.ஏ. நிறுவுநர் தினத்தையிட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் நிறுவனத்தினரால் 5 சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. (வ்-9)

## இந்திய வீட்டுத் திட்ட வீடுகளை கையளிக்குக

**அரியாலை கிழக்குக்குப் பயணம் செய்த பா.ஜ.கவிடம் மக்கள் கோரிக்கை**

யாழ்ப்பாணம், ஜூன் 10
அரியாலை கிழக்கு நாவலடி பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்குரிய வீடுகளை விரைவாக அமைத்துத் தருமாறு அங்கு சென்ற பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் இந்திய வீட்டுத் திட்டங்களை அண்மையில் இந்தப் பகுதிக்கு பயணம் செய்த இந்திய பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டனர். அதனை விட வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மக்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

வீட்டுத் திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்படும் இந்த வீதிகள் யாவும் இந்த வருடத்துக்குள் நிறைவு பெற்று விடும் என்று இந்திய துணைத் தூதர் கே.மகாலிங்கம் அங்கு மக்கள் மத்தியில் உறுதியளித்தார். (வ-17)

## 9 வர்த்தகர் சிக்கினர்

தென்மராட்சி, ஜூன் 10
கொழும்பிலிருந்து வருகை தந்த பாவனையாளர் அதிகார சபையின் உயர் அதிகாரிகள் நடத்திய திடீர் பரிசோதனையில் அகப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 9 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு உயர் அதிகாரிகள் வர்த்தக நிலையங்களில் நடத்திய திடீர்ப்பரிசோதனைகளின்போது திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, நிறைகுறைவாக விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

# அரசியல் விடயங்கள் குறித்து நாகரிகமாக கருத்து வெளியிடவும்

## கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

வடமராட்சி, ஜூன் 10
சபைக் கூட்டங்களில் அரசியல் விடயங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போது நாகரிகமான முறையில் அதனை வெளிப்படுத்த வேண்டும் எனக் கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அரசியல் விடயம் தொடர்பில் பேசக் கூடாது எனக் கடந்த கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாகத் தெரிவித்து ஆளும் கட்சி உறுப்பினரான ஆ.மதியரசன் அது தொடர்பாக பிரஸ்தாபித்துக் கருத்து வெளியிட்டார்.

அபிவிருத்திகுறித்துஇங்குநடைபெறும் கூட்டங்களில் கருத்து வெளியிடலாம் என்றால் ஏன் அரசியல் விடயம் குறித்துப் பேசக் கூடாது. அரசியலில் இருந்துதான் உறுப்பினர்களாக நாம் வந்திருக்கின்றோம். அரசியல் பேசத் தடை விதிக்கக் கூடாது என அவர் தனது உரையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

> கரவெட்டிப் பிரதேச சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அரசியல் விடயம் தொடர்பில் பேசக் கூடாது எனக் கடந்த கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தாகத் தெரிவித்து ஆளும் கட்சி உறுப்பினரான ஆ.மதியரசன் அது தொடர்பாக பிரஸ்தாபித்துக் கருத்து வெளியிட்டார்.

ஆளும் கட்சி மற்றொரு உறுப்பினரான கே.பரஞ்சோதி பேசுகையில்:- அபிவிருத்தியெல்லாம் அரசியலோடு கலந்துள்ளது. அரசியல் ஊடாகத்தான் அரசியலும் நடக்கின்றது. எனவே அரசியல் விடயமும் பேசலாம் என்றார். உறுப்பினர் பொ.குக தாஸ் (ஆளும் கட்சி) தெரிவிக்கையில்: அரசியல் ஊடாகத்தான் இந்தச் சபைக்கு வந்துள்ளோம். ஆனால் [illegible] எந்த அபிவிருத்தியும் நடக்கவில்லை. செயலாளரின் வழி நடத்தலில்தான் சபை நடக்கின்றது. ஆனால் மக்கள் பிரதிநிதிகள் முடக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் செறிவைக் குறைக்கவும் நிலங்களை அபகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணசபையை பலவீனமாக்கும் முயற்சிகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற முயற்சிகளை விடுத்து தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் இறைமையுடன்வாழவேண்டும். இதனை அரசு நிறைவேற்ற முன்வரவேண்டும். நில அபகரிப்பை தமிழன் என்ற ரீதியில் சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் எம் மத்தியில் உண்டு. இந்தக் கட்சிகள் அனைத்தும் இணைந்து தமிழன் என்ற நிலையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இறுதியில் நாகரிகமான முறையில் அரசியல் கதைக்கலாம் என்த் தலைவர் தெரிவித்ததை [illegible] எடுக்க வேண்டும் என உறுப்பினர் ஆ.மதியரசன் கேட்டுக் கொண்டார். (வ-8)

## மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளுக்கு புதிய பலகைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளுக்கான பெயர்ப் பலகைகள் புதிதாக நிறுவப்படவுள்ளது.

அதிகமான வீதிகள் பெயர்ப் பலகைகள் இன்றிய நிலையில் உள்ளதால் மக்கள் வீதிகளை இனங்காண்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் வீதிகளின் பெயர்கள் குறித்த பலகைகளை புதிதாக சம்பந்தப்பட்ட வீதிகளில் அமைக்கவும் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10/06/2013

# தமிழகமெங்கும் கறுப்பு ஜூலை

## தொல். திருமாவளவன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 10
இலங்கையில் 1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி தமிழர்களுக்குப் பெரும் அநீதி நடந்தது. அதை நினைவு கூரும் வகையில் கறுப்பு ஜூலை கருத்தரங்கம், ஜூலை இறுதி வரை, வாரம் ஒரு நாள் தமிழகம் முழுவதும் நடத்தப்பட உள்ளது- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில், கறுப்பு ஜூலை 30ஆம் ஆண்டு நினைவேந்தல் கருத்தரங்கம் சோழிங்கநல்லூரில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் கூறியதாவது:
"இலங்கையில் 1983 ஜூலை 23ஆம் திகதி பல்லாயிரக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களது வீடுகள் சூறையாடப் பட்டன. தீ வைத்து எரிக்கப்பட்டன. பெண்கள் பலாத்காரப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அதை நினைவு கூரும் வகையில் கறுப்பு ஜூலை கருத்தரங்கம், ஜூலை இறுதி வரை, வாரம் ஒரு நாள் தமிழகம் முழுவதும் நடத்தப்படவுள்ளது.

தமிழக மீனவர் பிரச்சினையைத் தீர்க்க அனைத்து கட்சிக் கூட்டத்தை தமிழக முதல்வர் கூட்ட வேண்டும். பாகுபாடின்றி அனைத்து கட்சியினரையும் அழைத்துப்பேசி மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.'' என்று தெரிவித்தார். (ற)

# இறுதி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விமான கோளாறு

## 147 பயணிகள் உயிர் தப்பினர்

சென்னை, ஜூன் 10
சென்னை விமான நிலையத்தில் இருந்து அபுதாபிக்குப் புறப்பட இருந்த விமானத்தில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. எனினும் உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரக் கோளாறால் 147 பயணிகளின் உயிர் காப்பாற்றப்பட்டது.

சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து அபுதாபிக்குப் புறப்படவிருந்த 'எத்தியர்ட் ஏயார்லைன்ஸ்' விமானத்திலேயே திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது.

பயணிகள் அனைவரும் ஏற்றபட்ட பின்னர், விமானத்தின் கதவுகள் மூடப்பட்டு, விமானம் புறப்படுவதற்கு முன்னரான விமானியின் இறுதிச் சோதனையின் போதே இயந்திரக் கோளாறு கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாகப் பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு ஓய்வறையில் தங்கவைக்கப்பட்டனர். பின்னர் விமான நிறுவன பொறியிலாளர்கள் குழு பழுதைச் சீர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

பின்னர் இயந்திரக் கோளாறு சீர்செய்யப்பட்டு 5 மணி நேரம் தாமதமாக விமானம் பறப்பை மேற்கொண்டது.

விமானி உரிய நேரத்தில் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதைக் கண்டுபிடித்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. 147 பயணிகளும் உயிர்தப்பினர். (ற)

# இலங்கைப் படைக்கு பயிற்சிகள் வேண்டாம்

## பிரதமருக்கு 'ஜெ' கடிதம்

சென்னை, ஜூன் 10
இலங்கைப் படையினருக்கு தமிழகத்தில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சிகள் நிறுத்தப்பட்டு, அவர்கள் திருப்பியனுப்பப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

இதுகுறித்து இந்தியப் பிரதமருக்கு, தமிழக முதல்வர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
''கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் இரு இலங்கை அதிகாரிகளுக்கு நீலகிரி மாவட்டம், வெலிங்டன் இராணுவ பயிற்சி மையத்தில் இந்திய இராணுவம் பயிற்சி அளித்து வருவதாகத் தெரிகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக தமிழக அரசு ஏற்கெனவே கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் அதனையும் மீறி மத்திய அரசு இலங்கை வீரர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி அளித்து வருகிறது. இது உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப் படவேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



# கடும் கடல் கொந்தளிப்புக் காரணமாக கரை திரும்பிய கன்னியாகுமரி மீனவர்

இராமேஸ்வரம், ஜூன் 10
கடற்கொந்தளிப்புக் காரணமாக கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் நேற்றுக் தொழிலுக்குச் செல்லவில்லை.

நேற்று சுமார் 150 படகுகளில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கடும் கடற்கொந்தளிப்பு மற்றும் கடும் காற்று என்பவற்றால் உடனேயே கரைக்குத் திரும்பினர்.

சின்னதட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சுமார் 150 படகுகளில் புறப்பட்ட மீனவர்கள் கடும் கடற்கொந்தளிப்பில் மாட்டிக் கொண்டனர்.

அதையடுத்து பலத்த போராட்டத்தின் பின்னர் அவர்கள் அனைவரும் உடனேயே கரை திரும்பினர்.

கடலின் சீரற்ற தன்மை காரணமாக படகுப் போக்குவரத்துகளும் நேற்று நிறுத்தப்பட்டிருந்தன என்று தெரியவருகிறது. (ற-14)

# மத்திய அரசின் போக்கை கண்டிக்கிறது அ.தி.மு.க.

சென்னை, ஜூன் 10
தமிழகத்தின் மீது இந்திய மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு செயற்பட்டு வருகின்றது என்று அ.தி.மு.க. செயற்குழு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தமிழக மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் கச்சதீவை திரும்பப் பெற சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தமிழக முதல்வர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார் என்றும் செயற்குழு பாராட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தமிழகம் தொடர்பில் இந்திய மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு செயற்பட்டு வருகின்றது. தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுகின்றமை குறித்துக் கண்டும்காணாதது போல் மத்திய அரசு செயற்படுகின்றது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கவில்லை.

அதேவேளை, தமிழக மீனவர்கள் பிரச்சினைகளில் தமிழக முதல்வர் ஜெயலலிதா எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. கச்சதீவை திரும்பப் பெறுவது தொடர்பில் தமிழக முதல்வர் சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.'' என்று செயற்குழுக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் இந்திய மத்திய அரசின் போக்கைக் கண்டித்து 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அனைத்துத் தீர்மானங்களையும் கட்சியின் அவைத் தலைவர் முன்மொழிய, அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் வழிமொழிந்தனர். (ற)

# பா.ஜ.க. பிரசார தலைவராக நரேந்திர மோடி


புதுடில்லி, ஜூன் 10
பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரக் குழுத் தலைவராக குஜாரத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடி அறிவிக்கப்பட்டுள்ளார்.

கோவாவில் நடைபெற்று வரும் பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்திலேயே கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

எனினும் குறித்த செயற்குழுக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் மூத்த தலைவர் அத்வானி உட்பட முக்கிய தலைவர்கள் பலர் பங்கேற்கவில்லை.

கட்சியில் மோடிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதை அடுத்தே அத்வானி மற்றும் அவரது ஆதரவாளர்களாகக் கருதப்படுபவர்களும் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

முதலமைச்சர் பதவி விவகாரத்தில் மோடிக்கும், அத்வானிக்கும் இடையே இழுபறி காணப்படுவது தெரிந்ததே. (ற)




நன்றி: தினமலர்

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் அறிவாற்றல் தமிழ் சமூகத்துக்குப் பயன்பட வேண்டும் – கருணாநிதி

சென்னை, ஜூன் 10
முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளின் தூக்குத் தண்டனையைக் குறைத்து, அவர்களின் அறிவாற்றல் தமிழ் சமூகத்துக்கு பயன்பட வழி ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கருணாநிதி,

''புல்லர் வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தூக்குத் தண்டனையை இந்தியச் சட்டங்களில் இருந்து அறவே நீக்க வேண்டும் என்பதே தி.மு.க வின் நிலைப்பாடு.

ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் செய்த குற்றம் எது [illegible] [illegible]னையை மனதில் கொண்டு, மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். கருணை மனு மீதான தாமத விசாரணை, 20 ஆண்டுகள் அவர்கள் அனுபவித்துள்ள சிறைவாசம் என்பவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தண்[illegible]ட்டு, அவர்[illegible]டன் இணைக்கப்பட வேண்டும். அவர்களின் அறிவாற்றல் தமிழ் சமூகத்துக்குப் பயன்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினையை தமிழக அரசு மனித நேயத்தோடும், உண்மையோடும் அணுக வேண்டும். தமிழக அமைச்சரவையை கூட்டி விவாதிக்க வேண்டும். 3 பேர் உயிர்கள் காக்கப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்'' – என்று தெரிவித்தார்.

புதுடில்லி குண்டுவெடிப்புத் தொடர்பான வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள புல்லாரின் தண்டனையை குறைப்பதற்கான மனு, உயர்நீதிமன்றில் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது. கருணை மனு மீதான விசாரணையில் ஜனாதிபதி முடிவு எடுப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தால் தூக்குத் தண்டனையை மாற்ற முடியாது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டேலா உடல்நிலை மோசம்

ஜொகன்னஸ்பேர்க், ஜூன் 10
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் (வயது-94) உடல் நிலை மோசமடைந்துள்ளது.
''மண்டேலாவின் உடல் நிலை கடந்த சனிக்கிழமை மோசமடைந்தது. அதையடுத்து அவர் பிரிட்டோரியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## அமெரிக்க ஜனாதிபதிக்கு விஷக் கடிதம்; நடிகை கைது

நியூயோர்க், ஜூன் 10
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் நியூயோர்க் ஆளுநர் மைக்கெல் புளூம் பேர்க் ஆகியோருக்கு விஷம் தடவிய கடிதம் அனுப்பியமை தொடர்பாக டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த நடிகை ஷானான் ரிச்சர்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரைக் கைது செய்துள்ள அமெரிக்கப் புலனாய்வுத் துறை விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.
ஷானான் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. (ற)

## அமெ. படையினர் மூன்று பேர் ஆப்கனில் சாவு

காபூல், ஜூன் 10
ஆப்கன் இராணுவச் சிப்பாய் ஒருவரால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர்.
பாகிஸ்தான் எல்லையில் உள்ள பக்திதா மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
ஆப்கன் இராணுவ உடையில் இருந்த ஒருவர் திடீரென அமெரிக்கப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. (ற)

# சீனாவின் வளர்ச்சியை வரவேற்கின்றது அமெ.

## ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவிப்பு

வோஷிங்டன், ஜூன் 10
சர்வதேச அளவில் சீனா அமைதியாக வளர்ந்து வருகின்றது. சீனாவின் வளர்ச்சியை அமெரிக்கா வரவேற்கின்றது – என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்கும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.
அதன்போது அமெரிக்க ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கும்போது,
''சர்வதேச அளவில் சக்தி வாய்ந்த நாடாக சீனா அமைதியான முறையில் வளர்கின்றது. அந்த வளர்ச்சியை அமெரிக்கா வரவேற்கின்றது. அமைதியான, வலுவான நாடாக சீனா உருவாவது சீன மக்களுக்கு மட்டுமன்றி உலக நாடுகளுக்கும் நலன் தரும் விடமாகும். அமெரிக்காவுக்கும் அதனால் நன்மை உண்டு.
அமெரிக்காவும், சீனாவும் வலுவான பொருளாதார சக்திகளாக உள்ளன. இரு நாடுகளிடையேயும் ஆரோக்கியமான போட்டியும், சிறப்பான ஒத்துழைப்பும் உள்ளன'' என்று தெரிவித்தார் பராக் ஒபாமா.
கலந்துரையாடல் பற்றி சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் கூறும்போது,
''எதிர்காலத்தில் சீன – அமெரிக்க நட்புறவு வலுவான நிலையில் தொடர்வதற்கான தொடக்கப்புள்ளி இப்போது வைக்கப்பட்டுள்ளது. எந்தவகையிலான உறவை இருநாடுகளும் விரும்புகின்றன, எந்தவகையிலான ஒத்துழைப்பு இருநாட்டுக்கும் நன்மையளிக்கும், இரு நாடுகளும் இணைந்து எப்படி உலக அமைதியையும், வளர்ச்சியையும் மேம்படுத்துவது என்பது குறித்து ஒபாமாவுடன் முழுமையாகப் பேச இருக்கிறேன்.
இருநாட்டு மக்கள் மட்டுமின்றி உலகமே எங்கள் சந்திப்பை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிவேன்'' என்று தெரிவித்தார். (ற)




> அண்மைக் காலமாக அதிகரித்துள்ள இணைய வழித் தாக்குதல் கள், இணையக் குற்றங்கள் தொடர்பில் ஜீ ஜின்பிங்குடன் பேசி சுமுகமான முடிவு எடுக்கப் படும்.
> – பராக் ஒபாமா



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் ராஞ்சோ மிராஜ் பகுதியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்.

## துஷ்பிரயோக சந்தேகநபர் உயிருடன் எரித்துக் கொலை

சூக்ரே, ஜூன் 10
பொலிவியாவின் தென் பகுதியில் துஷ்பிரயோக சந்தேகநபரொருவர் உயிருடன் எரிக்கப்பட்டுள்ளார்.
17 வயதான குறித்த சந்தேகநபர், 35 வயதான பெண்ணொருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி, கொலை செய்தார் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.
அதையடுத்து சுமார் 200 கிராமவாசிகள் இணைந்து குறித்த இளைஞனை உயிருடன் எரியூட்டியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
பொலிஸார் சம்பவ் இடத்திற்கு வருவதைத் தடுப்பதற்காக கிராமவாசிகள் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.
துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட பெண்ணின் சடலம் புதைக்கப்பட்ட இடத்தில், சந்தேகநபரது எச்சங்கள் வீசப்பட்டன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பொலிஸார் இதுகுறித்து விசாரித்து வருகின்றனர். (ற)



பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் கிடோ வெஸ்டர்வெலி, தலைநகர் இஸ்லாமாபாத்தில் பிரதமர் நாவஸ் ஷெரீப்பை சந்தித்துக் கலந்துரையாடினார்.

## 'போர்ப்ஸ்' பத்திரிகை மீது சவூதி இளவரசர் வழக்கு

### சொத்து மதிப்பை குறைத்துவிட்டனராம்

டுபாய், ஜூன் 10
தனது சொந்து மதிப்பை குறைத்துத் தெரிவித்துள்ளது என்று 'போர்ப்ஸ்' பத்திரிகை மீது சவூதி இளவரசர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.
அமெரிக்காவின் 'போர்ப்ஸ்' பத்திரிகை அண்மையில் உலகின் கோடீஸ்வரர்கள் பட்டியலை வெளியிட்டது.
அதில் சவூதி இளவரவர் அல் பலி பின் தலால் சொத்து மதிப்பு, 20 பில்லியன் டொலர் என்றும், அவர் பட்டியலில் 26ஆவது இடத்தில் இருப்பதாகவும் பட்டியலிடப்பட்டிருந்தது.
எனினும் அதை மறுத்துள்ள இளவரசர் தலால் தனது சொத்து மதிப்பு 29.6 பில்லின் டொலர் என்றும், கோடீஸ்வரர் பட்டியலில் தான் 10ஆவது இடத்தில் இருப்பதாகவும் கூறுகின்றார்.
'போர்ப்ஸ்' பத்திரிகை தன்னை 26 ஆவது இடத்தில் பட்டியலிட்டுள்ளதால் அந்தப் பத்திரிகை மீது மானநஷ்ட வழக்கும் பதிவு செய்துள்ளார். (ற)

# மீண்டும் அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு

## 6 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

சான்டோமோனிகா, ஜூன் 10
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.
சான்டோ மோனிகா நகரில் உள்ள கல்லூரி ஒன்றின் அருகே துப்பாக்கிப் பிரேயோகம் இடம்பெற்றுள்ளது.
''நான் வீட்டில் இருக்கும் போது திடீரென துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தபோது ஒருவன் அருகில் இருந்த வீட்டின் மீது துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்தான். அந்த வீடு தீப் பற்றிக் கொண்டது. அங்கு நின்றிருந்த கார் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அந்தக் காரில் அமர்ந்திருந்த பெண்ணுக்குக் காயம் ஏற்பட்டது'' என்று தெரிவித்தார் அந்தப் பகுதியில் குடியிருக்கும் பெண் ஒருவர்.
காரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர், காயமடைந்த பெண்ணுடன் காரைக் கொண்டு சென்றுள்ளார். அதன் பின்னர் காரை வீதியில் விட்டு விட்டு அருகில் இருந்த கல்லூரிக் குள் சென்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். அதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.
''திடீரென துப்பாக்கியுடன் நுழைந்த ஒருவன் சரமாரியாக சுடத் தொடங்கினான். நாங்கள் அலறிக் கொண்டு ஓடத் தொடங்கினோம். பலர் காயமடைந்து வீழ்ந்தனர்'' என்று கூறுகின்றனர் கல்லூரி மாணவர்கள்.
சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் துப்பாக்கிதாரி மீது நடத்திய தாக்குதலில் அவன் உயிரிழந்தான்.
காயமடைந்த கல்லூரி மாணவர்கள் பலர் மருத்துவமனைகளில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த வருடம் நியூடவுன் பகுதியில் உள்ள சிறுவர் முன்பள்ளி ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 27 சிறுவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.(ற)







## 'உடனே நிறுத்திவிடுங்கள் 'டிரோன்' தாக்குதல்களை'

லாகூர், ஜூன் 10
''ஆளில்லா விமானத் (டிரோன்) தாக்குதல்களை உடனடியாக அமெரிக்கா நிறுத்தவேண்டும். இவ்வாறான தாக்குதல்களில் அப்பாவிகளே உயிரிழக்கின்றனர்.'' என்று அமெரிக்க தூதர் ரிச்சர்ட் ஹாக்லெண்டை அழைத்து கண்டிப்புடன் தெரிவித்துள்ளது பாகிஸ்தான்.
நவாஸ் ஷெரீப் பதவியேற்று இரண்டு நாள்கள் கழித்து பாகிஸ்தானின் வாஜிரிஸ்தான் பகுதியில் அமெரிக்க 'டிரோன்' நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 9 பேர் உயிரிழந்தனர். அதையடுத்தே பாகிஸ்தான் இவ்வாறு எச்சரித்துள்ளது.
இதுகுறித்து பிரதமர் நவாஸ் ஷெரீப் உத்தரவின் பேரில் அவரது சிறப்பு உதவியாளர் மற்றும் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் தாரிக் பதிமி, அமெரிக்க தூதர் ரிச்சர்ட் ஹாக்லெண்டை அழைத்து தனது கண்டனத்தை தெரிவித்தார்.
"இவ்வாறான தாக்குதல் பாகிஸ்தானின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையைக் குறைக்கும் செயற்பாடுகளாகும். அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு வலுத்துள்ளது. அப்பாவி மக்கள் உயிரிழப்பது, இருநாட்டு உறவில் எதிர்மறையான விளைவைவேஏற் படுத்தும். விமான தாக்குதலை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும்'' என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் தி.தனுசன் அவர்களின் அன்புத் தந்தையும், வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான

## தேவராசா தில்லைராசா

அவர்களின் மறைவையொட்டி பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம், வ/கனகராயன் குளம் மகா வித்தியாலயம்.**

(37605)(3.6.11)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா(பாக்கியம்) வைத்திலிங்கம்



மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ள வத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா வைத்திலிங்கம் நேற்றுமுன்தினம் (08-06-2013) சனிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாகநாதர்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், குமாரசூரியர் (சுவிஸ்), குணரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்-இலங்கை), காலஞ்சென்ற பரராஜசிங்கம், திருஞானம் (இலங்கை), மகாலிங்கம் (கனடா), மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற கனகலிங்கம், கனகேஸ்வரி (கனடா), அரசரெத்தினம் (கனடா), அன்னலட்சுமி (பிரான்ஸ்), மயில்வாகனம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயும், ஜெயலட்சுமி (இலங்கை), சரஸ்வதி(இலங்கை), மங்கையற்கரசி(இலங்கை), நிர்மலா (இலங்கை), காலஞ்சென்ற மல்லிகாதேவி, சே.யோகநாதன்(கனடா), குணேஸ்வரி(இலங்கை), ந.யோகநாதன் (கனடா), விஜயலட்சுமி(கனடா), வேலும் மயிலும் (பிரான்ஸ்), அருளினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், இந்திராகாந்தி-சிவலிங்கம்(சுவிஸ்), வதனா-ஞானசபேசன்(ஜேர்மனி), வாசுகி- ராஜன்(லண்டன்), நிமலன்-கவிதா(லண்டன்), பிரதீபன்(இலங்கை), ரதீபன்-யசோதா(சுவிஸ்), பிரபாகரன்- ஜலயா(கனடா), பிரமிளா-சுதாகர்(லண்டன்), சுபாசினி-சிவகுமாரன்(சுவிஸ்), சுதாகரன்-விஜிதா (பிரான்ஸ்), சுதர்ஷினி -கவிதாஸ்(கனடா), சுபாகரன்(பிரான்ஸ்), சுகிர்தன்-ஷாமிளா(பிரான்ஸ்), கஜன் (கனடா), செயந்தன் (பிரான்ஸ்), குகப்பிரியா(இலங்கை), நித்யா(இலங்கை), நிரஞ்ஷலா(கனடா), ரமேஸ்காந் (கனடா), லிங்ககாந் (கனடா), பிரியங்கா(கனடா), சஞ்சிகா(கனடா), கோகிலன்-சுகாஜினி(பிரான்ஸ்), குபேரன்(பிரான்ஸ்), கோமகன்(பிரான்ஸ்), விதுஷன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சோபனா(சுவிஸ்), சர்மினா(சுவிஸ்), சஸ்வினா(சுவிஸ்), சுகாசனா(ஜேர்மனி), சுகான்(ஜேர்மனி), ரோசானி (லண்டன்), ரோசான்(லண்டன்), பிரவீந்(லண்டன்), நிதுஷன்(லண்டன்), அஸ்வின்(லண்டன்), அர்னிஷ் (லண்டன்), அவிஷன்(லண்டன்), அவனீஸ்(கனடா), அத்தீஸ்(கனடா), அம்ருதா(லண்டன்), தக்ஷா(சுவிஸ்), யாகுலன்(சுவிஸ்), யதுரன்(சுவிஸ்), ஆதிஸ்(பிரான்ஸ்), கவின்(கனடா), கவினா (கனடா), ஆதவன்(கனடா) ஆகியோரின் அருமைப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, பாலசிங்கம், பூபதி, கருணைநாயகி, திருநாவுக்கரசு, குலசேகரம்பிள்ளை (சந்திரன்) மற்றும் கமலாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, நாகபூரணி, கணபதிப்பிள்ளை, நடராசா மற்றும் கண்மணி (சுவிஸ்), நாகரத்தினம்(கனடா), மனோன்மணி(கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணிவரை மகிந்த மலர்ச்சாலையில் (591, காலிவீதி, கல்கிசை) வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**16, 2/3 முதலாவது சப்பல் லேன்,**
**வெள்ளவத்தை.**
**0112589885**

(C/8934) (10,6,3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்



கொக்குவில் கிழக்கு, பொற்பதி றோட்டைச் சேர்ந்த சிவபாக்கியம் சுப்பிரமணியம் நேற்று (09.06.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குருகுலசிங்கம் மற்றும் மகேஸ்வரி(கனடா), தர்மகுலசிங்கம், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் (அம்பாள் ஸ்ரோர்ஸ்-திருநெல்வேலி), இராசலிங்கம் (இராசா ஸ்ரோர்ஸ் -திருநெல்வேலி) மற்றும் சண்முகரெட்ணம் (கனடா), சூரியகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தயானந்தன், மற்றும் பரிபூரணன்,(பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), கு.புஸ்பராணி, த.புஸ்பராணி, த.கலாநிதி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன், பிரபாலினி, பிருந்தா, பிரகாஸ்,சுவர்ணலதா, சுதர்ஷன், சுயதாஸ், சுலக்ஷனா, தயாளினி, தயானி,தயானா,துவாரகாஸ், ஜெயகவுதன், பிரகாஷ்,மிதுன்ராஜ், வினோத்ராஜ்,அருண்ராஜ், சரண்ராஜ், சோபிகா, ராஜீவநாத், நிஷாந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.06.2013) திங்கட் கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27A,பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(38180)(3.5.6)

தகவல்:
[illegible]

# மரண அறிவித்தல்கள்



## வீரசிங்கம் ரவீந்திரன்

துண்டி றோட்,கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் ரவீந்திரன் (08.06.2013) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் காந்திமதி தம்பதியரின் அன்பு மகனும், அன்னபாக்கியத்தின் (வவா) அன்புக் கணவரும், பிறேமராணி, விமலராணி, விஜயாராணி, புஸ்பாகரன்,செல்வராணி, விஜேந்திரன் (குட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசலிங்கம், ரமணநந்தன், சிவலிங்கம்,உதயகுமார், சாந்தி, தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜினா,நீனா,ராகவி, றோய், றொசானி, வேணுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், யீவிஷானா, ஜிலூர்ஷா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். அவரின் துக்க நினைவு கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சி.சிவலிங்கம்,
345/3, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை.

(38181)(3.5.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் இரத்தினவேல்

(ஆயுள்வேத வைத்தியர்)



கோப்பாய் தெற்கு, பழைய வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினவேல் நேற்று முன்தினம் (08.06. 2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகமுத்து தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், யோகநாதன், பத்மநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், வத்சலாதேவி, தனலட்சுமி (ஆயுள்வேத வைத்தியர்), சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும், ரிஷிகா, தர்ஷிகா, துர்க்காயினி, தர்மிகா, லக்சனா, கௌசல்யா, பிரணவன், பிரசன்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.06.2013) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழைய வீதி, கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

(38177) (10,6,3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பாஸ்கரன் மதிவதனி(பாப்பா)

***(ஆங்கில ஆசிரியை, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி)***



காங்கேசன்துறை காட்டடைப்பைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாஸ்கரன் மதிவதனி நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் ஏக புதல்வியும் அம்பனை தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், பாஸ்கரன் (சங்கன் லங்கா HSE அதிகாரி)அவர்களின் அன்பு மனைவியும், வனமாலி (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சக்திவிடங்கன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், பாலமுரளியின் அன்புச் சகோதரியும், ஸ்ரீதரன் (ஆதித்தன் கட்டட ஒப்பந்தகாரர்), பத்மாவதி (தாதிய உத்தியோகத்தர்), ஸ்ரீநாதன் (ரவி), கருணாவதி, ஜெகவதி (ஜேர்மன்), பூபதி (கொழும்பு), ஸ்ரீகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை கட்டப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மல்லாகம்** (சி/9660)(2.6.3) **தகவல்: குடும்பத்தினர்.**

## திருமதி ஞானம்மா அருளப்பு



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா அருளப்பு (06.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி அருளப்பு வின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அலெக் சாண்டர்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தம் அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மேரி நவமணி அவர்களின் மைத்துனியும், டெய்சி பற்றிமா (ஓய்வுபெற்ற ஆசிரியர்- வெஸ்லி கல்லூரி- கொழும்பு), ஸ்ரீபன் (லண்டன்), அன்ரனிதாஸ் (கனடா), அருள்தாஸ் (லண்டன்), மேரிலூட்ஸ், மேரி யசிந்தா ஆகியோரின் அன்புத் தாயும், மனோகரன் (ஓய்வுபெற்ற சுகாதார இணைப்பதிகாரி, முன்னாள் முகாமையாளர் சினிமாஸ் லிமிட்டட் கொழும்பு) சரோஜினிதேவி (கனடா), வசந்தா (லண்டன்), ரவீந்திரன், பமிலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், மரீனா, பிறின்சி, கலிஸ்ரா, வானுசன், ஜெனி, சாரா, டேவிட், ஸ்ரெபினி, சரண்யா, யனு, வின்சன், பிரசாத், டன்சி, டன்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2013) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இல்ல ஆராதனை நடைபெற்று, ஏழாலை புனித இசிதோர் தேவாலயத்தில் மு.ப 10 மணிக்கு திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித இசிதோர் சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

104/18A Sangamitha Mawatha,
Kotahena, Colombo-13.
[illegible]263, 021 205 9066 (38141)(3.6.11)

தகவல்:
பிள்ளைகள், குடும்ப உறவினர்
ஏழாலை மேற்கு, ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்துகிறது உண்ணிக் காய்ச்சல்

### 5 மாதங்களில் 227 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
கடந்த 5 மாதங்களில் 227 பேர் உண்ணிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகளவாக மார்ச் மாதத்திலேயே 80 பேர் உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரியில் உண்ணிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள சந்தேகத்தில் 76 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 59 பேருக்கு உண்ணிக் காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

பெப்ரவரியில் 32 பேர் இவ்வாறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 26 பேர் பாதிப்பு குறித்து உறுதிப்படுத்தப்பட்டனர். மார்ச் மாதத்தில் இவ்வாறு 100 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 80 பேருக்கு உண்ணிக் காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஏப்ரலில் 78 பேர் .இவ்வாறு இனங்காணப்பட்டு, அவர்களில் 59 பேர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அதே சமயம் மே மாதத்தில் இதுவரை 3 பேர் இந்தக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவு ரீதியாக அதிகளவாக உடுவில், சண்டிலிப்பாய் பகுதிகளில் தலா 42 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். கோப்பாயில் 40 பேரும், சாவகச்சேரியில் 26 பேரும், யாழ்ப்பாணத்தில் 24 பேரும், சங்கானையில் 17 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

---

குடிசைக் கைத்தொழிலுக்குத் தெரிவான

# பயனாளிகளின் விவரத்தை கோருகிறது யாழ். செயலகம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்.மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் குடிசைக் கைத்தொழிலுக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் தற்போதைய நிலவரம் குறித்து விவரங்கள் தயாரித்து அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட செயலகத்தால் கோரப்பட்டுள்ளது.

பயனாளிகளுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மூலப் பொருள்கள், உபகரணங்கள் என்பன கடந்த வருடமும் இந்த வருடமும் வழங்கப்பட்டன.

பயனாளிகள் தாம் பெற்ற பொருள்களை உரிய முறையில் பயன்படுத்துகிறார்களா என அண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் மூலம் விவரங்களைப் பெற்று அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் இதுவரை கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்தவர்கள், கைத்தொழில் முயற்சியை ஆரம்பித்து இடைநடுவே கைவிட்டவர்கள் மற்றும் கைத்தொழில் முயற்சிகளை இதுவரை ஆரம்பிக்காதவர்கள் எனத் தனித்தனியே பட்டியலிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

---




செம்மணிப் பாலத்தின் திருத்த வேலைகள் ஒப்பந்தகாரரால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 'பாலம் திருத்த வேலையில்' என்ற அறிவித்தல் பலகையும் பாலத்தின் மேல் மூடிகள் அமைக்கப்பட்டுள்ளதை ஒடுக்கமான தற்காலிக பாதையூடாக 'டிப்பர்' வாகனம் செல்வதையும் காணலாம். (ஒ-51)

---

## கோரியடி இந்து மயானம் விரைவில் புனரமைப்பு

வடமராட்சி, ஜூன் 10
பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் உள்ள ஒரே ஒரு இந்து மயானமான கோரியடி இந்து மயானம் சபை நிதியிலிருந்து 15 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட வுள்ளது.

அடிப்படை வசதிகள் எதுவும் இன்றியுள்ள இம் மயானத்துக்குத் தண்ணீர் பெறுவதற்கான கிணறு இளைப்பாறு மண்டபம், தகனக் கிரியை மேற்கொள்ளப்படும் இடத்தில் மிக உயரமான கொட்டகை போன்றவை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக எந்தவித வசதிகளும் அற்ற இந்த மயானத்துக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் சபை செய்து கொடுக்கவுள்ளதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ-8)

---

## நல்லொழுக்க நிறுவன சமூக பணிகள் வடமராட்சி கிழக்கிலும் விஸ்தரிப்பு

வடமராட்சி, ஜூன் 10
வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சமூக மேம்பாட்டுப் பணிகளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கும் விஸ்தரிக்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக மருதங்கேணிப் பகுதியில் சில திட்டங்களை முன்னெடுக்க 3 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இதேவேளை வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பகுதிகளில் மூவர் கொண்ட குழுக்களாக இணைந்து சேமிப்பில் ஈடுபடுவோருக்கு சேமிப்பில்இருந்து5மடங்குதொகையை சுயதொழில் கடனாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் சுயதொழிலாக பனங்கட்டி உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு கடனுதவிகளை வழங்கி பனங்கட்டி உற்பத்தியை அதிகரிக்கவும், சுயதொழிலை ஊக்குவிக்கவும் நிறுவனம் தீர்மானித்துள்ளது. (வ-8)

---

## ஜூன் 30 இற்கு முன் ஆக்கத்திறன் கண்காட்சியை நடத்தி விடுங்கள்

தென்மராட்சி, ஜூன் 10
தென்மராட்சிக் கல்வி வலயத் துக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண் காட்சிகளை ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

மாகாண மட்ட முன்பள்ளி சிறார்களின் ஆக்கப் பொருள் களின் கண்காட்சி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் குடும்ப முன் பள்ளி மட்டம் , பிரதேச மட்டம், வலய மட்டம் ஆகிய நிலைக ளில் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

---

மாணவருக்கு இலவச கண் பரிசோதனை எனக் கூறி

# பணத்தைச் சூறையாடி வரும் தனியார் கண்ணாடி நிறுவனங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10
பாடசாலை மாணவர்களிடம் இலவச கண் பரிசோதனை எனக்கூறி பெரும் தொகையான பணத்தை தனியார் கண்ணாடி நிறுவனம் ஒன்று சூறையாடி வருவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலைகளில் இவ்வாறான பணம்பறிப்பு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இலவசக் கண் பரிசோதனை செய்வதாக அனுமதி கோரி பாடசாலைகளுக்குள் உள்நுழையும் குறித்த தனியார் கண்ணாடி நிறுவனம் கண் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் கண்ணாடி போட வேண்டும் எனக் கோரி பெற்றோர்களை அழைத்து பணத்தை அறவிடுமாறு கூறுகின்றனர்.

கடந்த வருடமும் வெளிமாவட்டங்களில் இருந்து குறிப்பிட்ட நிறுவனங்கள் அரச திணைக்களங்களுக்கும் கிராம அலுவலர் பணிமனைகளுக்கும் சென்று கண் பரிசோதனையின் பின்னர் பெரும் தொகையான பணத்தைப் பெற்றுக் கொண்டு தரமற்ற கண்ணாடிகளை வழங்கிச் சென்றுள்ளனர். இந்த நிலையில் இந்த வருடம் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று குறிப்பிட்ட தனியார் நிறுவனம் ஒன்று இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பில் பாடசாலைகளின் நிர்வாகம் விழிப்புடன் செயற்படுமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-14-86)

---

# ஐம்பது பனைகள் தறித்து நாசம் சுற்றிவளைப்பில் ஒருவர் சிக்கினார்

### மரங்களையும் கைப்பற்றினர் பொலிஸார்

பளை, ஜூன் 10
பளை சஞ்சீவி காட்டுப் பகுதியில் அரச காணிகளில் சட்டவிரோதமாக 50க்கு மேற்பட்ட பனைகள் தறித்தவர்களில் ஒருவர் பளைப் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டார்.

சஞ்சீவி காட்டுப் பகுதியில் அரசுக்கு சொந்தமான காணியில் சட்டவிரோதமாக பனை மரங்கள் தறிக்கப்படுவதாக பொது மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

அதனை அடுத்து பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த போது அங்கு நின்றவர்களில் இருவர் தப்பியோட ஒருவரை பொலிஸார் பிடித்தனர்.

தறித்து வைத்திருந்த பனை மரங்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட நபரை பளைப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (எ-9)



---

## பருத்தித்துறை வீதியில் 3 பஸ் தரிப்பு நிலையங்கள்

### வலி.கிழக்கு பிரதேச சபை ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஜூன் 10
பருத்தித்துறை வீதியில் 3 புதிய பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆவரங்கால், புத்தூர் நிலாவரை மற்றும் கோப்பாய் கைதடி வீதி போன்ற இடங்களில் குறித்த பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

பருத்தித்துறை வீதியில் அதிகமான பஸ்தரிப்பு நிலையங்கள் வீதி அகலிப்புக்குள் சிக்குண்டதால் அவை அங்கிருந்து அகற்றப்பட்டன.

எனவே குறித்த பஸ்தரிப்பு நிலையங்களை மீள அமைக்கும் பணியில் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே தற்போது இந்த வீதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பு நிலையங்களை புனர்நிர்மாணம் செய்யும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பிரதான வீதியில் போதியளவான பஸ்தரிப்பு நிலையங்கள் இல்லாததால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (வ-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## லொறி விபத்தில் நால்வர் காயம்


மட்டக்களப்பு,ஜூன் 10
பத்திரிகைகளை ஏற்றிக்கொண்டு வந்த லொறி ஒன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானதில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து சனிக்கிழமை இரவு, ஞாயிற்றுக்கிழமைக்குரிய பத்திரிகைகளை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நோக்கி வந்துகொண்டிருந்த லொறியின் முன் சில்லு டயர் தம்புள்ள பகுதியில் வெடித்துள்ளது. அதன்போதே 4 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)




மட்டக்களப்பின் புறநகரான மண்முனை பிரதேச செயலர் பிரிவுக்குட்ட பாலமீன்மடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மதுபான சாலைகளை மூடுமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-ரி)

## உண்டியல் உடைப்பு; ஒருவர் மாட்டினார்



மட்டக்களப்பு,ஜூன் 10
மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் கோயில் உண்டியலை உடைத்து திருடியதாக சந்தேகப்படும் நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
வெல்லாவெளி பிரதேசத்திலுள்ள முருகன் ஆலய உண்டியலை இனம்தெரியாத சிலர் உடைத்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார்,சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர். (ச)

### நிலைமையை விளக்கியதன் பின்னர்

# அமெ.நிலையம் அமைக்க மாகாணசபை அனுமதி

திருகோணமலை,ஜூன் 10
சர்ச்சைக்குரிய விடயமாகப் பேசப்பட்ட திருகோணமலையின் அமெரிக்க நிலையத்துக்கு கிழக்கு மாகாணசபை அனுமதி வழங்கியுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் இயங்கும் திருகோணமலை நகர சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் இந்த நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
எனினும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கோ, கிழக்கு மாகாணசபைக்கோ அறிவிக்கப்படாத நிலையில் திருகோணமலை நகரசபையுடன் அமெரிக்க தூதரகம் செய்துக்கொண்ட உடன்படிக்கை சட்டவிரோதமானது என்று தெரிவித்து இந்த உடன்படிக்கையை இலங்கை அரசு இடைநிறுத்தியிருந்தது.
எனினும் அமெரிக்க தூதரகம் இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதன் பின்னர் தற்போது அமெரிக்கன் நிலையத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் தெரிவித்தார். (ச)



திருகோணமலையில் அமெரிக்கத் தகவல் நிலையத்தை அமைக்க அண்மையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## சில்லில் சிக்கி குழந்தை சாவு



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணியில் பஸ்ஸின் சில்லில் சிக்கி 2 வயதுக் குழந்தை உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.
ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களுவன்கேணி, காளி கோயில் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில், புஸ்பராசா சதுர்நிஸா (வயது-2) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸைச் சாரதி பின்புறமாகச் செலுத்தியபோது குழந்தை பஸ்ஸின் சில்லில் சிக்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-23-ரி)

## கிழக்கு மாகாணத்தில் அப்துல்லாஹ் பல்கலை

### அடுத்தவாரம் ஒப்பந்தம் கைச்சாத்து



காத்தான்குடி, ஜூன் 10
அரசின் பூரண ஆதரவுடன் புதிய மலிக் அப்துல்லாஹ் பல்கலைக்கழகத்தை கிழக்கு மாகாணத்தில் அமைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தப் பல்கலைக்கழகம் இலங்கையில் வாழும் வறிய மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்கு பூரண வசதிகள் வழங்கி, மட்டக்களப்பு காத்தான்குடியில் அமைக்கப்படவுள்ளது.
இதற்கான ஒப்பந்தம் அடுத்தவாரம் கைச்சாத்திடப்படவுள்ளது. தேசிய ரீதியில் இயங்கவுள்ள இந்தப் பல்கலைக்கழகம் விரைவில் சர்வதேச பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படவுள்ளது- என்றார். (ச-ரி)

## மக்கள் முறைப்பாட்டுக் குழுவை நியமித்தது கிழக்கு மாகாணசபை

திருகோணமலை,ஜூன் 10
மக்களின் நன்மை கருதி பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவை கிழக்கு மாகாணசபை நியமித்துள்ளது.
இந்தக் குழுவின் தலைவராக சபையின் தவிசாளர் டபிள்யு. ஜி. எம். ஆரியவதி கலப்பதி நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக எஸ்.தண்டாயுதபாணி, எம்.எஸ்.உதுமாலெப்பை, ஏ.எம். ஜெமீல், என்.ஜி.டபிள்யு.எம்.ஜயந்த விஜேசேகர,ஆரிப் சம்சுதீன், ரி.நவரெட்னராஜா, ஏ.எல்.எம்.நஸீர், ரி.கலையரசன், இ.துரைரெட்ணம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை பிரதேச சபைகளில் வைக்கப்பட்டிருக்கும் 'பொதுமக்கள் முறைப்பாட்டுப் பெட்டி'யினுள் இடுவதன் மூலம் தமது முறைப்பாட்டைத் தெரிவித்துக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## வீதியை செப்பனிடுவது அபிவிருத்தியாகுமா?

### ஜனா கேள்வி




மட்டக்களப்பு,ஜூன் 10
பாதை, விமான நிலையங்கள் ஆகியவற்றை செப்பனிடுவது அபிவிருத்தியாகுமா? அபிவிருத்தி என்பது ஆட்சி செய்யும் அரசின் கடமை. அபிவிருத்தி மட்டுமல்ல எங்களுடைய மொழி, கலாசாரம், பண்பாடு உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பது எமது கடமை என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.
உன்னிச்சை, நெடியமடுவில் நடைபெற்ற அந்தப் பிரதேச கிராம அபிவித்திச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எனக்குப் பணமோ, பட்டமோ, பதவியோ அவசியமல்ல. துன்பப்படுகின்ற மக்களின் இடங்களுக்குச் சென்று சேவை செய்யவேண்டும் என்பதே அவசியமாகும்.
இன்றைய குடும்ப ஆட்சி, பாதைகளையும், விமான நிலையங்களையும் செப்பனிட்டு விட்டு எமது நாடு அபிவிருத்தி கண்டுவிட்டது என்று சொல் வது முழு அபிவிருத்தி ஆகுமா?
அபிவிருத்தி என்பது ஆட்சி செய்யும் அரசின் கடமை. சொந்தப்பணத்தில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. -என்றார். (ச)

## திருமலை விநாயகர் ஆலய கோபுரப் பாவைகள் சேதம்

### இனம்தெரியாதோரால் அடாவடி

திருகோணமலை, ஜூன் 10
திருகோணமலை, திருஞான சம்பந்தர் வீதியில் உள்ள கற்பக விநாயகர் ஆலயத்தில் நிர்மாணிக் கப்பட்டு வரும் கோபுரத்தில் 13 பாவைகள் இனம் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது என்று ஆலய பரிபாலன சபையின் செயலர் ஏ.நடராசா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
கிழக்கில் இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டும், திருடப்பட்டும், குருக்கள்மார் கொல்லப்பட்டும் வரும் சம்பவங்கள் தமிழர் மீதான வெறித்தனத்தின் ஓர் அங்கமாகவே பார்க்கப்படுகின்றது.
இவை ஒரு திட்டமிட்ட கலாசாரக் கொலையாகும். இன்று திருகோணமலையில் நடந்த சம்பவமும் அதன் ஒரு தொடர் சம்பவம்தான் என்று கூறப்படுகிறது. மட்டக்களப்பில் அண்மையில் மூன்று ஆலயங்கள் இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி சபையினருக்கு தீர்வையற்ற வாகனங்கள்



கொழும்பு,ஜூன் 10
வடக்கு ,கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் முதல்வர், உதவி முதல்வர், தவிசாளர், உதவித் தவிசாளர் ஆகியோருக்கு தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

வாகனங்களை இறக்குமதி செய்ய விரும்பாதவர்களுக்கு உள்ளூரில் பொருத்தப்பட்ட வாகனங்களை தவணை அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.
அதன்மூலம் யாழ்ப்பாணம் மாநகரசபை, வவுனியா நகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை, ஏறாவூர்பற்று பிரதேச சபை, கோரளைப்பற்று பிரதேசசபை, கோரளைப் பற்று வடக்கு பிரதேச சபை, மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேசசபை, மண் முனை பிரதேசசபை, மண் முனை தென்மேற்கு பிரதேச சபை, போரதீவுபற்று பிரதேச சபை ஆகியவற்றின் தலைமை அதிகாரிகள் நன்மை பெற வுள்ளனர். (ச)

# புதிய கல்வித் திட்டம் 15 இல் நடைமுறைக்கு

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 10
தொழில் வாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட தொழில்நுட்ப விஞ்ஞானத்துறை சார்ந்த புதிய கல்வித்திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
வணிகம், தொழில்நுட்பம், பொறியியல் என மூன்று அம்சங்களைக் கொண்டதாக இந்தப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.
களுத்துறையில் சனிக்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முன்னர் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 100 மாணவர்களுக்கு 15 வீதமானோரே சித்தியடைந்தனர்.
இந்த எண்ணிக்கை தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் 100 மாணவர்களுக்கு 49 ஆக அதிகரித்துள்ளது.
கல்வித்துறை மாற்றங்களின் போது எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வழி வகுக்கும் பாடங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படும்.




நாட்டில் முன்னெப்போதும் இல்லாதவகையில் கல்வித் துறையில் முன்னேற்றம் காணப்படுகிறது. கடந்த 17 வருடங்களுக்கு முன்னர் கல்வித்துறை கண்டிருந்த வீழ்ச்சி தற்போது சரி செய்யப்பட்டு வருகிறது.- என்றார். (ச)

## பிரகீத் எக்னெலிகொட எமது நாட்டில் இல்லை

### பிரான்ஸ் தூதரகம் அறிவிப்பு



கொழும்பு,ஜூன் 10
இலங்கையில் காணாமல் போனோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தமது நாட்டில் வசிப்பதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை என்று பிரான்ஸ் அறிவித்துள்ளது.
இந்தத் தகவலை இலங்கையில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தின் பேச்சாளர் வெளியிட்டுள்ளார்.
ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அருண்திக்க பெர்ணான்டோ, தமக்கு பிரான்ஸில் வசிக்கும் இலங்கை ஊடகவியலாளர் வெடிவர்த்தன என்பவர், பிரகீத்தை அறிமுகப்படுத்தியதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
எக்னெலிகொட, தலை மொட்டையடித்து ஆள் தெரியாத நிலையில் இருந்ததாகவும் அவர் கூறினார்.
எனினும் அருந்திக்கவின் தகவலை ஊடகவியலாளர் வெடிவர்த்தன மறுத்துள்ளார். அருந்திக்க பொய் கூறுவதாக அவர் குறிப்பிட்டார்.
இந்தநிலையில் பிரான்ஸ் தூதரகமும் தமது தகவலை வெளியிட்டுள்ளது.
இதேவேளை அருந்திக்கவின் தகவல் தொடர்பில் அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று பல்வேறு ஊடக நிறுவனங்களும் கட்சிகளும் அரசைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)




களுத்துறை மகளிர் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்த பின்னர் அங்கு கல்வி பயிலும் மாணவி ஒருவருடன் உரையாடினார். அருகில் அமைச்சர் பந்துல குணவர்தன அமர்ந்திருக்கின்றார். (ச-ரி)

## சூறாவளி ஆபத்து இல்லை

### அடுத்த ஒரு வாரத்துக்கு காற்றுடன் மழை நீடிக்கும்


**தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி காலநிலை ஆரம்பித்துள்ளதால் மழையும் காற்றும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கும்.**

கொழும்பு,ஜூன் 10
நாட்டின் தென் மேற்கு பிரதேசத்தில் மன்னார் முதல் பொத்துவில் வரை கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக கடற்கரையோரத்தில் வீசும் கடும் காற்று அதிகளவு சேதத்தை ஏற்படுத்தினாலும்,இலங் கைக்கு சூறாவளி ஆபத்து எதுவும் இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தற்போது தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை காலநிலை ஆரம்பித்திருப்பதால்தான் மழையுடன் கூடிய கடும் காற்று வீசுவதாகவும் மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் மழையும் காற்றும் அடுத்த ஒருவார காலத்துக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச)



## நொக்கியா வரை படத்தில் மாத்தளை 'முஸ்லிம் நகரம்'

கொழும்பு,ஜூன் 10
இலங்கையின் மாத்தளை நகரம் நொக்கியா வரைபடத்தில் முஸ்லிம் நகரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாத்தளை நகரம், பிரித்தானியர்களுக்கு எதிரான 1848 ஆம் ஆண்டு புரட்சியின்போது முக்கியமான நகராகக் கருதப்பட்டது.




இந்த நகரத்திலேயே வீரபுரன் அப்பு, மொனராவில, கெப்பிட்டிப்பொல, கொங்கலகொட பண்டா போன்ற தேசிய வீரர்கள் வாழ்ந்ததாக சிங்கள வரலாறு கூறுகிறது.
இந்தநிலையில் மாத்தளையை நொக்கியா வரைபடம், முஸ்லிம் நகரம் என்று குறிப்பிட்டுள்ளது. அதனையடுத்து குறித்த பிரச்சினை அடுத்தவாரத்தில் சிங்கள அடிப்படை வாதிகளால் பெரிதாக முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## கலாசாரங்களை சீர்குலைக்க சமூக மட்டத்தில் தீயசக்திகள்

### எச்சரிக்கையாக செயற்பட வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூன் 10
கலாசாரங்களை சீர்குலைக்க சமூக மட்டத்திலும், பாடசாலை மட்டத்திலும் செயற்படும் சக்திகளிடமிருந்து எச்சரிக்கையாக செயற்படுவது அவசியம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
களுத்துறை மகளிர் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டு மாணவிகளின் உபயோகத்துக்குக் கையளிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
உரிமை, சுதந்திரம் என்பவற்றை தவறாக அறிமுகப்படுத்தி மோசமானவற்றை பாடசாலைகளில் ஊடுருவச் செய்ய முயற்சிப்போரிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பது முக்கிய பொறுப்பாகும்.
பெண்கள் எதிர்காலத்தில் அரசியல் நிர்வாகத்திலும் நிறுவன நிர்வாகத்திலும் பொறுப்பான கடமைகளை நிறைவேற்ற தம்மைத் தயார் செய்வது முக்கியம்.
ஆண்களை விட பெண்கள் தற்போது சகல துறைகளிலும் அதிகரித்து வருவதைக் காண முடிகிறது.
அரச துறையில் பட்டதாரிகளுக்கான கடமைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் இவ்வாறு அரச துறைகளில் நியமனம் பெற்றுள்ளனர்.
மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துவது போன்று விளையாட்டு உள்ளிட்ட ஏனைய துறைகளிலும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
தற்போதைய பெண்களை விட எதிர்காலத்தில் பெண்களுக்கான பல பொறுப்புக்கள் உள்ளன. சமூகப் பிரச்சினைகள் பல படிப்பினைகளை எமக்கு உணர்த்துகின்றன. -என்றார். (ச-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வாக்காளர் பதிவு நீடிப்பு நமக்கு நாமே உதவுவோம்

**2013** ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவை மேற்கொள்ள வேண்டிய காலம் அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி [ஜூலை 15 ஆம் திகதி] வரை நீடிக்கப்பட்டுள்ளது. தேர்தல் திணைக்களத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம், வாக்காளர் பதிவுக்கான இறுதி நாள் இம்மாதம் பதினைந்தாம் திகதியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

மேற்கண்ட கால அவகாசத்தை நீடித்து, இதுவரை வாக்காளர் பதிவில் அக்கறை கொள்ளாமல் இருந்தவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், தேர்தல் திணைக்களம் ஒரு மாத கால நீடிப்பு வழங்கி உள்ளது.

அதனை மனதிற்கொண்டு, பதினெட்டு வயதை அடைந்தவர்களும் இதுவரை தமக்கு உள்ள பிரதான உரிமையை நிலைநிறுத்துவதில் அக்கறை கொள்ளாதிருந்தவர்களும் தேர்தல் திணைக்களம் வழங்கிய வசதியை தவறாது பயன்படுத்த வேண்டும். ஆர்வத்துடன் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது.

அந்தந்தத் தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளுக்கும் மற்றும் நாடாளுமன்றத்துக்கும் வாக்குரிமை உள்ளவர்களே தாம் வாழும் பகுதிகளுக்கு உரிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குத் தகுதி பெற இயலும்.

சுமார் மூன்று தசாப்த கால உரிமைப் போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் காரணமாக தமிழ்ப் பிரதேசங்களின் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைப் பிரதேசங்களில் வாழும் மக்களில் வசிக்கும் மிகப் பெரும் எண்ணிக்கையான மக்கள், தமக்குள்ள ஜனநாயக உரித்தான, உரிமையான வாக்குரிமையை இழந்து நிற்கிறார்கள். ஜனநாயக உரிமைகளுக்கு மூலவேரான வாக்குரிமையை இழந்து நிற்கிறார்கள்; பறிகொடுத்துவிட்டார்கள் என்றும் கூறலாம்.

அதனால், இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பை, சந்தர்ப்பத்தை 'லபக்'கென பிடித்துக் கொள்வது தவிர்க்க முடியாத கடமையாகும். அதற்கான உணர்வு சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் பிறக்க வேண்டும்.

வடமாகாணத்தை எடுத்துக் கொள்வோமானால் ஒரு மாநகர சபையும், ஐந்து நகர சபைகளும் இருபத்தேழு பிரதேச சபைகளும் இயங்குகின்றன.

அவற்றை உள்ளடக்கியனவாக நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன.

அவை எல்லாவற்றையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணிபுரிகிறார்கள்.

உள்ளூராட்சி சபைகளின் வளர்ச்சிக்கு உதவவும், நாடாளுமன்றத் தொகுதிகளின் வளர்ச்சிக்குமான நிதி வளங்கள், வாக்காளர்களின் எண்ணிக்கையின் விகிதத்துக்கு ஏற்பவே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

வாக்குரிமைக்கான வயதை அடைந்த அனைவரும் தம்மைப் பதிவு செய்து வாக்குரிமையைப் பெற்றுக் கொள்வது எக்காரணம் கொண்டும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். வாக்காளர்கள் தமது விருப்பப் பிரகாரம் எந்தக் கட்சிக்கும் அல்லது வேட்பாளருக்கும் தமது பெறுமதி வாய்ந்த வாக்கை வழங்கலாம், பயன்படுத்தலாம்; அதனைத் தீர்மானிப்பது வாக்காளரே; எவரும் நிர்ப்பந்திக்க முடியாது.

மூன்று தசாப்தங்களாக வாக்குரிமை குறித்து மறந்து போயிருந்ததால், இப்போதும் அதில் ஆர்வம் குன்றக் கூடாது. வாக்காளராகப் பதியும் பிரசைகளுக்கான பிரதான கடமையை அலட்சியப்படுத்தும் போக்கு, அதன் விளைவு என்பன கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மிக வெளிச்சமாகத் தெரிந்தன.

வடக்கில் கடந்த 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான [2011] தேர்தலில் 434560 பேர் வாக்குரிமை பெற்றிருந்தும் அவர்களில் 45 வீதமானோர் மட்டுமே வாக்களித்தனர் என்பது புள்ளி விவரம்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் காலத்துக்கு முன்னர் 3,31, 214 பேர் [தேர்தல்] மாவட்டத்தை விட்டு பல்வேறு காரணங்களால் [விலகிச்] சென்றதால் அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்ததை மனதில் கொள்ள வேண்டிய வேளை இது.

புதிதாக, வாக்காளர்களாவதற்குத் தகுதி பெற்ற பதினெட்டு வயதுக்கு கீழ்ப்பட்ட அனைவரும் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இடம்பெறச் செய்வதில் சுய ஈடுபாடு கொள்ள வேண்டும். தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யத் தகுதி உடைய அனைவரும் அதில் மனம்கொண்டு ஈடுபாடு காட்ட வேண்டும். அது அவர்களுக்கு உரிய உரிமை.

வாக்காளர் பதிவுக்கு, அதன் பாற்பட்ட நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது, அதற்குத் தகுதி உடைய ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமை. அந்த உரிமையைப் பயன்படுத்துவதில் இருந்து நாம் விலகிக் கொண்டால் நட்டம் நமக்கே; நமது பிரதேசத்துக்கே என்பதனை அவர்கள் உய்த்துணர வேண்டிய தருணம் இது.

2009 ஆண்டில் 8,16,005 ஆகப் பதியப்பட்டிருந்த வாக்காளர் எண்ணிக்கை 2011 இல் 4,84,791 ஆகக் குறைவடைந்தது போன்ற நிலைமை,தொடராது தடுப்பது முழுக்க முழுக்க எங்கள் பொறுப்பே. வாக்குரிமைக்குத் தகுதியான ஒவ்வொருவரும் அதில் மனங்கொள்ள வேண்டும்; அதன் வழி கட்டாயமாகச் சுயவிருப்புடன் செயற்பட வேண்டும்.

# அரசமைப்பு திருத்தம்: முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள தலையிடி

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து

கோகுலன்

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடமாகாண சபைத் தேர்தல் வரும் செப்ரெம்பரில் நடைபெறுமென்று சம்பிரதாயபூர்வமாக அறிவித்தார். தேர்தலுக்கு முன்பாகவே அரசமைப்பில் இரண்டு விடயங்கள் தொடர்பான திருத்தங்கள் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். இந்தக் கட்டத்தில் தேசிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச, 13 ஆவது திருத்தத்தின் கீழ் இப்போது மாகாண சபைகளால் அனுபவிக்கப்பட்டு வரும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களுக்கு என்ன நடக்கும் என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு அமைச்சர் ஜி.எல். பீரிஸிடமிருந்து பதில் வந்தது. சட்டத்துறை பேராசிரியரான பீரிஸிடம் ஜனாதிபதி அவசியம் ஆகும்போது சட்டவிடயங்கள் தொடர்பாக ஆலோசனை கேட்பது வழக்கமே. அவர் கூறினார் அரசமைப்புக்கு 17,18 ஆவது திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதன் விளைவாக மாகாண சபைகளுக்கு இருந்த பொலிஸ் காணி அதிகாரங்கள் செயல் இழந்துபோய்விட்டன என்று.
இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து அமைச்சரவைக்குக் கருத்துத் தெரிவிக்கும்படி பேராசிரியர் பீரிஸ் ஏற்கனவே கோரப்பட்டிருப்பது தெரிந்ததே. இப்பொழுது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு பிரிவு சட்டவாளர்களின் கருத்துடன் பீரிஸ் ஒத்த கருத்தை வெளியிட்டார்.
அமைச்சர் வீரவன்ச சட்ட அறிஞர் அல்லாவிட்டாலும் பீரிஸின் கருத்துடன் முரண்பட்டார். பொலிஸ், காணி சட்டங்கள் செயல் இழந்துவிட்டதாகக் கருதப்படுவதானது சட்ட ரீதியாக உறுதிப்படுத்துவதாக இல்லை என்று வாதிட்டார். அவருடன் விவாதத்தில் கலந்துகொண்ட ஜே.எச்.யு.கட்சியின் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறுகையில்;
17,18 ஆவது அரசமைப்புத் திருத்தங்களின் காரணமாக பொலிஸ் ஆணைக்குழு செயல் இழந்து போனாலும் கூட மாகாண சபைகளுக்கான பொலிஸ் படைதொடர்பான குறிப்புரைகள் தொடர்ந்து இருக்கவே செய்கின்றன. எனவே அரசமைப்பின் ஒரு பிரிவாக மாகாண சபைகளுக்கான பொலிஸ் படை இருக்க முடியாது என்று வாதிப்பதில் அர்த்தமில்லை என்றார்.
இந்தக் கட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முக்கியமான ஓர் அறிவித்தலை வெளியிட்டு 17 ஆவது மற்றும் 18 ஆவது அரசமைப்புகளின் காரணமாக மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லாமல் போய் விட்டனவா என்பது குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றை பெறுவது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவித்தார்.
ஒரு சட்டம் தொடர்பாக ஜனாதிபதிக்கு சந்தேகம் ஒன்று எழும் சந்தர்ப்பங்களில் அது குறித்து உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றை அவர் நாடமுடியும் என்பதாக அரசமைப்பின் 129(1) பிரிவு கூறுகின்றது.
அதன் பிறகு 13 ஆவது திருத்தம் [illegible] பாகவும் ம்க்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் எழுப்புகின்ற கேள்விகள் அனைத்தையும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் விவாதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.
தமிழ் மக்கள் பிரச்சினைகள் மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பாக ஆலோசித்து முடிவெடுப்பதற்கென நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை உருவாக்குவதற்கு நாடாளுமன்றம் ஏற்கனவே தீர்மானம் எடுத்துள்ளது.
அரசு தரப்புக் கட்சிகள் அந்தக் குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்களை இன்னமும் வெளியிடவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு எதிர்க்கட்சிகளும் பங்குபற்றுவதற்கு மறுத்து வருகின்றன. அந்தக் குழுவை நேரகாலத்துடன் நியமிப்பதை தாங்கள் வரவேற்பதாக ஜே.எச்.யுவைச் சேர்ந்த உதய

> திருத்தங்களை ஆதரிக்க மறுத்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து வெளியேற வேண்டும். இல்லை அவைகளை ஆதரித்து நின்றாலோ பேராளர் மாநாட்டின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுவதான நிலைமை ஏற்படும்.

கம்பில தெரிவித்திருக்கிறார். வடமாகாணத் தேர்தலுக்கு முன்னர் இந்த விடயம் தெரிவுக் குழுவில் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.
எதிர்க்கட்சியினர் கலந்துகொள்ள விரும்பாவிட்டாலும் குழு கூடி முடிவெடுக்க வேண்டும் என்பதில் அந்தக் கட்சி தீவிரமாக இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் கலந்து கொள்ளாவிட்டாலும் அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கவோ கோரிக்கைகள் வைக்கவோ உள்ள தார்மிக உரிமையை அது இழந்துவிடும் என்றார் கம்பில.
அரசின் பங்காளி கட்சிகளில் ஒன்றான முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் அந்தக் கூட்டத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.
அம்மானில் சிறு அறுவைச் சிகிச்சையொன்றை செய்துகொண்டு அங்கு சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு கொழும்பு திரும்பிய அந்தக் கட்சியின் தலைவர் ஹக்கீம் நேரடியாக அலரிமாளிகைக்குச் சென்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வாராந்தர அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார். அரசமைப்புக்கான அமைச்சர் பீரிஸின் இரண்டு திருத்தங்களும் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அமைச்சரவைக்குள் அவர் பிரவேசித்தார். அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஏற்கனவே குறித்த திருத்தங்கள் தொடர்பாக ஆலோசிக்க போதிய அவகாசம் தேவையென்று கூட்டத்தில் தெரிவித்திருந்தார். எந்த வித தீர்மானமும் எடுப்பதை பிற்போடும்படி அவர் வலியுறுத்தினார்.
அமைச்சர் ஹக்கீம் குரல் எழுப்புகையில் திருத்தம் கொண்டு வரப்படுவதானது மாகாண சபையையே ஒழித்துவிடுவதாக அமைந்து விடும் என்று வாதிட்டார். ஜனாதிபதி தலையிட்டு அதில் காணப்படும் சிலவற்றால் நாடாளுமன்றமும் கூட பலவீனமடைவதாய் உள்ளது என்று சுட்டிக் காட்டினார். என்றாலும் முஸ்லிம் காங்கிரஸ் திருத்தப் பிரேரணைகளை ஆராய்ந்து அதன் கருத்துக்களை அடுத்த வாரம் தெரிவிக்கலாம் என்றும் ஜனாதிபதி கூறினார். 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் செய்வதில் பங்காளிக் கட்சிகளின் கூடிய அளவிலானவையை தம்பக்கம் வைத்துக் கொள்ள ஜனாதிபதி விரும்புகிறார் என்பதை இது காட்டுவதாய் இருந்தது.

## முஸ்லிம் காங்கிரஸுக்கு இது முக்கிய விடயம்

முஸ்லிம் காங்கிரஸுக்கு இது மிக முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது. இந்த விடயத்தின் மீது அந்தக் கட்சி அரசு தரப்பிலிருந்து வெளியேறிவிடக் கூடிய நிலையும் ஏற்படலாம். அந்தக் கட்சியின் அடிப்படை உறுப்பினர்களைக் கொண்ட கொள்கை வகுப்பும் மிக உயர் அங்கமான பேராளர் கூட்டம் ஒன்றில் இந்த விடயம் ஆலோசிக்கப்பட்டு மாகாண சபை அமைப்பில் எதுவித மாற்றமும் அனுமதிக்கப்படக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலையில் அந்தக் கட்சியின் உயர் மட்டத்தலைவர்கள் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரசமைப்புத் திருத்தங்களை ஆதரிக்க மறுத்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து வெளியேற வேண்டும். இல்லை அவைகளை ஆதரித்து நின்றாலோ பேராளர் மாநாட்டின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுவதான நிலைமை ஏற்படும். இந்தத் திருத்தங்களை நாம் ஆதரிக்க முடியாது என்று அமைச்சர் ஹக்கீம் பத்திரிகையாளர்களிடம் கூறினார். இவைகள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவினால் தான் சிறப்பாக ஆராய முடியும் என்றார் அவர்.
இந்தப் பின்னணியில்தான் வாக்காளர் பதிவுகள் விசேட ஏற்பாடுகள் சட்ட நிறைவேற்றத்தை அரசு தள்ளி வைத்திருப்பதாக அமைச்சர் ஹக்கீம் திடீர் அறிவித்தல் ஒன்றை நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இந்தச் சட்ட முன்வரைவினை அரசு மிக அவசர பிரேரணையாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது. இந்த ஒத்திவைப்புக்கான காரணம் இந்த முன்வரைவு குறித்து தேர்தல் ஆணையாளருடன் ஆலோசிக்கப்படவிருப்பதே என்று ஹக்கீம் கூறினார்.
இந்த முன்வரைவை அவசரமாக நிறைவேற்றுவதானாலும் ஜூன் 18 ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும் வரை சாத்தியமாகாது. வடமாகாண சபையை செயற்படுத்துவதற்கான அறிவித்தலில் ஜூன் 26 ஆம் திகதி ஜனாதிபதி கையெழுத்திட்டு தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கவிருப்பதற்கு ஏறக்குறைய ஒருவாரத்துக்கு முன்னரே நாடாளுமன்றம் கூடவிருக்கிறது. வடக்கு மாகாணத்துக்கான துணை வாக்காளர் பட்டியலை நிறைவேற்ற ஆக இரண்டு வார கால இடைவெளியே தேர்தல் அதிகாரிகளுக்கு கிடைப்பதாய் இருக்கும். எனவே இந்தத் துணை வாக்காளர் பட்டியலை நிறைவேற்றுவதற்கு காலம்தாமதமாகும் என்பதால் அது மிக அசாத்தியமான செயலாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுக்கடலில் நடந்தேறிய படுகொலைகளின் துயர நினைவுகள்.....

மண்டைதீவுக் கடற்பரப்பில் கடற்படையினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் 27 ஆவது வருட நினைவு தினம் [10.06.2013] இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

வெந்தியர்தேவர்

"இண்டைக்காவது என்ர குஞ்சுகளுக்குக் கஞ்சி கொடுக்க வேண்டும்'' அந்தோனி அப்புவின் கவலை இது.

''நேத்துக் கிடைச்ச முப்பது ரூபா கடனுக்குப் போச்சு'' இண்டைக் கெண்டாலும் என்ர பிள்ளைகுட்டியோட சாப்பிட அருள்புரி அந்தோனியாரே. பற்றிக்கின் வேண்டுதல் இது. இவ்வாறு எத்தனையோ வேண்டுதல்களுடன் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டு சடலங்களாக எடுத்துவரப்பட்டனர். இந்த நாள் தமிழ் மக்களது மனங்களில் இரத்தக் கண்ணீரை வரவழைத்தது. அந்த நாள் தான் 1986ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் நாள்.

கொலைக்களத்துக்குப் போகின்றோம் என்ற உண்மையை அறியாது கரைவலைத் தொழிலின் மூலம் கஷ்டங்கள் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் குருநகர் புனித சந்தியோகுமையரின் கோயில் திருந்தாதி மணி ஒலிக்க தமது தொழிலுக்குத் தயாராகினர் அந்த கடற்றொழிலாளர்கள். அவர்களைச் சுமந்து கொண்டு தூய ஒளி படகு குருநகர் துறைமுகத்தில் இருந்து கடலைக் கிழித்தபடி விரைந்து கொண்டிருந்தது.

''வெள்ளப்பிட்டிக்கு படகை அகட்டு இரவு நேரம் வெளிச்சக்கட்டை பறிய ஓடியிருக்கலாம். நேரத்துக்கு வெளிக்கிட்டிருக்க வேணும்'' படகில் இருந்து டோனஸ் முணுமுணுத்துக் கொண்டார். தொழிலாளர்கள் நேரத்துக்கு வரவில்லை என்ற ஆதங்கம் அவருக்கு.

இளமைகள், முதுமைகள், முதல் தடவையாகத் தொழிலுக்குச் செல்பவர்கள் என படகில் இருந்த முப்பத்தியொரு மீனவர்களும் சந்தோஷத்தில் மிதந்து கொள்ள தூய ஒளியும் மண்டைதீவு கடற்பரப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. திடீரென எழுந்த வேட்டொலிகளால் அதிர்ச்சியடைந்த அந்த மீனவர்கள் விரைந்து தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். விரைவில் வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டும். அதுவே அவர்களது ஒரே குறிக்கோளாக அமைந்தது.

ஏற்கனவே கேட்ட வேட்டுச் சத்தங்களுடன் மண்டைதீவு முகாமில் இருந்தும் வெடிச்சத்தங்கள் கேட்க பீதியடைந்த அந்த அப்பாவி மீனவர்களை நோக்கி பாடு வளைக்கும் பாட்டுக்குச் சமீபமாக வந்த கடற்படைப் படகு ஒன்றில் இருந்து கறுப்பு உடை அணிந்தவர்கள் பிளாஸ்ரிக் படகில் கூரிய ஆயுதங்களுடன் வந்து கொலைவெறியுடன் தமது நாடகத்தை அரங்கேற்றினார்கள். கதறியழுது காலில் வீழ்ந்து ''நாங்கள் தொழிலுக்கு வந்தவர்கள். எங்களை ஒன்றும் செய்யாதீர்கள்'' எனக் கெஞ்சியும் கூட அரக்க குணம் கொண்ட அந்தப் பாவிகள் மீனவர்களைக் கொன்று குவித்ததுடன் இறந்த உடல்களை மேலும் சிதைத்துக் கொண்டிருந்தனர். இப்போது அந்தப் பகுதியை நோக்கி மற்றொரு படகு வந்து கொண்டிருப்பதை அவதானித்த கடற்படையினர் தப்பினால் போதும் என்று ஓட்டமெடுத்தனர். இப்போது படகில் வந்தவர்கள் விடுதலைப் போராளிகள். நிலைமைகளைத் தெரிந்து கொண்டு இறந்த உடல்களை குருநகர் சனசமூக நிலையத்தில் கொண்டு வந்து சேர்த்தனர். குருநகர் மட்டுமன்றி அனைத்துப் பகுதிகளுமே அதிர்ச்சியில் உறைந்தன. அன்று இருண்ட நாளாக அமைந்த குருநகர் 27 வருடங்களாக இந்த நாளை இருண்ட நாளாகவே பார்க்கிறது.

1962 இல் இடம்பெற்ற சூறாவளியின்போது பெருமளவு மீனவர்கள் கடலில் சாவடைந்தனர். அது இயற்கையின் சீற்றத்தின் பரிசு. தவிர தனிநபர்களாக பல மீனவர்கள் சுடப்பட்டும் காணாமற் போனதும் உண்டு. ஆனால் மண்டைதீவு படுகொலையே எங்களைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பாதகர்களின் படுகொலைக்கு இலக்கான அந்த உறவுகளை எண்ணி வருந்தாத நாள்கள் இல்லை என்கிறார் ராஜா. குருநகர் மக்கள் ஒவ்வொருவருமே இந்த நாளில் அவர்களுக்காகப் பிரார்த்திக்கின்றனர்.


இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்கள், தமது உரிமையுடனும், சுதந்திரத்துடனும் வாழ அனுமதிக்கக் கூடாது என்பதில் பேரினவாதிகளும் படையினரும் மிகுந்த கரிசனையுடன் உள்ளனர்.

தமிழ் மக்களது சொந்த நிலங்களைப் பறித்தும் அகதிகளாக முட்கம்பி கம்பி வேலிக்குள் அடைத்தும் அவர்களை நிரந்தர அடிமைகளாகப் பார்ப்பதிலேயேஅக்கறை காண்பிக்கின்றனர்.


குமுதினி படுகொலை, மண்டைதீவு, முள்ளிவாய்க்கால் கொடூரங்கள் இவற்றின் சான்றுகளாக இன்றும் உள்ளன. சர்வதேசமோ இது குறித்து மௌனம் காக்கிறது. சர்வதேசம் குறித்து பேரினவாதிகளும் பெரிதாகக் கணக்கில் எடுப்பதாக இல்லை. இந்தப் படுகொலைச் சம்பவங்கள் எதிலும் தமிழர்களுக்கு நியாயம் கிடைத்ததாக இல்லை. அவற்றுக்குக் காரணமானவர்கள் பதவி உயர்வுகள் விருதுகளுக்கு உரியவர்களாகின்றனர்.

''ஏனென்று கேட்க நாங்கள் யார்? நாங்கள் உழைக்கவும் சாகவுமே பிறந்தவர்கள்''. ஒரு தொழிலாளியின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் இவை. தமிழ் இனத்தவர்கள் இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தையும் உரிமைகளையும் அனுபவிக்க உருத்தற்றவர்கள் என்ற பேரினவாதச் சிந்தனையின் ஒட்டுமொத்த வெளிப்பாடுகளில் ஒன்றே இந்த மண்டைதீவுப் படுகொலை எனக் கொள்வதில் தப்பேதுமில்லை. ஆயினும் இத்தனை ஆண்டுகள் கழிந்தும், 27 நீண்ட கால இடைவெளியின் பின்னரும், அன்று மண்டைதீவுக் கடற்பரப்பில் அந்த அப்பாவிகளான 31 கடல்தொழிலாளர்களுக்கும் நேர்ந்த துயர முடிவு இன்றும் தமிழ் மக்களின் மனதில் நீங்காத வடுவாகப் பதிந்து மனங்களைக் ஒரு கணம் கலங்கடிக்கிறதே. ★

**''நாங்கள் தொழிலுக்கு வந்தவர்கள். எங்களை ஒன்றும் செய்யாதீர்கள்'' எனக் கெஞ்சியும் கூட கொலை வெறியுடன் வந்த படையினர் மீனவர்களைக் கொன்று குவித்த துடன் இறந்த உடல்களை மேலும் சிதைத்துக் கொண்டிருந்தனர்.**



*மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்கள் 31 பேரின் நினைவாக குருநகர் கடற்கரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி*



*யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள 31 மீனவர்களின் கல்லறைகள்*

## மண்டைதீவுக் கடலில் மடிந்த உறவுகள்

எம்.ஜி.சிலன்

1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி குருநகர் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். அன்றுதான் அதிகாலை வேளை தமது குடும்பத்தவர்களின் பசியைப் போக்குவதற்காக மீன்பிடிக்க தூய ஒளி படகில் ஏறி குருநகரில் இருந்து மண்டைதீவுக் கடற்பரப்புக்கு அப்பாவி மீனவர்கள் 31 பேர் சென்றிருந்தனர்.

அவர்களைக் கடற்படையினர் வெட்டியும் குத்தியும் தமது பாணியில் மிருக வெறியை நடத்திக் கொலை செய்தனர்.

தமது குடும்பங்களை தமது உழைப்பில் வாழவைக்கச் சென்று கடற்படையால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களாக கி.இஸ்தாக்கி (வயது-54), பேதுரு [illegible] (வயது-62), [illegible] (வயது-18), எமலியுஸ் மக்ஸ்மஸ் ஈஸ்வரன் (வயது-18), மனவல் மரியநாயகம் (வயது-35), சுப்பிரமணியம் கோபால கிருஷ்ணன் (வயது-28), அருளானந்தம் பெனடிக்ற் வேனா (வயது-50), பெனடிக்ற் பவியன் (வயது-28), பென்டிக்ற் மாசிலா (வயது-26), பெனடிக்ற் அலிஸ்ரன் (வயது-28), பந்திராஸ் கமலஸ் (வயது-30), பந்திராஸ் யூலியஸ் (வயது-32), பந்திராஸ் தவம் (வயது-25), தமியான் உதயகுமார் (வயது-16), முடியப்பு ராசகுமார் (வயது-33), யோன் ஜோர்ஜ் (வயது-56), மனவல் பயஸ் (வயது-60), ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை (வயது-70), ஞானப்பிரகாசம் ஜெயபால் (வயது- 16), ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன் (வயது-14), அருளானந்தம் டொமினிக் பொனிபஸ் (வயது-60), அன்ரன் ஷெல்ட் லொயிற் (வயது-21), மனவல் பற்றிக் (வயது-60), சவிரியான் யேசுராசா நிக்ஷன் (வயது-12), முத்துச்சாமி (வயது-30), முத்தையா சாமிநாதன் (வயது-60), அந்தோனிப்பிள்ளை பர்னாந்து (வயது-60), பெனடிக்ற் ரமேஸ் (வயது-18), மற்றும் மண்டைதீவைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் ஆகியோரது சடலங்கள் மக்கள் அஞ்சலிக்காக குருநகர் சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் ஒரே இடத்தில் தனித்தனியாக அடக்கம் செய்யப்பட்டன.

இந்தக் கல்லறைகள் வெள்ளை வர்ணம்பூசப்பட்டுஇந்தப்படுகொலைச் சம்பவத்தை மக்களுக்கு இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. படுகொலையுண்டவர்கள் நினைவாக குருநகர் கடற்கரை வீதியில் நினைவுத்தூபி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இவர்கள் நினைவாக இத்துயரம் நடந்த ஜூன் 10 ஆம் திகதியன்று வருடாவருடம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் விசேட திருப்பலியும் இடம்பெற்று வருகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை 9 ஒரு வரைபடம்

அம்மா கூறிய ஒரே காரணத்துக்காக சித்தப்பா வீட்டிற்கு செல்லத் தயாரானாள். மறுநாள் காலை நிலாவின் தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது.அதில் நிலாவின் சித்தப்பா நிலாவை அழைத்து செல்ல இன்னும் ஒரு சில மணி நேரத்தில் வருவதாக கூறினார். நிலா இதுவரை அந்த சித்தப்பாவை பார்த்ததே இல்லை , அதனால் ஒரு வித பதற்றத்துடன் புறப்பட்டாள். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு சித்தப்பா நிலாவை அழைத்துக் கொண்டு காரில் ஏறினார். நிலாவின் சித்தப்பாவின் பெயர் ராஜ். நிலாவின் அப்பாவின் தம்பி. காரில் இருந்து வீட்டிக்குப் போகும் வழி வரை ராஜ் நிலாவின் அம்மாவை தூற்றியே பேசிகொண்டிருந்தார். இதை கண்டு துடித்து போனால் நிலா.அவள் தவறான இடத்திற்கு போய் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

சித்தப்பாவின் வீட்டை அடைந்ததும் அவள் சித்தி யமுனா அவளை உள்ளே வா என்று கூட அழைக்கவில்லை. சிறிது நேரம் கழித்து உள்ளே வா என்று ராஜ் கோபத்துடன் அழைத்தார். நிலாவுக்கு ஏன் எல்லோரும் அவளுடன் இப்படி எரிந்து விழுகிறார்கள் என்று புரியாமல் தவித்தாள். அந்த வீட்டிற்குச் சென்ற கொஞ்ச நேரத்தில் நிலாவின் தொலைபேசியை ராஜ் எடுத்துகொண்டார். இனிமேல் நீ உன் அம்மா விடம் கதைக்கக் கூடாது என்று அதட்டிக் கூறினார்.நிலாவின் இதயம் வெடித்து போவது போல ஒரு உணர்வு . பெற்ற தாயிடம் பேசாமல் இருப்பதா ? என்று மனதுக்குள்ளேயே குமுறினாள்.

அன்று இரவு , நிலாவை நிலத்தில் தான் படுக்கவைத்தார்கள்.எவ்வளவோ கஷ்டம் பார்த்திருந்தாலும் நிலாவை நிலாவின் அம்மா ஒரு நாள் கூட நிலத்தில் படுக்கவைத்ததே இல்லை. அதை நினைத்து தேற்றுவாரின்றி விக்கி விக்கி அழுதாள் நிலா.

இப்படியே சில நாள்கள் கடந்தன. ஒரு நாள் நிலா காலை எழுந்து கல்லூரிக்கு புறப்பட்டாள். அந்தச் சமயம் நிலாவால் அவளது புத்தகப் பையை கண்டுபிடிக்க முடியவே இல்லை. தேடித் தேடி பார்த்தும் அவளால் கண்டுபிடிக்க முடியவேயில்லை.கடைசியில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நிலா சித்தியிடம் சித்தி! என்னுடைய புத்தகப் பையைப் பார்த்தீர்களா? என்று ஒரு பதற்றத்தோடு கேட்டாள். சித்தியின் பக்கத்தில் இருந்து ஒரு பதிலும் இல்லை.சிறிது நேரம் கழித்து அதோ! அந்த பையா? பாரு என்று அவர் வீட்டு ஜன்னல் வழியாக பார்த்தார். நிலாவும் ஜன்னல் வழியாக பார்கையில், திகைத்தே போய்விட் டாள். அவள் புத்தகப் பை மழையில் நனைந்தபடி இருந்தது.அழுது கொண்டே போய் அதை எடுக்க சென்றாள். உடனே யமுனா



■ நிவேதிதா மோகன்.

> அந்த வீட்டிற்குச் சென்ற கொஞ்ச நேரத்தில் நிலாவின் தொலைபேசியை ராஜ் எடுத்துகொண்டார். இனிமேல் நீ உன் அம்மா விடம் கதைக்கக் கவாது என்று அதட்டிக் கஹினார்.நிலாவின் இதயம் வெடித்து போவது போல ஒரு உணர்வு .

ஏய்! அதை எடுக்க வேண்டாம். நீ இனிமேல் படிக்க போவது இல்லை.வீட்டினுள் வந்து வேலையை பார் என்று கத்தினார்.

அப்போதும் நிலா ஒன்றுமே பேசவில்லை. அழுதுகொண்டே அறையில் போய் அமர்திருந்தாள். மாலை நான்கு மணியளவில் நிலாவின் வீட்டு கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது . யமுனா கதவைத் திறந்து பார்கையில் கல்லூரியில் படிக்கும் ஆணும் பெண்ணும் நின்ற னர். உடனே அவர்கள் நாங்க நிலாவின் கல்லூரியில் தான் படிக்கிறோம். ஏன் நிலா இன்று வரவில்லை? என்று கேட்கத் தான் வந்தோம் என்று நிலாவின் சித்தியுடன் கதைத்து கொண்டே அவர்களின் கண்கள் நிலாவை தேடின.

இது தனது நண்பர்களின் குரல் போல இருகிறதே என்று வெளியே ஓடிவந்த நிலாவை உள்ளே போடி! உன்னை யார் இங்கே அழைத்தது என்று கத்தினார் அவளது சித்தி. நிலா ஒன்றுமே பேசாமல் அழுது கொண்டே அவள் அறைக்கு போனாள்.அதன் பின் நிலாவின் நண்பர்களிடம் இனிமேல் உங்களை இந்த வீடு பக்கம் பார்த்தால், அவ்வளவு தான்! என்று கத்திக் கொண்டு கதவை அடைத்தார். நிலாவின் நண்பர்களுக்கு அவளின் சூழ்நிலை புரிந்தது.

மறு நாள் காலை கல்லூரிக்குச் சென்ற இருவரும் , அவர்களின் கல்லூரி முதல்வரிடம் சென்று நிலாவின் நிலைமையை முன் வைத்தனர். உடனே இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த முதல்வர் நிலாவின் வீட்டிற்குத் தொலைபேசியில் அழைத்தார் . யமுனா தான் தொலைபேசியை எடுத்தாள். அவளிடம் முதல்வர் நாளையில் இருந்து நிலா கல்லூரிக்கு வராவிட்டால், உங்கள் வீட்டிற்கு பொலிஸ் தான் வரும். என்று தெளிவாக கூறி விட்டு, நிலாவிடமும் இது பற்றி சொல்லி விட்டு தொலைபேசி அழைப்பை துண்டித்தார்.


நிலாவிற்கு சந்தோசம் தங்க முடியவில்லை. ஆனால் ........... (தொடரும்)

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# பெண்களின் கைகளில்தான்.....

பெண்கள் சுதந்திரமாய் இருக்கவேண்டுமென்றால் அவர்கள் தங்களின் சுதந்திரத்தை சரியாக பயன்படுத்திக்கொள்ள தெரிந்திருக்க வேண்டும். கண்ணியமான உடைகளும், நல்ல செயல்களையும் நடவடிக்கைகளையும் பெண்கள் கடைபிடிக்கவேண்டும். இதை யார் சொல்லிக்கொடுக்க முடியும், ஒவ்வொரு தமிழ் பெண்ணும் தங்கள் கலாசாரத்தை நம் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லி வளர்க்க வேண்டும். மேலை நாட்டு நாகரிகம் இன்றைய இளைஞர்களையும், யுவதிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் ஒவ்வொரு தமிழ் பெண்ணின் அடையாளமும் அழிந்துவிடும். பிறகு நாம் எவ்வளவுதான் முயற்சித்தாலும் அதனை மீட்டெடுக்கமுடியாது. பெண்ணியத்தை காப்பது பெண்களின் கையில்தான் உள்ளது.

# சக்தி கொடு



மனித குலத்தின் மகத்தான படைப்புக்கள் பெண்ணினம் என்றால் மிகையாகாது. பாரதி கூறிய கூற்றுக்கு நிகராக இன்றைய நவீன யுகத்தில் ஆண், பெண் பால் வேறுபாடின்றி சகல துறைகளிலும் சமத்துவமுடையவர்களாகவே இருக்கின்றார்கள். இருந்தாலும் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் இந்த நாகரிக உலகத்திலும் பெண் அடிமையும் ஒடுக்குமுறைகளும் ஓங்கி இருப்பதால் பெண் சக்தி களையிழந்து போவதைக் காணலாம். ஓர் உயிர் தோன்ற மூல காரணமாக இருக்கும் பெண்ணின் சக்தியை எவராலும் வெற்றி கொள்ள முடியாது. இன்றைய காலப் பெண்கள் ஆணுக்குச் சரிநிகராக முன்னேறிச் சென்று கொண்டிருந்தாலும் சில வேளைகளில் உடல் வலிமை மற்றும் மனத் தாக் கங்களினாலும் உடைந்து போய் என்னால் இது முடியுமா? என்று தம்மைத் தாமே கீழ் நிலைக்குக் கொண்டு சென்று விடுகின்றனர். பெண்களே உங்கள் அன்றாட வாழ்க்கையில் சுறுசுறுப்பு, உற் சாகம், மகிழ்ச்சி, நல்ல எதிர்பார்ப்புக்கள் , நம்பிக்கை, உணர்ச்சி வேகம் என்பவற்றை ஆயுதமாகக் கொண்டு ஒரு காரியத்தைச் செய்யுங்கள். சக்தி தானாக வரும். தடைகள் , சோதனைகள், அவ மானங்கள் எல்லாவற்றையும் எதிர்கொண்டு வாழ்க்கையில் வெற்றி பெற்ற [illegible] படைத்தவர்களே!

எம். விமலதர்சினி
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கழுதைகள் சரணாலய அதிகாரிகள் மன்னார் வருகை

## சிகிச்சை, கட்டுப்படுத்தல் மற்றும் ஆராய்வு நடவடிக்கைகளில் அவர்கள்

மன்னார், ஜூன் 10
இந்திய கழுதைகள் சரணாலய அதிகாரிகள் மன்னாருக்கு வருகை தந்துள்ள நிலையில் மன்னாரில் உள்ள கழுதைகளின் நலன் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கு இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மாலை மன்னார் நகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன் போது இந்திய கழுதைகள் சரணாலயத்தின் சமூக பங்காளர், கல்வி இணைப்பாளர் இராம் பர்வின், இந்திய கழுதைகள் சரணாலயத்தின் கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடை இணைப்பாளருமான வைத்தியர் ரமேஸ் குமார், இந்திய கழுதைகள் சாரணாலயத்தின் கால்நடை வைத்தியர் சுமித்தா, டயஸ்போரா லங்கா அமைப்பின் இணைப்பாளர் ஜெரமி லியனகே, டயஸ்போரா லங்கா அமைப்பின் தொடர்பு அதிகாரி சின்கிலேயர் பீற்றர், மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்னார் நகர சபையின் உப தலைவர் இந்திய அதிகாரிகள் வருகை குறித்து கூறியதாவது:-
மன்னாரில் கழுதைகள் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற நிலையில் போரின் காரணமாக மன்னார் மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளான போது மனிதனுக்கும், கழுதைகளுக்கும் இடையில் இருந்த நெருக்கமான பிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. தற்போது காட்டு கழுதைகளின் சிரமத்தை மன்னார் மக்கள் எதிர் நோக்குவதோடு இவைகள் மக்களினால் வெறுக்கப்பட்டும் வருகின்றது.



ஆனால் வெளி மாவட்டத்தில் இருந்து மன்னாருக்கு வருகின்ற மக்களையும், சுற்றுலாப்பயணிகளாக வரும் மக்களையும் அதிகம் கவரக் கூடியதாக இந்தக் கழுதைகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் இந்த கழுதைகளின் நலனை கவனத்தில் கொண்டு மன்னார் நகர சபை மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளுக்கு உதவும் வகையில் இந்திய கழுதைகள் சரணாலயத்தில் இருந்து 2 கால்நடை வைத்தியர்களும்,சமூக கல்வி அலுவலர் ஒருவரும் மன்னாருக்கு வருகை தந்துள்ளனர். இதற்கு டயஸ்போரா லங்கா அமைப்பும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

இவர்கள் இங்குள்ள பொருத்தமான மிருக வைத்திய அலுவலர்கள், நகர சபை உறுப்பினர்கள் ஆகியோருடன் இணைந்து சமூகம் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

மன்னார் நகர சபையின் கோரிக்கைக்கு அமைவாக காயப்பட்ட கழுதைகளுக்கு சிகிச்சையளித்தல், பெரும் அவஸ்தைக்குட்பட்டு சிரமப்படுகின்ற கழுதைகளை கருணைக்கொலை செய்தல், வெறிநாய்க்கடி தடுப்பு, எதிர்காலத்தில் கழுதைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் சிகிச்சை, கழுதையின் புள்ளி விவரம் அடங்கிய மைக்ரோ சிப் ஒன்றை கழுதையில் காதில் பூட்டுதல், கழுதையின் நல பராமரிப்பு தொடர்பாக பொருத்தமான மிருக வைத்திய சுகாதார அலுவலகர்களுக்கு பயிற்சி அளித்தல், கழுதைகளை பழககப்படுத்துதல், கழுதைகளுக்கான உணவு வழங்குதல், சமூகத்துக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் தற்போது இடம் பெற்று வருகின்றன- என்றார்.

இந்த நடவடிக்கைக்கு மன்னார் நகர மக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-12)



வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகத்தில் ''தேவைப்பாட்டின் மீதான பயிற்சி நெறி'' எனும் தலைப்பில் சுயதொழில் முயற்சியாளருக்கான ஒரு நாள் கருத்தரங்கு இடம்பெற்றபோது விரிவுரைகளை வவுனியா தொழிநுட்பக் கல்லூரியின் விரிவுரையாளர் எஸ். கிருஷ்ணகுமார் வழங்குவதையும் கருத்தரங்கில் பங்கு பற்றிய சுயமுயற்சியாளர்களையும் படத்தில் காணலாம். (ஒ-421)

## சைவச் சிறார் இல்லத்துக்கு ரூ.8 லட்சம் வழங்கினார் ஆளுநர்

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சி மகாதேவா சைவ சிறார் இல்லத்தின் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வடக்கு மாகாண ஆளுநர் 8 லட்சம் ரூபாவை மாகாண நிதியூடாக வழங்கியுள்ளார்.

இதன் மூலம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது. (எ-41)

### கிராஞ்சிப் பகுதியில்

## தப்பி ஓடிய சிப்பாயால் குடிமனைக்குள் குழப்பம்

புதுக்குடியிருப்பு, ஜூன் 10
கிளிநொச்சி கிராஞ்சிப் பகுதியிலுள்ள மொட்டையன் குளம் கிராமத்தினுள் சிவில் உடையில் பயணப் பொதியுடன் படைசிப்பாய் ஒருவர் உட்புகுந்து மரத்தில் ஏறியதால் அந்தப் பகுதி மக்கள் குழப்பமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது. திடீரென குடிமனைகளுக்குள் புகுந்த படைச் சிப்பாயின் நடவடிக்கைகளை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், பாடசாலை அதிபர், மாதர் சங்கம் .என்பவற்றுக்குத் தெரியப்படுத்தினர்.

குறித்த சிப்பாய் மாயமான நிலையில் அவரைத் தேடிச் சென்ற வேளை மேலாடைகள் அற்ற நிலையில் மரத்தின் மேலேறி அமர்ந்திருந்ததை அவதானித்தனர். மரத்திலிருந்து கீழே இறக்கி ஆடைகளை அணிவித்து விசாரித்த போதே அந்த நபர் படைச் சிப்பாய் என தன்னை அறிமுகம் செய்துள்ளார்.

தான் இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்துள்ளதாகவும், அது தொடர்பாக இராணுவத்துக்கு தகவல் எதனையும் வழங்க வேண்டாம் எனவும், இராணுவத்தினரிடம் தான் மீண்டும் அகப்பட்டால் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய நிலை ஏற்படும் என்றும் மக்களிடம் படைச் சிப்பாய் எடுத்துக் கூறியுள்ளார்.

இதற்கிடையில் தகவல் அறிந்த இராணுவத்தினர் அந்த இடத்துக்கு வரவே தப்பி ஓடி வந்ததாகக் கூறிய சிப்பாய் காட்டுக்குள் ஓடிவிட்டார்.

இது குறித்து எவரிடமும் முறைப்பாடு எதனையும் செய்ய வேண்டாம் எனவும், குறித்த சிப்பாய் தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் அங்கு வந்த இராணுவத்தினர் பொதுமக்களை எச்சரித்துச் சென்றதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-400)

## மன்னார் - மதவாச்சி வீதியில் விபத்து படுகாயமுற்றார் ஓட்டோ சாரதி

மன்னார், ஜூன் 10
மன்னார் - மதவாச்சி பிரதான வீதி தம்பனைக்குளம் சந்தியில் கடந்த சனிக்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் தென்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதவாச்சி பிரதான வீதியூடாக மன்னாரை நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனமும், முருங்கன் வீதியூடாக மதவாச்சி பகுதியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவும் தம்பனைக்குளம் 56 ஆவது மைக்கல் தொலைவில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

அருகில் உள்ள பற்றைக்குள் ஓட்டோ தூக்கி வீசப்பட்டுள்ளது. அதனை ஓட்டிச் சென்ற அவிசாவலையைச் சேர்ந்த அமித்பண்டார (வயது-24) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

டிப்பர் வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணைகள்ள மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-12)



# மானியம் வழங்காமையால் மீனவர்கள் தொழிலில் பாதிப்பு

## உடனடியாக வழங்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை

மன்னார், ஜூன் 10
கடற்றொழில் அமைச்சின் மூலம் கடல் தொழில் திணைக்களம் ஊடாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானிய முத்திரை கடந்த இரண்டு மாதங்களாக வழங்கப்படவில்லை.

இதனால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:
மன்னார் மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு இந்த வருடம் மார்ச் மாதம் வரை மட்டுமே எரிபொருள் மானிய முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல்,மே மாதங்களுக்கான எரிபொருள் மானிய முத்திரை வழங்கப்படவில்லை,

இதனால் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தற்போது வீசும் காற்றினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது.

இதனையும் மீறி ஜீவனோபாயத்தை பெற்றுக்கொள்ள கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அதிகமாக எரிபொருளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் அரசு மீனவர்களுக்கு வழங்கும் எரிபொருள் மானிய முத்திரைகளை உரிய காலத்தில் வழங் [illegible] சென்று தொழில் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

எனவே மீனவர்களின் நெருக்கடியைத் தீர்க்க கடல் தொழில் திணைக்களம், கடல் தொழில் அமைச்சிடம் இருந்து துரிதகதியில் எரிபொருள் மானியத்தைப் பெற்று வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இது தொடர்பில் மன்னார் மாவட்ட கடல் தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாள [illegible] கோரிக்கை [illegible]தாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-12)

### பன்னங்கண்டி, மருதநகரில்

## சொந்தக் காணிகள் இன்றி 269 குடும்பங்கள் அவலம்

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சி பன்னங்கண்டி, மருதநகர் ஆகிய பகுதிகளில் 269 குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றி வாழ்ந்து வருவது கிராமத்தின் புள்ளி விவரங்களில் தெரியவந்துள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பன்னங்கண்டிப் பகுதியில் 320 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் சுமார் 184 குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றி உள்ளன.

இதேபோல் மருத நகர்ப் பகுதியில் உள்ள 480 குடும்பங்களில் 85 குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றி வாழ்ந்து வருகின்றன என அந்த புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை தினமும் பரிசளிப்பு விழாவும்

வேலணை, ஜூன் 10

வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தின் 67 ஆவது பாடசாலை தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ஜெ.சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரீனும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இ.ராதாகிருஸ்ணன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சி.ஜோன்குயின்ரஸ், எச்.டி.எப்.சி முகாமையாளர் பா.ராஜராஜன், வேலணை வர்த்தக வங்கி முகாமையாளர் வீ.மதியுகன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந)

## குடமுழுக்குப் பெருவிழா

சரவணை, மயிலைப்புலம் திருப்பொலி கட்டுவன்வான் ஐயனார் ஆலய குடமுழுக்குப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். (ந)



பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூலகத்தில் நடைபெற்ற நூலக வார இறுதி நாள் நிகழ்வில் சபைத் தலைவர் பூ. சஞ்சீவன் உரையாற்றுகிறார். அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பண்டிதர் வி.பரந்தாமன் அமர்ந்திருக்கிறார். (வ-8)

## சைவ உணவு என்ற பதத்தை இனி 'தாவர உணவு' எனத் திருத்தம் செய்யக் கோருகிறது இந்து மாமன்றம்

யாழ்ப்பாணம்,ஜூன் 10

கருக்கட்ட முடியாத முட்டைகளை தாவர உணவு எனச் சேர்க்கலாம் என இலங்கைக் கட்டளைகள் பணியகத்தின் ஆலோசனைகளை அகில இலங்கை இந்து மாமன்றம் கடுமையாக எதிர்த்துள்ளது.

தாவர உணவு மற்றும் பானம் என்பன தொடர்பாக இலங்கைக் கட்டளைப் பணியகத்தால் வெளியிடப்பட்டுள்ள நகல் அறிக்கை தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் அண்மையில் நடைபெற்ற சிந்தனைக் களத்தில் ஆராய்ந்துள்ளது.

இதற்கமைவாக "சைவ உணவு" என அதிகளவானோர் உபயோகப்படுத்தும் சொல்லுக்குப் பதிலாக ''தாவர உணவு'' எனத் திருத்தப்படல் வேண்டும்.

சைவம் என்பது இந்து மதத்தைக் குறிப்பதால் அந்தச் சொல்லைப் பாவிப்பது கருத்து முரண்பாட்டைத் தோற்று விக்கும். எனவே தாவர உணவு எனத் திருத்தம் செய்ய வேண்டும்.

கருக்கட்ட முடியாத முட்டைகளை தாவர உணவு எனச் சேர்க்கலாம் என்ற ஆலோசனை பொருத்தமற்றது. முட்டை என்பது தாவர உண வுக்குள் சேர்க்கப்படக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## உலக குருதிக் கொடையாளர் தினத்தில் அலரிமாளிகையில் கௌரவிப்பு நிகழ்வு

அச்சுவேலி , ஜூன் 10

உலக குருதி நன்கொடையாளர் தினம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஜனாதிபதி வாசஸ்தலமான அலரிமாளிகையில் நடைபெறவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் நடைபெறவுள்ள குருதி நன்கொடையாளர் கௌரவிப்பு விழாவில் கலந்து கொள்ள இந்த முறை யாழ்ப்பாணத்திலிருந்தும் குருதி நன்கொடையாளர்கள் செல்லவுள்ளதாகவும்

> "இந்த முறை யாழ்ப்பாணத்திலிருந்தும் குருதி நன்கொடையாளர்கள் செல்லவுள்ளனர்

அதற்கான அமைப்புக்கள் தனிப்பட்ட ரீதியில் தபால் மூலம் நன்கொடையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுகாதார அமைச்சு மற்றும் தேசிய இரத்த மாற்றுப் பிரயோக சேவை ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (ஒ-288)

## பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

தென்மராட்சி, ஜூன் 9

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

சபைத் தலைவர் யோ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா ஆகியோரர் கலந்துகொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- யோ. ஜெயக்குமார், உப தலைவர்- க.அரசநாதன், செயலாளர்- வை.இராசரத்தினம், உதவிச் செயலாளர்- ஜெயக்குமார், பொருளாளர்- க.செந்தூரன், நிர்வாக சபை உறுப்பினர்களாக கே.பிரதீபன், கா.சற்குணதேவன், க.வாமதேவன், ப.சரவணபவான், ப.பாலேந்திரா, சி.வைரவநாதன், சி.பாலன், ஆர்.அகிலா, திருமதி ஜெயந்தி ஆனந்தராசா, க.சபாரத்தினம், திருமதி ம.சத்தியநாதன் உட்பட 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (ந-7)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

### நாளை

*வைகாசி-28 செவ்வாய்க்கிழமை 11.06.2013*
*திதி: திருதியை பி.இ. 03.15 வரை*
*நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ. 04.01 வரை*
*சுபநேரம்: 10.22- 11.52 வரை*
*இராகுகாலம்: 02.52 - 04.22 வரை*

**மேஷர்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.

**இடபர்:** வீண் பதற்றம் வந்து செல்லும். உறவினர்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மிதுனர்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். குடும்பத்தாருடன் இணக்கமாக செல்லவும். அடுத்தவர்களை குறைக் கூறுவதை நிறுத்துங்கள். மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாக தலையிட வேண்டாம்.

**கடகர்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் மேலதிகாரியால் நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**சிங்கர்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**துலாபர்:** செலவுகள் வந்து செல்லும். சகோதர வகையில் நன்மை கிடைக்கும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும்.

**விருச்சிகர்:** ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். யாரையும் நம்பி உறுதிமொழி கொடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**தனுசு:** திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரர்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**கும்பர்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வழியில் மகிழ்ச்சி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மீனர்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 3 | 8 | 7 | 1 | 2 | 4 |
| 3 | 7 | 1 | 6 | 9 | 8 | 2 | 4 | 5 |
| 8 | 5 | 4 | 1 | 2 | 6 | 3 | 9 | 7 |
| 1 | 4 | 9 | 2 | 3 | 5 | 7 | 6 | 8 |
| 9 | 8 | 3 | 4 | 5 | 1 | 6 | 7 | 2 |
| 2 | 3 | 7 | 8 | 6 | 4 | 9 | 5 | 1 |
| 6 | 1 | 2 | 7 | 4 | 5 | 8 | 3 | 9 |
| 4 | 6 | 8 | 5 | 7 | 9 | 2 | 1 | 3 |
| 7 | 2 | 5 | 9 | 1 | 3 | 4 | 8 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 8 | 5 | 2 | 4 | 9 | 7 | 1 |
| 5 | 7 | 9 | 1 | 3 | 8 | 4 | 2 | 6 |
| 4 | 2 | 1 | 9 | 7 | 6 | 5 | 3 | 8 |
| 6 | 3 | 5 | 4 | 1 | 7 | 8 | 9 | 2 |
| 1 | 8 | 7 | 6 | 9 | 2 | 3 | 5 | 4 |
| 9 | 4 | 2 | 8 | 5 | 3 | 1 | 6 | 7 |
| 7 | 1 | 6 | 3 | 8 | 9 | 2 | 4 | 5 |
| 2 | 5 | 3 | 7 | 4 | 1 | 6 | 8 | 9 |
| 8 | 9 | 4 | 2 | 6 | 5 | 7 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடனான காலநிலை நிலவும்.

## நூலக அபிவிருத்தி குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கோண்டாவில் பொது நூலகத்தின் நூலக அபிவருத்திக் குழுக் கூட்டமும், ஆலோசனைக் கூட்டமும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோண்டாவில் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையத் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், முன் பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கோண்டாவில் பொது நூலகத்தினர் அறிவித்துள்ளனர். (வ-14)




யாழ்ப்பாணம், ஜூன் 10

நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழா வில் எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழா வும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 10

தெல்லிப்பழை ஞான வைரவர் ஆலய கும் பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.20 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (ந)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் மத்தி கந்தசாமி ஆலய இலட்சார்ச்சனை நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடை பெறும். சிவப்பிரம்மஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள் தலைமையில் இலட்சார்ச்சனை இடம்பெறும். (ந-9)

## ஆயுள்வேத மருந்து விற்பனை விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஆயுள்வேத மருந்து விற்பனை ஸ்தாபன உரிமை யாளர் களுக்கான தர நிர்ணய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 12 ஆம், 13ஆம் ஆம் திகதிகளில் பண்ணை சுகா தாரக் கிராமத்தில் உள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் காலை 9 மணிக்கு இந்தக் கருத்த ரங்கு நடைபெறும்.

உள்நாட்டு மருத்துவசேவை, தரம், பாவனை இவற்றை ஊக்குவிக்கும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் இயங்கும் பாரம்பரிய வைத் தியத்துறைக்கான தேசிய நிறுவனத்தால் இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## அனுமதிபெறாத விளம்பரத் தட்டிகள் அகற்றப்படும்

வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வியாபார நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் அனு மதி இன்றி அமைக்கப்பட்ட விளம்பர தட்டிகள் யா வும் எதிர்வரும் ஜூலை மாதம் 6 தொடக்கம் அகற்றப்படும் என்று சபைத் தலைவர் அ.உதய குமார் தெரிவித்துள்ளார்.

அநேகமான இடங்களில் விளம்பர தட்டிகள் மற் றும் விளம்பர பதாகைகள் என்பன அமைக்கப் பட்டுள்ளன.

விளம்பர தட்டிகளை அமைப்பதற்கு சபையு டன் உடனடியாக தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். இவ் வாறு சபையில் அனுமதி பெறாது அமைக்கப் பட்ட சகல விளம்பரத் தட்டிகள், பதாகைகள் என் பன அகற்றப்பட உள்ளதுடன், உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். (ந-17)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி 'கப்புறுக்க புறவற' சங்க பொதுக்கூட் டம் அண்மையில் மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள சமுநலசேவைகள் நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. கூட்டத்தில் பிரதேச தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜெய நாதன், பிரதேச நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் செல்வி சுபிதாவும் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர். தலைவர்- எம்.ஜெயசிங் கம், செயலாளர்- சு.பால சுப்பிரமணியம், பொருளாளர்-அ.பற்குணநாதன் இவர்களுடன் மேலும் ஆறு பேர் நிர்வாக சபை உறுப்பினர் களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பிரதேச 'கப்புறுக்க புறவற' சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 4 பரப்புக்கு மேற்பட்ட காணிகளின் சொந்தக்காரர்களில் காணிகளை வைத்திருப்போரில் தென்னம்பிள்ளை தேவைப்படு வோர் காணி உறுதியின் போட்டோ பிரதியுடன் பிரதி புதன்கிழமைகளில் மீசாலை புத்தூர் சந் தியில் உள்ள சமுநலசேவைகள் நிலையத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## திறந்த பாடசாலை அங்குரார்ப்பணம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கை தேசிய கல்வி நிறுவகம், வட மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்வி திறந்த பாடசாலைகள் பிரிவின் ஏற்பாட்டில் திறந்த பாடசாலை அங்குரார்ப்பணம் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவை கலட்டி திறந்த பாடசாலை கணேசா முன்பள்ளியில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, வடமாகாண கல்வித் திணைக்கள முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-4)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23.05.1929 மறைவு 28.01.2012
**ஜயம்பிள்ளை அம்பலவாணர்**

தோற்றம் 17.10.1929 மறைவு 23.05.2012
**மங்கையற்கரசி அம்பலவாணர்**

எமது அப்பா, அம்மாவின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாளை (11.06.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், இந்த நிகழ்வுக்குத் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

273, சில்வா வீதி, வட்டக்கச்சி. - குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.09.1936
மறைவு 21.06.2012

**அமரர் கனகசபை சோமசுந்தரம்**
(நயினாதீவு)
திதி: துதியை 10.06.2013

ஆண்டொன்று கடந்தாலும்
ஆறவில்லை எம்துயரம்
மீண்டும் நாம் உமைக்காண
ஏங்குகின்றோம் நாமிங்கு.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
குடும்பத்தினர்.

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 19.10.1953
விண்ணில் 15.05.2010

**அமரர் வீரகத்தி சிவப்பிரகாசம்**
(படவரைஞர் தொழில்நுட்ப உதவியாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.

வருடம் மூன்றுகள் ஆனபோதும்
நினைவில் இருக்கும் உங்கள் நிழல்
நிஜமாய் தான் தெரிகிறது அப்பா!
கைகள் எட்டா தூரத்தில்
கலைந்து நீங்கள் போனாலும் அப்பா
எவராலும் ஈடு செய்ய முடியாத உங்கள் அன்பு
என்றும் கலையாது எங்கள் நினைவுகளில் அப்பா

அல்லாரை வடக்கு,
மீசாலை.
நீங்காத நினைவுடன்
மனைவி, மகன்மார், மருமகள்.

### மூன்றாண்டு முடிவில்

அன்னையின் மடியில் 26.12.1964
ஆண்டவன் அடியில் 10.06.2010



**அமரர் பாலசிங்கம் பிரபாகரன்**
(நூலக ஆசிரியர், சிதம்பரக் கல்லூரி)
திதி: திரயோதசி

வழி பார்த்திருந்தோம்
விழி பூத்திருந்தோம்
எழிலுருவம் தேடி நிற்கின்றோம்
ஒளியாகிப்போன மர்மம்
இது நாளும் அறிந்திலோமே....

நீ விருட்சம் இங்கில்லை
உன் விழுதை விட்டுச் சென்றாய்
உன் மொழியை, உன் புன் சிரிப்பை,
நடை உடை பாவனைகள்
அனைத்தையும் காணுகின்றோம்
உன் மகனின் மழலை தன்னில்
ஆறுகின்றோம் அவன் செயலில்.

"செந்தில்பதி"
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
உன் பிரிவால் துயருறும்
அம்மா,
மனைவி, மகன்.

(37602)(10.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷ்ணா அடகு சேவை

இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்,
இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
(பதிவு இல-J/DS/BR/472)

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012 ஆம் ஆண்டு (31.05.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2013) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2013 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே-021 490 0311
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046
(C/9654) (3.6.11)

0215671111
advt@uthayan.com

## காணி விற்பனைக்கு

வல்வெட்டிச் சந்தியில் இருந்து ஊர்க்காடு றோட்டில் வரும் முதற்சந்தி வேலியன் தோட்ட வீதிக்கு வடக்குப் புறமாக உள்ள காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
தொ. பே. 077 077 6231

## விற்பனைக்கு

SHARP AR-5320
PHOTO COPY மெசின்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 250 8751


## கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம் - பரந்தன்
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்
## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் - 23.06.2013.

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்ட 1998.05.16ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.சிற்றம்பலம் தவராசா ஆகிய நான் 2009.04.08 திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23க்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணைப்படி நடத்துவதற்காக, அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கு கீழ்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் நடைபெறும் திகதியும் இடமும்.

| கிளை இல | கிளைப் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி, நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | பரந்தன் | செல்வி.க.கர்த்திகா,கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | தலைமை அலுவலகம் |
| 02 | இரணைமடு மேற்கு | திருமதி பி.கவிதாலோறன்சியா கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு முப.10.00மணி | கிளி/அந்தோனியார் வித்தியாலயம் 02ம் கட்டை |
| 03 | முரசுமோட்டை | வி.சிவகுமார்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | முரசுமோட்டை ஆரம்ப வித்தியாலயம் |
| 04 | ஊரியான் | இ.சுதன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | |
| 05.06 | கண்டாவளை, பன்றிகட்டான் | க.செந்தூரன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00மணி | கண்டாவளை ம.வி |
| 07 | புளியம்பொக்கணை | இ.ராஜீவரதன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | புளியம்பொக்கணை அரிசி ஆலை |
| 08 | கலவெட்டித்திடல் | ஜெ.சஞ்சீவ்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | கிளி/நாகேஸ்வரா வித்தியாலயம் கலவெட்டித்திடல் |
| 09 | புன்னைநீராவி | இ.சுரேஸ்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | கிளி/புன்னைநீராவி அ.த.க.பாடசாலை |
| 10 | உமையாள்புரம் | க.உதயரூபன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | உமையாள்புரம் அ.த.க.பாடசாலை |
| 11 | தட்டுவன்கொட்டி | இ.உதயகுமார்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | தட்டுவன்கொட்டி அ.த.க.பாடசாலை |
| 12 | ஆனையிறவு | சி.குணாளன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | உமையாள்புரம் அ.த.க.பாடசாலை |
| 13 | குமரபுரம் | ப.தவப்பிரியன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | உமையாள்புரம் அ.த.க.பாடசாலை |
| 14 | பொறிக்கடவை | ப.ஜெயந்தரபிரகாஸ் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | பெரியபரந்தன் அ.த.க.பாடசாலை |
| 15 | தருமபுரம் | வி.சிவபாலன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | தருமபுரம் ம.வி |
| 16 | பிரமந்தனாறு | சி.பிரதீபன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | பிரமந்தனாறு ம.வி |
| 17 | கல்மடு | அ.வசீகரன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | கல்மடு அ.த.க.பாடசாலை |

★ இதற்கமைய இந்தக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

★ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத்தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (¼) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.

★ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவராவது (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

★ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அவ்விரு தொகையினருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவை மேற்கொள்வார்.

★ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

★ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

★ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 16.08.1998ம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்கத்தகுதியுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்திற்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்திக் கூட்டுறவு அமைப்பை ஜனநாயக ஆளுமை கொண்டதாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்: செயலாளர்
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,
பரந்தன்.

சி.தவராசா,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர்.

(C/9635)(10.3.6)

# அரசியல்வாதிகளிடம் தஞ்சம் புகும் அதிபர், ஆசிரியரின் பரிதாப நிலை

## தமிழர் ஆசிரியர் சங்கம் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வட மாகாணத்தில் அதிபர், ஆசிரியர்களை அதிகாரிகள் திட்டமிட்டுப் பழிவாங்குவதால் பாதிக்கப்படும் அதிபர், ஆசிரியர்கள் அரசியல்வாதிகளிடம் தஞ்சம் அடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வட மாகாணம் சார்ந்த அதிகாரிகள் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அதிபர், ஆசிரியர்களை பழிவாங்கும் விதத்தில் செயற்பட்டு வருகிறார்கள்.

குற்றமில்லாத அதிபர், ஆசிரியர்களுக்கு விசாரணை அதிகாரிகளாகச் செல்லும் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்ட கல்வி அதிகாரிகள், பல்வேறு விதமான கேள்விகளைக் கேட்டு அச்சுறுத்தும் பாணியில் நடந்து கொள்கிறார்கள்.

இந்த நிலையில் தங்களது நடவடிக்கைகளுக்கு ஒத்துப் போகாத அதிபர்களையும், ஆசிரியர்களையும் திட்டமிட்டுப் பழிவாங்குவதும், இடமாற்றங்களை வழங்குவதும் வட மாகாணத்தில் மலிந்து விட்டன.

அத்துடன் தமது உறவினர்களையும் தமக்கு வேண்டியவர்களையும் பதவிகளில் அமர்த்தி இடமாற்றங்களில் இருந்து விலக்களித்து நோய்வாய்ப்பட்டவர்களையும், குழந்தையுடையவர்களையும் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றியவர்களையும் பழிவாங்கும் படலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அதிபர், ஆசிரியர் இடமாற்றக் கொள்கைகளை விடுத்து இயலாதவர்களையும் இடமாற்றம் செய்கின்றனர். செல்வாக்கு மிக்கவர்களை இடமாற்றம் செய்யாது அவர்களை பெரியவர்களாக்கி அவர்கள் மற்றவர்களை அச்சுறுத்தும் பாணியில் நடந்து கொள்வதும் கல்விப் புலம் சார்ந்தவர்களுக்கு ஒவ்வாத காரியமாகும்.- எனத் தெரிவித்துள்ளது. (ந-14)

> தங்களது நடவடிக்கைகளுக்கு ஒத்துப் போகாத அதிபர்களையும், ஆசிரியர்களையும் திட்டமிட்டுப் பழி வாங்குவதும், இட மாற்றங்களை வழங்குவதும் வட மாகாணத்தில் மலிந்து விட்டன.

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



குருநகர், ஜூன் 10

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சுவாந்தன் கமலநாதன் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சால் இந்த நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர் கைதடி அரச முதியோர் இல்லத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தராக தற்போது கடமைபுரிந்து வருகிறார். கைதடி அரச முதியோர் இல்ல ஊழியர் நலன்புரி சங்கத்தின் செயலாளராகவும் சேவையாற்றுகின்றார். இவர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவராவார். (ந-51)

# நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் அரையாண்டுக்கான ஆங்கில வருகை தரு விரிவுரையாளர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறும்.

தகுதியானவர்கள் சுயவிவரக் கோவையுடனும் கல்விச் சான்றிதழ்களுடனும் சமுகம் தருமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந)


## வீட்டுடன் கூடிய காணி, வெறும் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பிரதான வீதியில் அன்னம்மாள் கோயிலுக்கு அருகில் 03 பரப்பு காணியுடன் கூடிய மேல்மாடி வீடும், 03 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு.
வெறும் காணிக்குரிய பாதை புங்கன்குளம் வீதியுடன் இணைக்கப்பட்டுள்ளது.
தொடர்பு: 077 614 5305, 077 473 7600
(35051)(3.5.6)

## இன்றிலிருந்து 182 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்

Nation Popular Travel & Tours
Npc Enterprises
New Arokya Product
Nation Job Bank

அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களுக்கு
எமது குழும நிறுவனம் அனைத்தும் 10.06.2013 ல் இருந்து
மாற்றப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் cnnpகுழுமம்
0214920920
(C/9661)

## காணி விற்பனைக்கு

யாழ். அரசடி வீதியில் நல்லூர் கோயில் அருகில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-021 222 9157- 0757763694
(வி/8909)(3.6)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, வளன்புரம், சுவாமியார் லேனில் இரண்டரைப் பரப்பில் அமைந்துள்ள ஒன்பது அறைகளைக் கொண்ட பெரிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 695 3776
(வி/8935)(3.5.6)

## வியப்பூட்டும் விலைக்குறைப்பு

திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
சென்னை சேவை



✓ Baggage allowance 37 kgs.
✓ Complementary Meals provided
✓ Groups fares offer only over 10 passengers.

AIR-INDIA express
Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna
Tel: 021 2221878, 0777730818
(C/8933)

## வாகனம் விற்பனைக்கு/ வாடகைக்கு

Mahindra BOLERO MAXI TRUCK WP PU-xxxx இலக்கம் full body வாகனம் விற்பனைக்கு/ வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 877 7827
(38184)(3.6.11)

## வீடு வாடகைக்கு

கெருடாவில், தொண்டமனாறில் புதிய வீடு வாடகைக்கு உண்டு.
(வி/9655)(5-6-7)
தொடர்பு: 077 199 6912

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில் 2¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
T.P-077 671 3599, 077 051 7001
(35066)(3.6.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1939.11.12

மறைவு
2013.05.11

## செல்லப்பா குணசேகரம்

அன்பின் உறைவிடமே அப்பா!
இப் பூவுலகில் எம்மைத் தவிக்கவிட்டு எங்குதான் போனீரோ?
காலங்கள் கடந்தாலும் நாம் கொண்ட
கோலங்களே மாறினாலும் உம் நினைவு
எம் மனதைவிட்டு என்றுமே நீங்காது
எழுவர் நாங்கள் பாரினில் உம் புகழ் நிலைக்க
பட்டங்கள் பல பெற்று உம் பாதத்தில் சமர்ப்பிப்போம்

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

**கோட்டைக்காடு,
மல்லாகம்.** (38170)(2.6.3) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## சீவரத்தினம் தவசேகரன்



(யாழ்.கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் தவசேகரன் நேற்று முன்தினம் (08.06.2013) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - அஞ்சலிதேவி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி (உரும்பிராய்) தம்பதியரின் மருமகனும், சுபாங்கனியின் (ஆசிரியர், யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) அன்புக் கணவரும் திவாகரி (யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை), சுவர்மன் (Kids Park), கேஷாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், லம்போதரன் (கிராம சேவையாளர்- பருத்தித் துறை), இலகுமிகரன் (ஆசிரியர், யா/நுணாவில் அ.த.க. பாடசாலை), காலஞ் சென்றவர்களான பிரபாகரன், தவஜங்கரன் மற்றும் பாலதயாகரன் (ஆசிரியர், யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), பிறேமினி ஆகியோரின் சகோதரனும் தர்சினி (காணி நிர்வாக திணைக்களம், யாழ்ப்பாணம்), இராஜதீபன் (பிரான்ஸ்), சுபோஜினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் புன்னாலைக்கட்டுவனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விலங்கன் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியகாரன் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
**077 794 1834** (38166)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி விஜயம்மா சின்னத்துரை



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயம்மா சின்னத்துரை 06.06.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான நாகலிங்கம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான ஐயம்பிள்ளை- பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் (உதவி அஞ்சல் அத்தியட்சகரும், சமாதான நீதிவானும்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நேசரத்தினம் மற்றும் சபாரத்தினம், மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன் புச் சகோதரியும், நடராசா, இரத்தினம், கனகம்மா, தர்மலிங்கம், இராசதுரை, குணசிங்கம், இராணி அம்மா, இரா சாத்தி அம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.06.2013 வெள்ளிக்கிழமை புத்தூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புத்தூர் கிழக்கு,
புத்தூர்.** (38186) (10,6,3)

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## சுப்பையா சிவபாக்கியநாதன்



[B.P மொஹமட் நிறுவன முகாமையாளர் -நீர்கொழும்பு]

அராலி தெற்கு(மாதாங் கோயிலடி), வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பில் வசித்தவரும் தற்போது அராலி தெற்கு வட்டுக்கோட்டையில் வசித்து வந்தவருமான சுப்பையா சிவபாக்கியநாதன் கடந்த(06.06.2013) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-கயிலாயம் தம்பதியரின் இரண்டாவது அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், பிரதீபா (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான பிரபாகரன், கேசவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வோல்ரர் அஞ்சலோவின் (அமெரிக்கா) அன்பு மாமனாரும், துஷ்யந்தன், அஸ்வினி(அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும், பத்மநாதன் (கனடா), பேராசிரியர் நவரத்தினம்(U.K), காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகயோரின் அன்புச் சகோதரனும், சிவகாமிப்பிள்ளை(கனடா), காலஞ்சென்றவர்களான பாக்கியவதி,விச்சாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2013) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு (மாதாங் கோயிலடி), வட்டுக்கோட்டை.
021 3007306, 021 3209642 (38169)(5.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## குரங்கு கடித்து சிறுவன் காயம்

அளவெட்டி, ஜூன்10

வரணி வடக்கு பகுதி வீட்டில் வளர்த்த குரங்கு எஜமானின் பேரனை கடித்து காயப்படுத்தியது.

குரங்கினால் கடியுண்ட சிறுவன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் நடைபெற்றது.

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த யூஜீவன் அஜேய் (வயது 4) என்ற சிறுவனே காயமடைந்தார். (ஐ-36)

## வரணி மாசேரிக்கு வீதி விளக்குகள்

வரணி, ஜூன்10

வரணி வடக்கு பகுதி வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன.

சாவகச்சேரி பிரதேச சபையினரின் அனுசரணையுடன் பிரதேச மக்களின் பங்களிப்புடன் இந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-122)

## மண்சரிவைத் தடுக்க விசேட திட்டம்

பதியபெலெல்ல நகரில் மண் சரிவு அபாயத்தை தடுப்பதற்கு விசேட திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.


தேசிய கட்டட ஆய்வு நிலையத்தால் அதற்காக 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நுவரெலியா மாவட்ட செயலர் டி.பி.ஜி. குமாரசிறி சனிக்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு ஏற்பட்ட மண்சரிவின் போது பெரும் எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டனர்.

அதையடுத்தே தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் தலைமையில் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 13.12.1945 உதிர்வு 11.05.2013

*கடந்த 11.05.2013 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப தலைவர்*

## அமரர் சின்னத்தம்பி ஐயாத்துரை

*அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று முன்தினம் (08.06.2013) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன.*

*வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (10.06.2013) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவர்களது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

(38188)(10.6)

**அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில். குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## Dr. சீதாதேவி மகாதேவா (London)

மானிப்பாய் தெற்கு, மேதர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சீதாதேவி மகாதேவா 08.06.2013 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சி.முத்துக்குமாரசாமி (நில அளவையாளர், முன்னாள் தலைவர், மானிப்பாய் பட்டின சபை)-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், Dr.K. மகாதேவாவின் (London) அன்பு மனைவியும், உமா (London), உஷா (London), லவன் (London), Dr.உலா(London) ஆகியோரின் பாசமிகு தாயும், டேவிட் மோறன் (London), அன்ரினா (London), Dr. நிஷாலன் (London) ஆகியோரின் அன்பு மாமியும், அமிலா, கமலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,காலஞ்சென்றவர்களான பாலேந்திரா (முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகஸ்தர்), மகேந்திரன் (London), தெய்வேந்திரன் (நில அளவையாளர்-கொழும்பு) மற்றும் இராஜேந்திரன் (நில அளவையாளர் மானிப்பாய்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மேதர் ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.** (38185) (10,6,3)

தகவல்: **மு.இராஜேந்திரன்
(ராஜே-சகோதரன்,)**
T.P: 0776108934

## மனுவேற்பிள்ளை யேசுதாசன்

*(இளைப்பாறிய மெக்கானிக் இ.போ.ச)*



புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, பத்தமேனி தென்மூலையை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை யேசுதாசன் 08.06.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மனுவேற்பிள்ளை -திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், வில்லியம்-மொனிக்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், எலிசபெத்தின் அன்புக் கணவரும், எட்வேட் மேரியம்மா (இளைப்பாறிய ஆசிரியை), ஜேகப்ஜெயபாக்கியம் (கனடா), அன்ரனிப்பிள்ளை யோசப்பின் (பூமணி -இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பெனாட் ரவீந்திரன் (நோர்வே), ஜோசப் சாந்தராஜன் (ராஜன் டீசல் வேக்ஸ்- ஆவரங்கால்), மொறீன்சாந்தினி,மேரிலூசட் (சுமதி), மரினா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலிஸ்ரா (நோர்வே), வேனிற்றா (ஆசிரியை, சென் ஜேம்ஸ்-யாழ்), குருபரன் (சூர்யா மருந்தகம்), ஜே.ஏ. யஸ்ரின் (AITKEN SPENCE CARGO), சுரேஸ்லோரன்ஸ் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், சஸ்மிதா ஜெனிபர், கரிஸ், ஜெரோம் (நோர்வே), டினுசியா, டினோஜன், சலோமி சரண்யா, தேனுகானன், அனஸ்ரன், லலின்ரன், அமென்ரா, அசன்ரா, அன்றூ (டென்மார்க்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2013) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**அச்சு நகர்,
அச்சுவேலி.** (C/9663)(3.6.11)

தகவல்:
**வே.குருபரன்
(மருமகன்-சூர்யா மருந்தகம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார விநியோகம் வழமைக்கு திரும்பும்

**மின்சாரசபை தகவல்**



கொழும்பு,ஜூன் 10
நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட கடும் காற்றுடன் கூடிய காலநிலையால் சேதமடைந்துள்ள மின்சார கட்டமைப்பை திருத்தும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதி வலுகொண்ட மின் கம்பகள் மீண்டும் வழமை நிலைக்கு கொண்டு வரப்பட் டுள்ளது என்று மின்சார சபையின் மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கான பிரதி பொது முகாமையாளர் ஜயவி லால் மீகொட தெரிவித்தார்.

சிறியளவிலான வலுகொண்ட மின்சார கம்பிகளை திருத்தும் பணிகளே தற்போது முன் னெடுக்கப்பட்டு வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.(ச)



சீரற்ற காலநிலையை தொடர்ந்து கற்பிட்டி, இலந்தையடி பிரதேசம் கடும் கடலரிப்புக்குள்ளாகியுள்ளது.

# கட்டாயக் கல்வி வயது 16 ஆக உயர்த்த தீர்மானம்

## கிடைத்தது அமைச்சரவை அனுமதி



கொழும்பு,ஜூன் 10
கட்டாயக் கல்வி வயதை 16 வயது வரை உயர்த்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அது தொடர்பில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் முன் வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கமைய 5 வயது முதல் 14 வயது வரை என இதுவரை நிலவிய கட்டாயக் கல்வி வயதை, 5 வயதில் இருந்து 16 வயது வரையில் உயர்த்தி விடுவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கமைய கல்விக் கட்டளைச் சட்டக் கோவையின் கட்டாயக் கல்வி விதி நியமங்கள் மீளாய்வுக்கு உள்ளாகின்றன.

14 வயது கடந்ததன் பின்னர் கல்வியில் நாட்டம் கொள்ளாத பிள்ளைகள், ஒன்பதாவது தரத்தின் பின்னர் கல்வியைக் கைவிட் டுச் செல்லும் வழமையைத் தடுத்து நிறுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள் ளது.

அதன் மூலம் மாணவர் ஒருவர் நீண்ட காலத்துக்கு கல்வியை மேற்கொள்வதை உறுதிப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் பாடசாலை வரவைக் கட்டாயமாக்கும் கல்விக் குழுவை பாடசாலைக்கு மேலும் நெருக்கமான ஒரு குழுவாக நியமிப்பதற்கும் ஆராயப்பட்டு வருகிறது.

பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதைப் பரிசீலிக்கும் குழுவின் ஒருங்கிணைவை மீளாய்வு செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

இந்தச் செயற்பாடு தொடர்பாக தொகுதிகள் மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்குப் பதிலாக வலய மட்டத்தில் அதிகாரம் பெற்ற அதிகாரியொருவரை நியமிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ச-22)

இன்று 10.06.2013 திங்கட்கிழமை
50வது பிறந்த நாளும்
10வது திருமண நாளும்
கொண்டாடும் சுவிஸில்
வசிக்கும்
திரு. திருமதி
இந்திரராஜா
லலிதா
இவர்கள் இறைவன்
அருளுடன் என்றும்
இனிதே பல்லாண்டு
காலம் நலமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
நாவற்குழி
கிழக்கு,
கைதடி.

# இலங்கையர் குற்றமிழைத்தால் அரசு பொறுப்பேற்க மாட்டாது

**அமைச்சர் டிலான் பெரேரா கூறுகிறார்**



கொழும்பு,ஜூன் 10
வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அந்த நாடுகளில் புரியும் குற்றச் செயல்களுக்கு இலங்கை அரசு ஒருபோதும் பொறுப்பேற்கமாட்டாது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அபுதாபியில் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிபுரியச் சென்று குற்றச் செயல்களில் கைதாகி தண்டனை பெறும் தொழிலாளர்களின் குடும்பங்களிடமிருந்து தினமும் கடிதங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

எனினும் அவை தொடர்பில் எம்மால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்க முடியாது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் அங்கு பிரச்சினைகளை எதிர் நோக்கினால் அவர்களுக்கு உதவுமாறு அங்குள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.-என்றார்.
(ச-ரி)

பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின்
19ஆம் ஆண்டு நினைவு வைபவம்-2013
**காலம்**: 11.06.2013 (செவ்வாய்க்கிழமை)
**நேரம்**: மு.ப.10.00மணி
**இடம்**: யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவு மண்டபம்.
**தலைவர்:**
திரு. ச.தில்லையம்பலம்
**நினைவுப் பேருரை:**
Dr(Eng)S.S.சிவகுமார்,
(சிரேஸ்ட விரிவுரையாளர்,பொறியியல் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.)
**விடயம்:**
'நீர்வளம் காத்து நிலவளம் பெருக்கி உற்பத்தித் திறனைக் கூட்டி உணவில் தன்னிறைவு காணல்'
**நினைவுப் பரிசில் பெறுவோர்:**
அ) 2012ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரத்தில் கணிதத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற மாணவன்.
செல்வன் பாலகோபன் கபிலன் (ஹாட்லிக் கல்லூரி)
ஆ) 2012ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரத்தில் கணிதத்துறையில் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற மாணவன்.
செல்வன் திருவாதவூரர் கோபிராஜ்
பழைய மாணவர் சங்கம்
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கந்தர் ஞானசீலன் (அதிபர் - புளியம் பொக்கனை நாகேஸ்வரா வித்தியாசாலை)
அவர்கள் அதிபர் தரம் III பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.



வாழ்த்துவோர்:-
திருமதி சு.விஜயகுமார் (ஆசிரியை- கிளி/சுண்ணாவில் அ.த.க.பாடசாலை - பூநகரி)
திருமதி ந.சரவணன் (ஆசிரியை - கிளி/ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாசாலை - பூநகரி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
தம்பிராசா சிறிசெல்வம்
[B.A(Hons) M.A. Dip.Edu., J.P]



எமது பாடசாலை ஆசிரியரான தம்பிராசா சிறிசெல்வம் 05.06.2013 இல் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் P.சிவகுமார் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்ற தனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அவர் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற வாழ்த்துகின்றோம்.
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்,வேலணை.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப் பரிசோதனைக்குரிய வாகனங்கள் சுதந்திரமாக வீதியில்

## வாகன உரிமையாளர்கள் விசனம்

வலி.வடக்கு, ஜூன் 10

வாகனப் புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய வாகனங்கள் சுதந்திரமாக வீதியில் செல்ல நல்ல நிலையில் உள்ள வாகனங்களை புகைப் பரிசோதனைக்கு உள்ளாக்குவதையிட்டு வாகன உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

> “இந்த மாதம் தொடக்கம் வட மாகாணத்தில் உள்ள வாகனங்களும் புகைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் மற்றும் வடமா காணப் போக்குவரத்துத் திணைக் களத்தாலும் அறி விக்கப்பட்டது.

வீதியில் செல்லும் வாகனங்கள் புகையை வெளியேற்றுவதால் சுற்றுச்சூழல் பாதிப்படைவதுடன் பொது மக்களின் சுகாதாரமும் பாதிப்படைகின்றது.

இந்த மாதம் தொடக்கம் வட மாகாணத்தில் உள்ள வாகனங்களும் புகைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் மற்றும் வடமா காணப் போக்குவரத்துத் திணைக் களத்தாலும் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே நடப்பாண்டுக்கான வரி அனுமதிப்பத்திரம் தனியாருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை– வீதிகளில் படையினரின் ரக் வாகனங்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மற்றும் அரச திணைக்களங்களின் வாகனங்களும் பெரிய ளவில் புகையை வெளியேற்றிய நிலையிலேயே வீதிகளில் வலம் வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே புகைப் பரிசோதனையை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய வாகனங்களைக் கைவிட்டு தனியாரால் நன்கு பராமரிப்பில் உள்ள வாகனங்களை புகைப் பரிசோதனைக்கு உள்ளாக்குவதன் மூலம் சுற்றுச் சூழலையும், சுகாதாரத்தையும் பாதுகாக்க முடியுமா என தனியார் வாகனங்களின் உரிமையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (வ-86)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும்

# மோட்டார் கார்களுக்கு புதிய வரி முறைமை



கொழும்பு, ஜூன் 10

வெளிநாடுகளில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் கார்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும்போது அவற்றுக்கு வரிகளை அறவிடும் புதிய முறைமை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது.

அதனை இலங்கை சுங்கத் திணைக்களமும் வாகன இறக்குமதியாளர்கள் சங்கமும் ஒருங்கிணைந்து தயாரித்துள்ளன.

இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்ட மோட்டார் கார்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பெறுமதி குறைவடைதல் முறைமையின் மீது வரிகளை அறவிடும் முறைமை ரத்துச் செய்யப்பட்டுள்ளதையடுத்தே இந்தப் புதிய முறைமை கட்டமைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரிஞ்ஞகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கொள்வனவு செய்யப்பட்ட விலைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த முறைமைக்கு அமைய, இறக்குமதியாளர்கள் குறைந்த விலை மட்டமொன்றைக் காட்டுவதனால் சிக் கல்கள் பலவும் தலை தூக்கியுள்ளன.

இந்தப் புதிய முறைமைக் கட்டமைக்கப்பட்டதால் அந்தச் சிக்கல்களுக்கு தீர்வுகள் கிடைத்துள்ளன.

அது மிக இலகுவானதொரு வரி அறவீட்டு முறைமையாகும்.- என்றார். (ச-22)



## கண்ணீர் அஞ்சலி

### சீவரத்தினம் தவசேகரன்

(யாழ். கோப்பாய் தொழில்நுட்பக் கல்லூரி, உத்தியோகத்தர்)

கடந்த (08.06.2013) சனிக்கிழமை கொழும்பில் காலமான என் உடன்பிறவா அன்புச் சகோதரன் சீவரத்தினம் தவசேகரன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

உடன்பிறவா சகோதரன்
(39197) **வி.வன்னியநாதன் (வன்னி) ஜேர்மனி (புன்னாலைக்கட்டுவன்)**

# எந்தவொரு மத்ரஸாக்களிலும் அடிப்படைவாதம் போதிக்கவில்லை

## ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

எந்தவொரு மத்ரஸாக்களிலும் அடிப்படை வாதம் போதிக்கப்படவில்லை.

மார்க்க ரீதியான சிந்தனைகளைக் கொண்ட நபர்களை உருவாக்குவதே இஸ்லாமியக் கல்வியின் அடிப்படை இலக்கு.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட அமைப்பாளர் ஷஹாப்தீன் ஹாஜியார் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உண்மையைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் இஸ்லாமியக் கல்வி முறைக்கு எதிராக கூச்சலிடுவது கவலை அளிக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில் சில அரபு மதரஸாக்களை நடத்திச் செல்ல நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெறும் நோக்கில் அவற்றை நாடாளுமன்ற சட்ட வரைவு மூலம் ஒருங்கிணைக்க பிரேரணை ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை அடிப்படையாகக் கொண்டு மதரஸாக்களில் அடிப்படை வாதம் போதிக்கப்படுகின்றது என்று கூறுவது தவறாகும்.

இஸ்லாத்துக்கும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய முஸ்லிம்களுக்கு எதிராக பேசித் [illegible] சேனாவின் தேரர்கள் ஒரு விடயத்தை பகிரங்கமாகப் பேசமுன், அத னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். (ச-ரி)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவியும் தற்போது கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றிய திருமதி

### மதிவதனி பாஸ்கரன்

அவர்களின் மறைவையொட்டி பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(38190)

**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்**
**யா/ நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை.**



## கண்ணீர் அஞ்சலி

### சீவரத்தினம் தவசேகரன்

(மின்வியல்துறை உத்தியோகத்தர், யாழ். தொழில்நுட்பக்கல்லூரி)

எம்முடன் எந்நேரமும் இருந்து உதவிகள் பல செய்த நல்லதொரு உள்ளம் இன்று அமரத்துவம் அடைந்துவிட்டது. இது அவரது குடும்பத்திற்கும் எமக்கும் எமைச்சார்ந்த எல்லோருக்கும் மாபெரும் இழப்பாகும். இழப்பைத் தாங்க முடியாதிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(38196)

**பேராசிரியர் ந.யோகராஜன், பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்லூரி.**
**வைத்தியர் ஜெயலன், சுஜீவா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்கள்



## சுப்பையா பொன்னுத்துரை

புத்தூர் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த சுப்பையா பொன்னுத்துரை நேற்று 09.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - லட்சுமி தம்பதியரின் மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் புவனேஸ்வரி, சாந்தினி (கனடா), விஜிதா, மதிவதனன், பாமினி (ஆசிரியர், கிளிநொச்சி புன்னைநீராவி அ.த.க. பாடசாலை), கிருஷ்ணவதனன், கிருஷ்ணமோகன் (லண்டன்), பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமநாதன், செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.06.2013 திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் புத்தூர் கிழக்கு, இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு, புத்தூர். (38199)

தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பி ஐயா விநாயகமூர்த்தி

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 2ம் வட்டாரம் கோம்பாவில் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா விநாயகமூர்த்தி நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - தனபாக்கியலெட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான முருகேசு அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் சந்திரவதனி, தவராஜசிங்கம், விக்கினராசா, மோகன், சுபாஸ் (புங்குடுதீவு மகிழன் பல்பொருள் வாணிபம்), ஜேவதனி, விஜயலெட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாதேவி, காலஞ்சென்றவர்களான சத்தியமூர்த்தி ஆனந்தமூர்த்தி, சுந்தரமூர்த்தி மற்றும் கிருபானந்தமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, நல்லைவாசம், மணிமேகலை, கண்ணகி ஆகியோரின் சகோதரரும் கோமளம், பூமணி, வில்வம், செல்வரத்தினம் வில்வரத்தினம், காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும் குணசீலன், புவனராணி, தேவமலர், சுமதி, பிரதீபா, கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.06.2013 திங்கட்கிழமை 2ம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பி.ப. 3 மணிக்கு தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு. (38200)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருச்செல்வம் செபஸ்ரியாம்பிள்ளை (மரி)



யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் செபஸ்ரியாம்பிள்ளை நேற்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. திருச்செல்வம் றோசம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. லோப்பையா - லூர்த்தம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற திருமதி.மரியம்மாவின் (மல்லிப்பூ) அன்புக் கணவரும் அல்பேட் அன்ரனி, காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, மற்றில்டா (பூமணி), இராசமணி, சின்னமலர், அருள்நாயகம் ஆகியோரின் சகோதரரும் ஸ்ரனிஸ்லஸ், றீற்றா, கிறிஸ்ரீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி.ஸ்புரனிஸ்லஸ் (நேசம்), காலஞ்சென்ற அன்ரன் ராஜகுமார், அல்போன்ஸ் ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனும் றொஷானி, சஞ்சீவன், ஜெனிவிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதி திருப்பலி நாளை 11.06.2013 செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு பரி.யோவான் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நடல்லடக்கஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

831, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (38198)

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அணிகளுக்கிடையான 17 வயதுப் பிரிவு கிரிக்கெட்

# சென்.பற்றிக்ஸிடம் வீழ்ந்தது யாழ்ப்பாணம் இந்து

குருநகர், ஜுன் 10
அகில இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை 56 ஓட்டங்களால் வீழ்த்தியது.

கடந்தவாரம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதையடுத்து களமிறங்கிய சென்.பற்றிக் கல்லூரி அணி 46.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் பிறாங் கிளின்ரன் 68 ஓட்டங்களையும், ஜெரிக் ஸன் 20 ஓட்டங்களையும், வினுசாந்த் ஆட்டமிழக் காமல் 23 ஓட்டங்களையும், கொலின்ஸ் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 18 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சார்பில், வைகரன் 4 இலக்குகளையும், துவாரகன் 3 இலக்குகளையும், ஜிதுசரன் 2இலக்குகளையும், வலுந்தி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

188 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியின் இலக்குகள் மளமளவெனச் சரிந்தன. 40.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களை மட்டுமே பெற்றது யாழ்.இந்துக் கல்லூரி அணி. 56 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.

யாழ்.இந்துக் கல்லூரி அணியில் துடுப்பாட்டத்தில் கஜன் 27 ஓட்டங்களையும், பார்த்தீபன் 24 ஓட்டங்களையும், டானியல் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.



சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பாகப் பந்துவீச்சில் பிறாங் கிளின்ரன் 4 இலக்குகளையும், வினுசாந்த் 3 இலக்குகளையும், கொலின்ஸ் 2 இலக்குகளையும், அகீபன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.(ற-51)

## 17 வயதுப் பிரிவு ஹொக்கிப் போட்டிகள் இன்று

வலி.வடக்கு, ஜுன் 10
இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளை குறிப்பிட்ட நேரத்துக்கு மைதானத்துக்கு வருமாறு போட்டி இணைப்பாளர் பிரான்ஸிஸ் சந்திரன் கேட்டுள்ளார்.

போட்டிகளில் வெற்றி பெறும் பாடசாலை அணிகள் இலங்கைப் பாடசாலை ஹொக்கிச் சங்கத்தால் தேசிய மட்டத்தில் நடத்தப்படவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
(ற-86)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 6ஆவது பெருவிளையாட்டுப் போட்டிகளில் 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான சதுரங்கத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற வவுனியா சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை அணி பொறுப்பாசிரியர்களுடன்.
(ற-23)

## நெடுந்தீவு விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜுன்
USAID நிறுவனத்தின் மூலம் இளைஞர் சேவைகள் மன்றத்தால் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவை அலுவலர் ஞா.அமலஜான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன், பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டமை இதுவே முதன் முறையாகும். (ற-23)

# வடமாகாணப் பாடசாலை கராத்தே போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜுன் 10
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கராத்தே போட்டிகளில், 15, 17, 19 வயதுப் பிரிவுகளின் காட்டா, குமித்தே போட்டிகளில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளின் விவரம்:

**15வ.பி. ஆண்கள் (காட்டா தனிநபர்)**
முதலாமிடம் – ஏ.தனுசன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)
இரண்டாமிடம் – எம்.முரளி (சென். அன்ரனீஸ் கல்லூரி)
மூன்றாமிடம் – எஸ் விதுர்சன் (வவுனியா சி.சி.ரி.எம்.வி)

**17வ.பி. ஆண்கள்(காட்டா தனிநபர்)**
முதலாமிடம் – இ.ஆழிக்குமரன் (வேலாயுதம் மகா வித்தியாலயம்)
இரண்டாமிடம் ஏ.துஷ்யந்தன்(சென்.ஜோன்ஸ் கல்லூரி)
மூன்றாமிடம் எம்.றினாஸ் (வவுனியா முஸ்லிம் ம.வி.)

**19 வ.பி. ஆண்கள் (காட்டா தனிநபர்)**
முதலாமிடம் – எம் சுகிர்தன். (சென்.அன்ரனிஸ் கல்லூரி)
இரண்டாமிடம் – ஏ.இளங்கீதன் (சென். ஜோன்ஸ் கல்லூரி)
மூன்றாமிடம் – எம்.ஜனுசாந் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**15 வ.பி. பெண்கள் (காட்டா தனிநபர்)**
முதலாமிடம் ஏஸ்.சிந்துஜா (பரு. மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)
இரண்டாமிடம் பி.துவாரகன் (தும்பளை சிவபிரகாச வித்தி.)
மூன்றாமிடம் கே.தமிழ்நிலா (கிளி. மகா வித்தியாலம்)

**17 வ.பி. பெண்கள் (காட்டா தனிநபர்)**
முதலாமிடம் – என்.சர்மிளா (கிளி. இந்து கல்லூரி)
இரண்டாமிடம் – கே.கஜானி (கைதடி நவீல்ட் பாடசாலை)
மூன்றாமிடம் – எஸ். சிவாஜினி ( கைதடி நவீல்ட் பாடசாலை)

**19 வ.பி. பெண்கள் (காட்டா பிரிவு)**
முதலாமிடம் – ஆர்.நிதுஜா (கனகபுரம் மகா வித்தி.)
இரண்டாமிடம் – கே.கோகிலவாணி (முல்லை. மகா வித்தி.)
மூன்றாமிடம் – பி. பிரதீபா (முல்லை. மகா வித்தி.)

**15 வ.பி. ஆண்கள் (காட்டா குழு)**
முதலாமிடம் – (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)
இரண்டாமிடம் – (சென். ஜோன்ஸ் கல்லூரி)
மூன்றாமிடம் – (கிளிநொச்சி ம.வி.)

**17 வ.பி. ஆண்கள் (காட்டா குழு)**
முதலாமிடம் – (முல்லைத்தீவு ம.வி.)
இரண்டாமிடம் – (சென். பற்றிக்ஸ் கல்லூரி)
மூன்றாமிடம் – (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

**19 வ.பி. ஆண்கள் (காட்டா குழு)**
முதலாமிடம் – (சென். ஜோன்ஸ் கல்லூரி)
இரண்டாமிடம் – (சென். ஜோன்ஸ் கல்லூரி)
மூன்றாமிடம் – (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

**15 வ.பி. ஆண்கள் பிரிவு (குமித்தே தனிநபர்)**
முதலாமிடம் – ஆர்.றொசான் (சென். புற்றிக்ஸ் கல்லூரி).
இரண்டாமிடம் – இ.கோசம் (நாச்சிக்குடா ஜீ.ரி.எம்.எஸ்)
மூன்றாமிடம் – ஏ.தனுசன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)

**17 வ.பி. ஆண்கள் பிரிவு (குமித்தே தனிநபர்)**
முதலாமிடம் – இ.ஆழிக்குமரன் (வேலாயுதம் ம.வி.)
இரண்டாமிடம் – என்.நிசாந்த் (நாச்சிக்குடா ஜி.ரி.எம்.எஸ்)
மூன்றாமிடம் – ஏஸ்.பிரதீபன் (முத்தையன்கட்டு அ.த.க.பா.)

**19 வ.பி. ஆண்கள் பிரிவு (குமித்தே தனிநபர்)**
முதலாமிடம் – பி.இராமகிருஸ்ணன் (ஹாட்லிக் கல்லூரி)
இரண்டாமிடம் – எம் பி.ஜோன்ஸ்ன். (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)
மூன்றாமிடம் – ஆர்.பிரசாந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**15 வ.பி. பெண்கள் (குமித்தே தனி நபர்)**
முதலாமிடம் – பி.துவாரகா (தும்பளை சிவபிரகாசம்)
இரண்டாமிடம் – எஸ்.பிருத்திகா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)
மூன்றாமிடம் எஸ்.சிந்துஜா (மெதடிஸ்த பெண்கள் உ.பா.)


**17 வ.பி. பெண்கள் பிரிவு (குமித்தே தனிநபர்)**
முதலாமிடம் ஆர்.மீரா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)
இரண்டாமிடம் எஸ்.சர்மிளா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)
மூன்றாமிடம் எஸ்.மதுரிகா (கைதடி விக்கினேஸ்வரா வித்தி.)

**19 வ.பி. பெண்கள் (குமித்தே தனிநபர்)**
முதலாமிடம் – ஆர்.நிதுஜா (கனகபுரம் ம.வி.)
இரண்டாமிடம் – கே.கோகிலவாணி (முல்லைத்தீவு ம.வி.)
மூன்றாமிடம் எம்.சுரேஸ்கா (கிளி. இந்துக் கல்லூரி)
(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் வென்றார் செரீனா

பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றார்.
பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் செரீனா வில்லிம்ஸும், மரியா ஷரபோவாவும் மோதிக் கொண்டனர்.
அதில் 6:4, 6:4 என்ற நேர் செற்களில் நடப்புச் சம்பியனான ரஷ்யாவின் ஷரபோவாவை வீழ்த்தினார் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்.
2002ஆம் ஆண்டில் முதல் முறையாக பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸில் பட்டம் வென்ற செரீனா, அதன் பிறகு 11 ஆண்டுகள் கழித்து தற்போது 2ஆவது முறையாக வாகை சூடியுள்ளார்.
வெற்றி குறித்து செரீனா தெரிவிக்கையில்,



''இந்த ஆட்டம் கடினமானதாக இருந்தது. 11 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கு பட்டம் வென்றது மகிழ்ச்சியளிக்கிறது. அடுத்த ஆண்டும் இங்கு வந்து விளையாட விரும்புகிறேன். இங்குள்ள ரசிகர்கள் எப்போதுமே நல்ல வரவேற்பு கொடுப்பார்கள். அதனால் அடுத்த முறையும் இங்கு பட்டம் வெல்ல விரும்புகிறேன்'' என்று தெரிவித்தார்.
கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் செரீனாவுக்கு இது 16ஆவது பட்டமாகும். (ற)

## ஷில்பாவிடம் மன்னிப்பு கேட்டார் குந்த்ரா

சூதாட்ட சர்ச்சையில் சிக்கியமைக்காக மனைவி ஷில்பா ஷெட்டியிடம் மன்னிப்பு கோரியுள்ளார் கணவர் ராஜ் குந்த்ரா.
ஐ.பி.எல். போட்டிகளில் நடந்த சூதாட்டம் தொடர்பாக ராஜஸ்தான் அணியின் உரிமையாளர் ராஜ் குந்த்ராவிடம் பொலிஸார் இருநாள்கள் விசாரணை நடத்தினர்.
அதில் சூதாட்டத்தில் ஈடுபட்டமையை ராஜ் குந்த்ரா ஒப்புக் கொண்ட போதிலும், போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் டில்லி பொலிஸார் அவரைக் கைது செய்யவில்லை.
அதேவேளை, ராஜஸ்தான் அணியின் உரிமையாளர் பொறுப்பில் இருந்து, ராஜ் குந்த்ராவை நீக்கும் முயற்சிகள் திரைமறைவில் நடைபெற்று வருகின்றன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தநிலையில் நேற்றுமுன்தினம் ஷில்பா ஷெட்டிக்கு 38ஆவது பிறந்தநாள் விழா. சூதாட்ட விவகாரங்கள் காரணமாக மனவருத்தத்தில் உள்ளதால் பிறந்தநாள் கொண்டாட்டங்களை தவிர்த்தார் ஷில்பா.
ஷில்பாவுக்கு ராஜ் குந்த்ரா அனுப்பியுள்ள பிறந்த நாள் வாழ்த்தில்
''எனது அழகான மனைவிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள். கடந்த சில நாள்கள் நடந்த சம்பவங்களுக்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். உண்மை விரைவில் வெளியாகும்'' என தெரிவித்துள்ளார்.
(ற)

# ராம்தினுக்குத் தடை வருமா?



சம்பியன்ஸ் கிண்ண போட்டியிலிருந்து மேற்கிந்திய தீவுகள் அணியின் விக்கெட் காப்பாளர் ராம்தினுக்கு தடை விதிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
லண்டனில் நடந்த சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான லீக் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 2 இலக்குகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது.
அந்தப் போட்டியில் 9ஆவது பந்துப்பரிமாற்றத்தை கீமர் ரோச் வீசினார். அந்த பந்துப்பரிமாற்றத்தின் கடைசிப் பந்தை பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா அடிக்க, அதனை பிடித்த மேற்கிந்திய தீவுகள் அணியின் விக்கெட் காப்பாளர் ராம்தின் உடனடியாக நழுவவிட்டார்.
ஆனாலும் முறையீடு செய்யப்பட்டதால் ஆஸ்திரேலிய நடுவர் ஸ்டீவ் டேவிசும் ஆட்டமிழப்பு வழங்கினார். ஆனால் மற்றைய நடுவர் நைஜல் லாங் சந்தேகம் எழுப்ப, மூன்றாவது நடுவராகக் கடமையாற்றிய டோனி ஹில்லின் முடிவுக்கு விடப்பட்டது. பின்னர் பந்தை ராம்தின்



நழுவவிட்டது தெரிய வர மிஸ்பா தப்பினார்.
பிடியைக் கோட்டை விட்ட ராம்தின், முறையீடு செய்யாது விட்டிருக்க வேண்டும். மாறாக ஆட்டமிழப்புக் கோரியதால் சிக்கலில் மாட்டியுள்ளார்.
ராம்தின் விளையாட்டுஉணர்வு இல்லாமல் நடந்து கொண்டுள்ளார் என்று நடுவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அதையடுத்து அவர் மீது ஐ.சி.சி. 2.2.11 விதிமுறையின் படி குற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து இன்று விசாரணை நடக்கவுள்ளது. இதில் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், போட்டி சம்பளத்தில் இருந்து 50 முதல் 100 சதவீத அபராதம் அல்லது இரண்டு போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.(ற)



# இறுதி வரை போராடியும் தோற்றது இலங்கை

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மினி உலகக் கிண்ணப் போட்டியில் இறுதி வரை போராடிய போதும் தோல்வியைத் தழுவியது இலங்கை அணி.
லண்டன் கார்டிப் மைதானத்தில் நேற்று பகலிரவாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இலங்கை அணியும், நியூசிலாந்து அணியும் மோதிக் கொண்டன.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமான இந்த மைதானத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக குசல் பெரேராவும் திலகரத்ன டில்சானும் களம் புகுந்தனர்.
முதல் பந்துப் பரிமாற்றத்தில் முதல் பந்திலேயே ஓட்டம் எதனையும் பெறாதநிலையில் பெரேராவை வெளியேற்றினார் மில்ஸ்.
அடுத்து டில்சானுடன் ஜோடி சேர்ந்த சங்ககார டெஸ்ட் ஆட்டம் போன்று மெதுமெதுவாக ஓட்டங்களைச் சேர்த்தார். இந்த நிலையில் டில்சான் 20 ஓட்டங்களுடன் மக்லிங்ஹன் பந்து வீச்சீல் 'போல்ட்' செய்யப்பட்டு ஆட்டமிழந்து



வெளியேறினார். இதன் பின்னர் வந்த இலங்கை அணி வீரர்கள் பொறுப்புணர்ச்சி அற்ற வகையில் ஆடியதால் மளமளவென சரிக்கப்பட்டன இலக்குகள்.
ஒரு முனையில் இலக்குகள் சீரான இடைவெளியில் சரிக்கப்பட்டாலும் மறு முனையில் சங்ககார தனியாகப் போராடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.
பொறுப்புடன் ஆடிஅரைச்சதம் கடந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 135 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 68 ஓட்டங்களுடன் வெளியேறினார் சங்ககார. இறுதியில் 37.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து வெறும் 138 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது இலங்கை அணி. டில்சான் (20), சங்ககார(68) திஸரா பெரேரா(15), ஆகியோரைத் தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறாது ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.
பந்து வீச்சில் மக்லிங்ஹன் 4 இலக்குகளையும், மில்ஸ், மக்லம் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
இதனை அடுத்து 139 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் சிம்ம சொப்பனமான திகழ்ந்தார்கள்.
நியூசிலாந்து அணியின் இலக்குகள் ஒரு சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டாலும் குப்தில் (25) நதன் மக்லம் (32) ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் 36.3 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் ஒரு இலக்கினால் இலங்கை அணியை போராடித் தோற்கடித்தது நியூசிலாந்து.
அவ்வணியில் வில்லியம்ஷன் (16), பிரண்டம் மக்லம் (18), ரிம்சௌதி(13) ஆகியோரும் அணியின் வெற்றிக்காக தமது பங்களிப்பை வழங்கினர்.
இலங்கையின் பந்து வீச்சுச் சார்பாக லசித் மலிங்க 4 இலக்குகளையும், ஏரங்க 2 இலங்குகளையும், ஹேரத், டில்சான் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.
போட்டியின் ஆட்டநாயகனாக நதன் மக்லம் தெரிவு செய்யப்பட்டார்.
(400)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சிறுமியைக் கடத்திச் சென்று வல்லையில் வீசிய கும்பல்

பொத்தியபடி ஓட்டோவில் கொண்டு சென்றனர். அந்த ஓட்டோ வல்லைச் சந்தியூடாக சென்ற போது அங்கு பொலிஸார் நின்றிருந்தனர்.

பொலிஸாரைக் கண்டவுடன் என்னைக் கடத்தியவர்கள் கழுத்தில் கத்தியை வைத்தபடி 'சத்தமிட்டால் குத்திக் கொலை செய்து விடுவோம்' என்று மிரட்டினர். பயத்தால் நான் சத்தமிடவில்லை. பொலிஸாரும் ஓட்டோவை மறிக்கவோ, சோதனையிடவோ இல்லை. அவர்களையும் தாண்டி வல்லை வெளியூடாக நெடுந்தூரம் கொண்டு திரிந்தார்கள். எனது சங்கிலி,மோதிரம், தோடுகள் என சுமார் 3 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளைக் கழற்றி எடுத்து விட்டனர். எனது தலைமுடியில் ஒருபகுதியையும் வெட்டினார்கள்.

நகைகளைக் கழற்றிய பின்னர் மீண்டும் வல்லை வெளியில் யாருமில்லாத வேளை ஓடிக்கொண்டிருந்த ஓட்டோவில்லிருந்து என்னை தூக்கி வெளியே எறிந்து விட்டுச் சென்று விட்டனர்.

அதன் பின்னர் நெடுந்தூரம் நடந்து சென்றபோது வீடு ஒன்று தென்பட்டது. அந்த வீட்டில் உள்ளவர்கள் அருகில் உள்ள கோயிலுக்கு வருபவர்கள். அதனால் என்னை அவர்களுக்கு தெரிந்திருந்தது. அவர்களின் உதவியுடன் பெற்றோருக்கு சம்பவம் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன்'' - என்றார்.

அச்சுவேலியில் வசிக்கும் பெண் ஒருவரும் அவருடன் வந்த 2 ஆண்களுமே இணைந்து தன்னைக் கடத்தினர் என்றும் குறித்த பெண் தமக்கு அருகில் உள்ள கோயிலுக்கு வந்து செல்பவர் என்றும் சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ங-4)

### 13 ஐ ஒழிக்க இந்தியா அனுமதிக்கக் கூடாது

கிறது. இதனை இந்தியா ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவே இலங்கையில் 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவே உறுதியளிக்க வேண்டும்.

இலங்கையில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்குள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க பல்வேறு போராட்டங்கள் மற்றும் பேரணி நடத்த சிங்கள கடும்போக்கு அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.

இதற்கிடையே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிப்பதற்கு ஆவணங்களை தேடிவருகிறார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தால் இணைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஜே.வி.பி. என்ற கட்சியினால் தாக்கதல் செய்யப்பட்ட வழக்கின் காரணமாக 2007 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பிரிக்கப்பட்டுவிட்டது. இதனால் ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் பின்னடைவு ஏற்பட்டது. தமிழ் பேசும் மக்களின் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைப்பது அவசியம். 13 ஆவது சட்ட திருத்தப்படி அங்கு தேர்ந்தெடுக்கப்படும் சபை மூலம் பொலிஸ் உள்ளிட்ட அதிகாரம் ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்கும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும் அதன் மூலம் உருவான 13 ஆவது திருத்தத்தையும் நடைமுறைப்படுத்த நேரடியாக இந்திய தலையிட வேண்டும் - என்றுள்ளது. (ங-சி)

**மணல் மண் வேண்டுமா?**
★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.
4½ டிரக்டர் 20,500/- (38019) (10.6)
தொடர்பு:- ராம் 072 63 78 546

**தேவை**
நெல்லியடி பிரதான வீதியில் அமைந்துள்ள நியூமெடிக்கல் சென்ரருக்கு படித்த (குறைந்தது O/L படித்த) ஆண், பெண் உதவியாளர்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் 12.06.2013க்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.
Dr.K. இராதாகிருஸ்ணன்,
நியூமெடிக்கல் சென்ரர், நெல்லியடி.
தொடர்பு:- 021 321 0750 (37603)

**SPOKEN ENGLISH**
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
பதிவு செய்ய வேண்டிய இறுதித் திகதி 16.06.2013
பிரிவு : 01 காலை 8.00 - 10.00 பிரிவு : 02 மு.ப 10.00 - 12.00
பிரிவு : 03 பி.ப 1.00 - 03.00 பிரிவு : 04 மாலை 3.00 - 5.00
வார நாள் பயிற்சி நெறி : 17.06.2013 (திங்கள், புதன்)
பிரிவு : 01 10.00 - 12.00 பிரிவு : 02 3.00 - 5.00
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ் தொ.பே : 077 621 4567

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழிஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். இன்றே பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்பு: விரைவில் ஆரம்பமாகிறது 2pm-4pm(சனி, ஞாயிறு)
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

யாழ் பேருந்து நிலையத்திற்கு வடக்குப் பக்கமாக...
திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை

Printing House
enjoy the quality, admire the value
உங்கள் எண்ணங்களுக்கேற்ற வடிவங்களில் அழைப்பிதழ்களை செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.
Wedding Cards Showroom
பிறிண்டிங் ஹவுஸ்
021 221 9929, 077 2200148
165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**இரட்டை தகைமைகள்**
ஒரே முயற்சியில்.... ஒரே செலவில்....


புதிய பிரிவு ஆரம்பம் 23.06.2013
அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்
HND
வேலை வாய்ப்புக்கள், உள்நாட்டு,வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்கள்
Civil Engineering + Quantity Surveying | Computing + BCS | Business Management + Marketing / HRM
சர்வதேச தரம் வாய்ந்த இரு பட்டத் தகைமைகளை ஒரே முயற்சியில்,ஒரே செலவில் உங்களுக்கு விரும்பிய துறையில் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பினை IIS வழங்குகின்றது. பொறியியல் பிரிவில் தங்களை இணைத்துக் கொள்ளும் ஒவ்வொரு மாணவரும் கணிய அளவையியல் (Quantity Surveying) கற்கை நெறியையும் HND in COMPUTING (System Development) கற்கை நெறியில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் கணனிப் பட்டய நிறுவனமான BCS இன் கற்கை நெறிகளையும், Business Management கற்கை நெறியில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் Marketing அல்லது HRM கற்கை நெறியையும் முற்றிலும் இலவசமாக கற்றுக் கொள்ள முடியும்.
கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iis.edu.lk
மேலதிக விபரங்களுக்கு 021 4 900 900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.